கன்னியாகுமரி - நாகர்கோயில்
சிறப்பிதழ்


KALKI 26.12.93

ரூ. 3.00

கல்கி



சின்னதாக ஒரு கிராமம்;
15 கோடி வியாபாரம்!



"குமரி மாவட்ட
மக்களின்
மனப்பான்மை மாற
வேண்டும்!"
- அமைச்சர் லாரன்ஸ் பேட்டி

பெண்களுக்கு முழுசுதந்திரம் ப்ரீதியினாலே

எல்லா விதமான சமையலுக்கும், கடினமானதையும் அரைக்கவோ, பொடி செய்யவோ, அதி நவீன **550 வாட் மோட்டர், 3 ஸ்டெயன்லஸ் ஸ்டீல் ஜாடிகள்** கொண்டது ப்ரீதி. தோசை மாவு முதல் கொத்துக்கறி வரை அனைத்துக்கும் சிறந்தது ப்ரீதி.





550 வாட் 30 நிமிடம்

சமையல் தவிர மற்ற வேலைகளையும் கவனிக்க நேரமளிக்கிறது ப்ரீதி.

Preethi XL7

இல்லத்தரசியின் இனிய தோழி

2 வருட உத்திரவாதம் ஆயுட்கால இலவச சர்வீஸ்

TAS Vision ● 275

பிரதமராவோம் என்று நம்புகிறவர்!



உ.பியில் முலாயம் சிங் யாதவுக்குத் தமது கட்சியின் முழு ஒத்துழைப்பை அளித்துள்ள கன்ஷிராம் பற்றி...

"இங்கே பிராமணர்களோ, தாக்குர்களோ, ராஜபுத்திரர்களோ, பனியாக்களோ இருந்தால், தயவுசெய்து எழுந்து போய் விடுங்கள். ஏனென்றால் நான் சொல்லப் போவது அவர்களுக்குப் பிடிக்காது." - பகுஜன் சமாஜ கட்சித் தலைவர் கன்ஷிராம் தேர்தல் பொதுக் கூட்டங்களில் இப்படித்தான் வெளிப்படையாகப் பேசினார். உயர்சாதியினர் என்று சொல்லிக் கொள்ளுபவர் எல்லாம் பல்லைக் கடித்தனர். ஆனால் தலித் மக்கள் மகிழ்ச்சியில் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள்.

கன்ஷிராமுக்கு 60 வயதாகிறது. பிரம்மசாரி. பஞ்சாபிலுள்ள ரோபரில், ராம்தாசியா சீக்கியர் குலத்தில் பிறந்தவர். இளம் வயதிலேயே, தாடி வளர்த்துக் கொள்ளவும், தலைப்பாகை கட்டிக் கொள்ளவும் மறுத்தவர். சயன்ஸ் பட்டதாரி. டிஃபென்ஸ் ரிசர்ச் டெவலப்மென்ட் லாபரடரியில் வேலை கிடைத்து, பூனாவுக்குப் போனார். அலுவலகத்தில் ஒரு துப்புரவுத் தொழிலாளிக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டு பொறுக்க மாட்டாமல், பொங்கி எழுந்தார். இதுதான் ஆரம்பம். பிறகு, பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் நலன் காக்கும் ஊழியர்களின் சங்கக் கூட்டமைப்பை உருவாக்கினார். கொஞ்ச நாள் ரிபப்ளிகன் கட்சியில் இருந்தாலும், அந்தக் கட்சியின் போக்குப் பிடிக்காமல், அதிலிருந்து விலகினார்.

பகுஜன் சமாஜ கட்சியைத் தொடங்குவதற்கு முன்னால், தமது குடும்பத்துடன் இருந்த சொந்த பந்தங்களை எல்லாம் வெட்டிக் கொண்டார் கன்ஷிராம். அம்மாவுக்கு ஒரு 24 பக்கக் கடிதம் எழுதினார். அதில், தாம் முன்பு திருமணம் செய்து கொள்ள ஒப்புக் கொண்டதை நிறைவேற்ற முடியாமல் இருப்பதற்கு மன்னிப்புக் கோரினார்!

85ல் பஞ்சாப் சட்டமன்றத் தேர்தலின் போது, தலித் ஷோஷித் சமாஜ் சங்கர்ஷ் சமிதி என்றுதான் கட்சிக்குப் பெயர். 2 சதவிகித வோட்டுக்களே பெற்றாலும், அது காங்கிரசுக்கு ஆட்சியைப் பிடிக்க முடியாமல் அகாலிகளுக்கு அதிக இடத்தைப் பிடிக்க மறைமுகமாக உதவியது. "இரண்டு சதவிகித வோட்டு வித்தியாசம் என்ன செய்யும் என்று இப்போது காங்கிரஸ் உணர்ந்து கொண்டிருக்கும்" என்று கிண்டலடித்தார் கன்ஷிராம்.

ஒரு நாளைக்குத் தாம் நிச்சயமாகப் பிரதமர் ஆகிவிட முடியும் என்று திடமாக நம்புகிறார் கன்ஷிராம். அரசு வேலைகளில் இட ஒதுக்கீடு இவருக்கு அறவே பிடிக்காது. "அது சும்மா ஊன்றுகோல் மாதிரி. அதைத் தூக்கி எறிந்து விட்டு, சொந்தக் காலில் நிற்க வேண்டும். ரிசர்வேஷன் வேண்டாம். ஆட்சியையே பிடிப்போம்!" என்கிறார் கன்ஷிராம்.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட கால கட்டத்தில், பிரதமரின் ரேஸ் கோர்ஸ் சாலை இல்லத்துக்குத் தினசரி இரவு சென்று பா.ஜ.க.வுக்குப் பாடம் கற்பித்தாக வேண்டும் என்று வாதாடி வந்தவர் கன்ஷிராம்!

– சித்தார்த்

சமுதாய உணர்வுடன் சில சங்கங்கள்

நயமாக எடுத்துச் சொல்லியும் எதிர்ப்பைக் காட்டியும் தங்கள் பகுதியில் கள்ளச் சாராயத்தை ஒழித்திருக்கிறார்கள், புனித ஜார்ஜியார் இளைஞர் நற்பணி மன்றத்தைச் சேர்ந்த இளைஞர்கள்.

''எங்கள் பகுதியில் கட்டடத் தொழிலாளர்கள் அதிகம். அவர்கள் பெரும்பாலும் கள்ளச் சாராயம் அருந்திச் சீரழிந்து வந்தார்கள். அதனால் எங்கெங்கு கள்ளச் சாராயம் விற்பதாக எங்களுக்குச் சந்தேகம் வந்ததோ அங்கெல்லாம் சோதனை செய்தோம். இதனால் பாதிக்கப்பட்ட கள்ளச் சாராய வியாபாரிகளின் எதிர்ப்புகள் ஒரு பக்கம் இருக்க, மதுவின் தீமைகளை நாங்கள் நயமாக எடுத்துரைத்ததில் கட்டடத் தொழிலாளர்களில் மிகப் பெரும்பாலோர் இப்போது குடிப் பதை நிறுத்தி விட்டார்கள். இது எங்களுக்கு கிடைத்த வெற்றி'' என்று சொல்கிறார் மன்றத் தலைவரான ராஜு.

வேறு பல உருப்படியான சேவைகளையும் செய்கிறது மன்றம். பத்து, பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு இலசவப் பயிற்சி, கண்தானம் பற்றிய விழிப்புணர்வு, மாவட்ட அளவில் பள்ளிக் குழந்தைகளுக்குப் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஏழை மாணவர்களுக்கு இலவசச் சீருடைகள் என்று பட்டியலிடுகிறார் ராஜு!

பொதுநலச் சேவைக்கு வருபவர்கள் காலப்போக்கில் சுயநலவாதிகளாக மாறி விடுவதுண்டு. ஆனால் சுயநலமாக ஒரு காரியத்தில் ஈடுபடப் போக, பின்னர் அதுவே பொது நலத்திலும் இழுத்து விட்ட சமாசாரம் தெரியவேண்டுமென்றால் பிலிக்ஸைச் சந்திக்க வேண்டும். தம் மகளுக்குப் பரதநாட்டியம், வீணை, வாய்ப்பாட்டு சொல்லித் தர ஆசிரியரைத் தேடினார். பல நாள் தேடலுக்குப் பின்னர்தான் ஆசிரியர்கள் கிடைத்தார்கள். தம்மைப் போலவே பலர் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பார்களே என்று எண்ணி, நண்பர் சுப்பையாவுடன் கலந்து பேசினார். பிறந்தது குமரிகலைக் கழகம்.

''இந்த மாவட்டத்தில் இருக்கும் பல்வேறு வகைக் கலைஞர்களின் முகவரிகளையும் வாங்கி வைத்துள்ளோம். ஆர்வமுள்ளவர்கள் எங்களை அணுகினால், அந்தந்தக் கலைக்குத் தேவையான ஆசிரியர்களை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறோம்!'' என்கிறார்கள் தலைவர் பிலிக்ஸும், துணைத் தலைவர் ராதா கிருஷ்ணனும்.



• திருமதி இஸபெல்

''திறமைகளைத் தேடிக் கண்டுபிடித்து வெளிப்படுத்துவதுதான் எங்கள் தலையாய பணி!'' என்று சொல்லும் இவர்கள், மாணவ, மாணவியரை ஊக்குவிக்கும் வகையில், பரதநாட்டியம், கர்நாடக, மேற்கத்திய சங்கீதம், கரகாட்டம், ஓவியம் ஆகியவற்றில் மாவட்ட அளவில் ஆண்டு தோறும் போட்டிகளும் நடத்துகிறார்கள். அதில் கலந்து கொள்ளப் பள்ளி மாணவ மாணவியர் காட்டும் ஆர்வம் இவர்களைப் பிரமிக்க வைக்கிறதாம்!



• பிலிக்ஸ், ராதாகிருஷ்ணன்


'இன்னர் வீல் கிளப்' என்றால் தெரியுமா? சமூக சேவை செய்வதற்காக நீங்கள் மட்டும்தான் ரோட்டரி கிளப் நடத்த வேண்டுமா? நாங்களும் தனியாக ஒரு கிளப் நடத்தக் கூடாதா என்று ரோட்டரி சங்க உறுப்பினர்களின் திருமதிகள் பலர் ஒன்று சேர்ந்து தனிக்கொடி, தனி அமைப்பு ஒன்றை ஏற்படுத்தினார்கள். அதுதான் இன்னர் வீல் கிளப். தங்கள் சாதனைகளைப் பட்டியலிடுகிறார் திருமதி இஸபெல் :

இரண்டு கிராமங்களில் குழாய்க் கிணறுகள், ஏழை பள்ளி, கல்லூரி மாணவியருக்

குப் பொருள் உதவி, ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு உதவி, அனாதை ஆசிரமத்துக்குக் கம்பளி, துணிகள் என்று உதவுவதோடு கொட்டாரம் கிராமத்தில் நூல் நூற்க சர்க்காக்களும் வழங்கப்பட்டிருக்கிறதாம்.

தவிர, தேசிய நெடுஞ்சாலையான N.H. 47-ல் 250 மரங்களை நட்டு வளர்த்திருக்கிறது இன்னர் வீல். வெறுமனே பப்ளிசிட்டிக்காக மரக் கன்றுகளை நட்டு விட்டு, பின்னர் கண்டுகொள்ளாமல் ஆடு, மாடுகள் தின்று விட்டுப் போக அனுமதிப்பது போல் அல்லாமல், குழந்தையை கவனிப்பது போல் தினசரி சென்று கன்றுகளைக் கவனித்து வளர்த்த பெருமையும் இன்னர் வீலுக்கு உண்டு.





* மதுரம்மாதர் சங்கத்தினர்

இல்லத்தரசிகள் உபரி வருமானத்துக்குத் தயங்காமல் தொழில் செய்யலாம் என்று எடுத்துக் காட்டுகிறது டி. ஏ. மதுரம் மாதர் சங்கம். நாகர்கோயிலை ஒட்டியுள்ள கோதை கிராமத்தில் செயல்படும் இந்தச் சங்கத்தில் நடுத்தரக் குடும்பப் பெண்களே உறுப்பினர்கள். இவர்கள் செய்வது மரவள்ளிக் கிழங்கு அப்பள வியாபாரம். இந்த கிராமத்தில் ஒரு நாளைக்குச் சராசரியாக 20,000 அப்பளம் தயாராகிறது. காலையில் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பி விட்டு, கணவரையும் பின்னோடு வேலைக்கு அனுப்பி விட்டுக் கையில் அப்பளக் குழவியுடன் உட்கார்ந்து முதுகொடிய உழைத்தால், ஒருவர் ஒரு நாளில் பத்திலிருந்து பன்னிரண்டு ரூபாய் சம்பாதிக்கலாம். இவர்களிடத்தில் நூறு அப்பளம் கொண்ட கட்டை ஆறு ரூபாய்க்கு வாங்கும் நாகர்கோயில் வியாபாரி பத்து ரூபாய்க்கு விற்கிறாராம். ''அரசு அப்பளக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை இந்தக் கிராமத்தில் அமைத்துக் கொடுத்தால் மிகவும் உபயோகமாக இருக்கும்'' என்கிறார்கள் இவர்கள்.

கூட்டுறவுச் சங்கம் வருவதற்கு முன் இவர்கள் போராடிப் பெற வேண்டியது மெயின் ரோடிலிருந்து கிராமத்துக்குச் செல்லச் சீரிய பாதை வசதி. இத்தனைக்கும் சென்ற முறை வெள்ளம் வந்த போது 'ஜெ' விசிட் செய்து விட்டுப் போன கிராமம் இது. ''வெள்ள நிவாரணம் ஒழுங்காகக் கிடைக்கவில்லை'' என்ற இவர்களது புலம்பலைப் போட தனியானதொரு இலவச இணைப்பே தேவை!


குமரி மாவட்டத்தில், வந்தனம் கலைக் குழுவினர் போடும் நாடகங்கள் கம்மா சிரிக்க வைப்பதற்காக அல்ல; விழிப்புணர்வை உண்டாக்கும் நாடகங்கள். இந்த வித்தியாசமான நாடகங்களுக்கு அடிப்படை சமூகப் பிரச்னைகள்தாம். ராஜஸ்தானில் ரூப்கன்வர் உடன்கட்டை ஏற்றப்பட்ட போது அதைக் கண்டித்து இவர்கள் போட்ட நாடகம் 'சதிபதி'; தண்ணீர்ப் பிரச்னையை அடிப்படையாக வைத்து 'முக்கிய விஷயம்'; மதங்களின் பெயரால் மனித நேயம் காயம் பட்டு விடக் கூடாது என்பதைச் சொல்ல 'சமரசம் உலாவும் இடமே'; வரதட்சணைக் கொடுமையை எடுத்துக்காட்டும் 'மாப்பிள்ளைக் கடை'.... என்று ஏராளமாகச் சொல்லிக் கொண்டே போகலாம்.

இவர்கள் தங்கள் நாடகங்களைத் துவங்குமுன், நாட்டுப்புற இசையின் அடிப்படையில் நடத்தும் ''ஊரழைப்பு'' நிகழ்ச்சி மக்களை வெகுவாகக் கவருகிறது.

இருவர் மட்டுமே பங்கேற்கும் 'மைமிங்' வகையைச் சேர்ந்த இவர்களுடைய 'நாற்காலிப் போட்டி' கடந்த பதினெட்டு வருடங்களாக நடிக்கப்பட்டு வருவதே இவர்களின் ஆற்றலைக் காட்டுகிறது.

– நமது நிருபர்கள்

தகவல் தந்த வாசகர்கள் :
எஸ். ஸ்ரீகுமார், எஸ். மகேஸ்வரி, இலபெல் பிலிக்ஸ், வி. செல்வராஜ், பிலிக்ஸ் பெர்னாண்டஸ்.



* சுசீந்திரம் : ''கந்தல் அலங்காரம்!''

யாத்திரா ஸ்பெஷல்!

நாகர்கோயில் வட்டாரத்தில் திருத்தலங்கள் பற்றிய சிறு குறிப்புகள்!

தாணு, மால், அயன் (சிவன், விஷ்ணு, பிரம்மா) ஆகிய மும்மூர்த்திகளும் ஒரே இடத்தில் தாணுமாலயனாகக் காட்சிதரும் திருத்தலம் தான் சுசீந்திரம்.

இந்தத் தாணுமாலயனை வணங்கித்தான் கௌதம முனிவரிடம் பெற்ற சாபத்திலிருந்து விமோசனம் பெற்றான் இந்திரன். அதனால் மகிழ்ச்சியுற்ற இந்திரன் தான் இங்கே மும்மூர்த்திகளுக்கும் கோயில் எழுப்பினான். இப்படி இந்திரன் சுத்தி பெற்ற இடமாதலால் ஞானாரண்யம் என்பது சுசீந்திரம் என்று அழைக்கப்படலாயிற்று. இன்றைக்கும் தாணுமாலயனுக்கு இந்திரனே வந்து அர்த்த ஜாம பூஜை நடத்துவதாக ஐதீகம்.

இப்படிப்பட்ட தலப் பெருமை வாய்ந்த சுசீந்திரத்தில் அரசாலோ தேவசம் போர்டாலோ அங்கீகரிக்கப்பட்ட கைடுகள் யாரும் இல்லை என்பதால், உள்ளூரில் யார் மனம் வைத்தாலும் கைடுதான்! 'இந்திரன் நடத்தும் அர்த்த ஜாம பூஜையைக் கூட கண்டு களிக்கலாம் என்று கூறி ஆயிரம் இரண்டாயிரம் என்று ஏமாற்றிப் பணம் பிடுங்கும் கைடுகளும் இருக்கிறார்கள் என்பது கொடுமை' என்கிறார்கள் உள்ளூர் வாசிகள்.

கைடுகள் என்கிற பெயரில் சிலர் ஏமாற்றுவது ஒருபுறமென்றால், அனுமாருக்கு வடைமாலை என்கிற போர்வையில் பக்தர்களின் பல்லை உடைக்கும் மாலையைத்தான் கோயில் நிர்வாகம் சாத்துகிறது என்பது இன்னொரு குற்றச்சாட்டு.

ஒவ்வொரு மார்கழியிலும் நடக்கும் சுசீந்திரம் தேர்த் திருவிழாவின் போது, தேரை அலங்கரிக்கப் பயன்படும் துணிகள் கிழிந்து கந்தலான நிலையிலும் புதுத் துணிகள் வாங்குவதற்கு அரசின் நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை என்பது பக்தர்களுக்குப் பெரும் ஏமாற்றம். அதனால் விரக்தியடைந்த பக்தர்கள் சுசீந்திரம் தேர்த் திருவிழாவைக் ''கந்தல் அலங்காரத் தேர்த் திருவிழா'' என்றுதான் குறிப்பிடுகிறார்கள்.

இந்த நிர்வாகக் கந்தலுக்குள் அகப்பட்டுக் கொண்டிருப்பவை கனில் கோயில் திருக் குளமும்



* நாகராஜா கோயில் : மண்ணே பிரசாதம்



✱ திருப்பதிசாரம் : சாந்த சொரூபம்

ஒன்று. கடந்த பல ஆண்டுகளாகவே இந்தக் குளத்தின் நீர் சுத்திகரிக்கப்படவேயில்லை என்பதால், இது திருக்குளமா அல்லது நோய் பரப்பும் கேந்திரமா என்று எதுவும் புரியாத நிலை.

''மூடப்பட்ட குளத்தின் அடி மடையைத் திறந்து விட வேண்டும்; அப்போதுதான் நீர் சுத்தமாகும்! என்று கோயில் நிர்வாகம் முதல், மாவட்ட ஆட்சித் தலைவர் வரை எல்லோரிடம் மனுக் கொடுத்துப் பார்த்து விட்டோம். சர்வ கட்சிப் போராட்டங்களும் நடத்திப் பார்த்துவிட்டோம். ஆனால் நிர்வாக எந்திரம் அசைந்து கொடுப்பதாகவே இல்லை!'' என்கிறார்கள் உள்ளூரில் நாம் சந்தித்த ஒவ்வொருவரும்.

●● சுசீந்திரம் போலவே சைவ-வைணவ ஒற்றுமைக்கு இன்னொரு எடுத்துக்காட்டு, கன்னியாகுமரிக்கு அருகிலுள்ள அகத்தீசுவரம். இங்கு அகத்திய முனிவர், சிவனுக்கு எழுப்பிய ஆலயம்தான் அகத்தீசுவரமுடையார் திருக்கோயில். இக்கோயில் வளாகத்திலேயே அழகிய மணவாளப் பெருமாள் ஆலயமும் அமைந்துள்ளது. அகத்தியர் வழிபட்ட இடம், இன்று ஆள் அரவமற்றுக் கிடக்கிறது என்பதை என்னவென்று சொல்ல!


●● காஞ்சிபுரத்தில் சிற்பி ஒருவன் மரக்கருடன் செய்து முடித்த போது, அது உயிர் பெற்றுப் பறக்க ஆரம்பித்து விட்டது. (அத்தனை தத்ரூபமான சிலை). அதைக் கண்ட சிற்பி, தன் கையிலிருந்த உளியைப் பறக்கத் தொடங்கிய கருடன் மேல் வீச, இறக்கையின் ஒரு பகுதி சேதமடைந்து விட்டது. சேதமடைந்த இறக்கையுடன் பறந்து வந்து சேர்ந்த இடம்தான் பட்சிராஜபுரம். வடமொழிச் சொல்லான அதை பறவைக்கரசூர் என்று தமிழ்ப்படுத்த, அதுவே பிறகு பறக்கை என்று அழைக்கப்படலாயிற்று என்கிறார்கள்.

நாகர்கோயிலுக்கருகிலுள்ள பறக்கையில் வசித்து வந்த அந்தணர் ஒருவருக்கு மக்கட்பேறில்லாமல் போகவே, ஒருநாள் அநாதையாக அழுது கொண்டிருந்த சிறுவன் ஒருவனை அழைத்து வந்து, மதுசூதனன் என்று பெயரிட்டு, முறைப்படி பூணூலுமிட்டுத் தமது பிள்ளையாகவே வளர்த்து வந்தார்.

ஆயினும் சிறுவன் மதுசூதனனை மற்ற அந்தணர்கள் விலக்கியே வைத்தனர். அதனால் மனமுடைந்த மதுசூதனன், தனியானதொரு இடத்தில் குடிசையமைத்து இறைவனைப் பூஜித்து வந்தான். அவன் பூஜை செய்த இடத்தில் எழுந்தருளியதால்தான் பறக்கையிலுள்ள பெருமாளுக்கு மதுசூதனப் பெருமாள் என்று திருநாமம். காஞ்சியிலிருந்து பறந்து வந்த கருடனும் இங்குதான் தரையிறங்கியது என்பதால், இக்கோயிலில் கருடனுக்கும் தனிவழிபாடு நடத்தப்படுகிறது!

●● நரசிம்ம அவதாரம் எடுத்து இரணியனை வதம் செய்த பெருமாள் உக்கிர மூர்த்தியாகக் காட்சியளித்தார். பிறகு பிரகலாதன் வேண்டுகோளின்படி உக்கிரம் தணிந்த சாந்த சொரூபியாக, நின்ற திருக்கோலமாகக் காட்சியளித்தார். பெருமாளின் உக்கிரம் கண்டு ஒதுங்கிய திருமகளும்

✱ அகத்தீசுவரம் : ஆள் அரவமில்லை!



✱ பறக்கை : பறந்து வந்த மரக் கருடன்



அவரது சாந்த சொரூபம் கண்டு, பெருமாளின் திருமார்பில் வந்து சேர்ந்ததால் ''திருவாழ்மார்பன்'' என்று அழைக்கப்படலானார்.

பெருமாளின் இந்தத் திருக்கோலத்தைத் திருப்பதிசாரத்தில் காணலாம். இத்திருத்தலமும் நாகர்கோவிலுக்கு அருகில்தான் இருக்கிறது. மனத்துக்கு இதமளிக்கும் பெருமாள், குன்று சூழ் பின்னணியில் திருக்கோயில் கொண்டுள்ளதால் கண்களுக்கும் ரம்மியமாக இருக்கிறது.

●● நாகராஜா திருக்கோயில் இருக்கும் காரணத்தால்தான் நாகர்கோயில் அப்பெயரைப் பெற்றது. 16 - ம் நூற்றாண்டில் களக்காட்டைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த மன்னன் வீர உதய மார்த்தாண்டவர்மா, தனது தொழுநோய் குணமாகவே, நேர்த்திக் கடன் தீர்க்கப் புதுப்பித்துக் கட்டியதுதான் இக்கோயில். ஆலயம் புதுப் பொலிவுடன் எழுப்பப்பட்டபோது, தமது கருவறை மட்டும் எப்போதும் போலவே ஓலைக் குடிசையாகத்தான் இருக்க வேண்டும் என்று மன்னன் கனவில் இறைவன் கேட்டுக் கொண்டதால் இன்னமும் நாகராஜாவின் கருவறை தென்னங்கீற்றுகளால் வேயப்பட்ட குடிசையாகத்தான் இருக்கிறது.


இங்கு தரிசனம் செய்ய வரும் பக்தர்களுக்கு, இறைவன் எழுந்தருளியுள்ள மூலஸ்தானத்திலிருந்து எடுக்கப்படும் மண்தான் இன்றும் பிரசாதமாக வழங்கப்படுகிறது!

●● கேரளாவிலுள்ள கோயில்களைப் போலவே குமரி மாவட்டத்திலுள்ள கோயில்களிலும் ஆண்கள் மேல் சட்டையோ, பனியனோ அணியாமல்தான் செல்ல வேண்டும். இந்த விதிமுறை இன்னமும் கடைப்பிடிக்கப்பட்டாலும் முன்பு போல் வேஷ்டி மட்டும்தான் அணிந்து செல்ல வேண்டும் - பாண்ட் போட்டுக் கொண்டு போகக் கூடாது என்கிற விதிமுறையை இப்போது தளர்த்திவிட்டார்கள். காரணம், வெளியூரிலிருந்து வரும் பக்தர்களுக்கு இது மிகவும் அசௌகரியமாக இருக்கிறது என்பதை தேவசம் போர்டு உணர்ந்ததுதான். என்றாலும் உள்ளூர்க்காரர்கள் அனைவருமே கோயில் திருக்குளத்தில் குளித்த நிலையில், ஈர ஆடைகளுடன்தான் இன்றைக்கும் கோயிலுக்குள் சென்று வழிபடுகிறார்கள். இதைப் பாராட்டுவது சுலபம்; நம்மில் எத்தனை பேர் கடைப்பிடிக்கப் போகிறோம்!

– சாங்கிருத்தியாயன்

தகவல் தந்த வாசகர்கள் :

எம். இராதா கிருஷ்ணன், எஸ். ஜெயந்தீஸ்வரன், எம். நீலகண்டன் பிள்ளை, கு. பச்சைமால்.



பாப்பையா



பக்கம் :

நீதி சொல்ல வேண்டாம்; சேதி கூடவா சொல்லக் கூடாது?

“இப்ப எல்லாமே பிசினஸ்! தியாகம் அப்படி இப்படின்னு தெருவுல நின்னுறக் கூடாது! ஏழு வயசுச் சின்னப் பையன் மேடை ஏறி, எழுபது வயசு அரசியல்வாதியை ‘அடே! மானங்கெட்டவனே! உன் குடும்ப வரலாறு எனக்குத் தெரியாதா’ன்னு ஏக வசனத்திலே பேசுறான்; அதையும் கேட்டுக், கைதட்டி, மாலை போட்டு, ஊர் ஊருக்கு மீட்டிங் போடுறாங்கன்னா, இந்த ஊர்ல இனி நாட்டைப் பத்தி யார் சார் கவலைப்படுவா? அந்தக் கட்சியிலயே ஒரு நியாயஸ்தன் ‘இறங்குடா கீழே; உன்னை யார்ரா மேடை ஏத்தினது’ன்னு கேட்டுட்டா அவனுக்குத் துரோகின்னு பட்டம்! நம்ம ஊர்ல அரசியல் ஒரு சைக்கிள் சவாரி மாதிரி; இரண்டையும் ஓட்ட லைசன்ஸ் எடுக்க வேண்டியதில்ல; அரைப் பெடல்லயும் ஓட்டிக்கிட்டு வரலாம்; மூணு நாலு பேரு கூட்டாவும் ஓட்டலாம்; விழுந்துருவாங்களேன்ற கவலை அவுகளுக்கு இல்ல; பாதையில போற நமக்குத்தான் அந்தக் கவலை; எது எப்படி ஆனாலும் நட்டப்படுறது என்னவோ நாமதான்!” அந்தப் பெரியவர் ஆதங்கத்துடன் பேசத் தொடங்கினார்.

“ஓட்டுறவனுக்கு இல்ல; ரோட்டுல போறவனுக்குத்தான் நட்டமின்னு நீங்களே சொல்றீங்க; ரோட்டுல போறது நாமதான; நம்மைப் பத்திக் கவலைப்படாம நாமளே இருக்கலாமா?” நான் பதிலுக்குச் சொன்னேன்.

“நம்மைப் பத்திக் கவலைப்பட்டாப் போதுமின்னுதானே நான் இவ்வளவு பேசுறேன். சார்; எங்க வீட்டுக் காம்பவுண்டுச் சுவரைப் பாத்திருக்கீங்களா? அதைக் கட்ட நான் பட்ட பாடு எனக்குத் தெரியும். கிரகப் பிரவேசம் வைக்க வந்த மொய்ப் பணத்தில கட்டுனேன் சார். இப்ப என்னடான்னா அதுல எல்லாரும் வந்து நோட்டீஸ் ஒட்டுறது, எழுதிப் போடறதுன்னு அவனவன் மொய் எழுதிட்டுப் போறான்; யாராவது நம்மைக் கேக்குறானா; இல்லை, நாம நிக்கிறமுன்னு பயப்படுறானா? சர்வ சுதந்தரமா வர்றான்; எழுதறான், போறான்.”

“என்ன சார்; நீங்க ஒரு வார்த்தை கேட்டா பிறகு வருவான்களா?”

“அப்படிச் சொல்லுங்க! நீங்க இந்த ஊர் மனுஷாளே இல்ல; ஏம்பா என் சுவத்தில எழுதறீங்கன்னு கேட்டுட்டு ஏழு நாள் தூங்காம இருந்திருக்கேன். அது தெரியுமா உங்களுக்கு; இந்தா, இத்தினி பூண்டு பையன் கூட ஒரு கல்லை வீசிட்டு ‘டேய்! ஜாக்கிரதை’யின்னு என் வீட்டு முன்னே கத்திக் கலங்கடிச்சிட்டான்!”

“போலீஸ்ல சொல்லலாம்ல சார்!”

“சொன்னேன்; கம்ப்ளைண்டு எழுதிக் கொடுங்க; அது யாருன்னு காட்டுங்கன்னார்; இன்னொருத்தர் தனியாக் கூட்டிக்கிட்டுப் போய் ‘எதுக்கு சார் வம்பை விலைக்கு வாங்குறீங்க; அவங்க என்ன எப்பவுமா ஒட்டப் போறாங்க; ஏதோ ஒரு நேரத்தில ஒட்டுவாங்க; இதைப் போயி பெரிசுபடுத்தறீங்களே; ஊரோட பகைச்சா வேரோட கெடும்னு சொல்லுவாங்க; பாத்துச் செய்ங்க’ன்னார். அந்த உபதேசம் தான் சரியின்னு பட்டுச்சி என் வீட்டுக்காரிக்கும்; அத்தோட அத நான் விட்டுட்டேன்; இப்ப அந்தச் சுவரு ரொம்பப் பேருக்கு வாழ்க்கைப்பட்டு நிலைகுலைஞ்சு நிக்குது; எப்ப யார் மேல பழி போடுமோ சொல்ல முடியாது.”

அவரால் நிறுத்த முடியவில்லை; “இதக் கேளுங்க, இந்த வேடிக்கையை; என் வீட்டுக்கிட்ட இத்தனை கூத்தும் நடந்தப்ப எதுத்த வரிசையில இருந்த கடைக்காரர் எதையுமே கண்டுக்கிடலை; நான் அங்கேயும் இங்கேயும் போய் வர்றதைப் பாத்தப்பவும் ஒரு அனுதாப வார்த்தை கூட அவருகிட்ட இருந்து வரலை; என் விஷயத்தில

இவ்வளவு புத்திசாலியா(!) இருந்த மனுஷன் அவரு விஷயத்தில கோட்டை விட்டுட்டாரு. எது எதுக்கோ நிதி வேணு மின்னு நோட்டத் தூக்கிக்கிட்டுப் பல கட்சிக்காரங்க கடை கடையா வந்திருக் காங்க; இவரு 'இவ்வளவுதாம்பா நம் மாலே ஆனதுன்னு' கதைய முடிக்காம, கட்சிகளுக்கே நிதி தர்றதில்லன்னு கொஞ்சம் கடுமையாச் சொல்லியிருக் காரு...''

''சரியாத்தானே சொல்லியிருக்காரு?'' இது என் குறுக்கீடு.

''அப்படிச் சரியாச் சொன்னதுக்கு அவர் எவ்வளவு வெலை கொடுக்க வேண்டி வந்திச்சு தெரியுமா...'' என்று சொல்லி அடக்க முடியாமல் சிரித்தார். அந்தச் சிரிப்பில் தனக்கு உதவ வராதவர் தானே என்ற கேலியும் இருந்தது; அவருக்கு இப்படி ஆகி விட்டதே என்ற ஆத்திரமும் இருந்தது!

''என்னதான் நடந்திச்சு?'' - எனக்குள் செய்தி சேகரிக்கும் பரபரப்பு.

''ஏதோ அவுக கட்சிக்காரங்கள, என்னமோ எங்கேயோ செஞ்சிப் புட்டாகளாம். அதுக்குத் திடீர்னு ஊர்வலமா வந்து கடையை அடை; கடையை அடைன்னு கத்திக் கிட்டே வந்திருக் காங்க ஒரு பெரிய கும்பலா; இந்த மனுஷன் பாவம் ஏமாந்துட்டாரு; ஒரு நிமிஷத்தில கடையில இருந்த கண்ணாடி கிண்ணாடியெல்லாத்தை யும் உடைச்சு 'நாலைஞ்சு ரூபாய்' நட்டப்படுத்திட்டாங்க.''

''அவரு கம்ப்ளைண்டு கொடுத்திருக்கலாமே.''

''கொடுக்கலாம்; வந்த கட்சி அப்ப ஆளுங் கட்சி யாவில இருந்திச்க.''


''ஆளுங்கட்சியினா என்ன; யாருந் தட்டிக் கேக்கப் படாதா?''

''கேக்கலாம்; கேக்கப் போற எதிர்க்கட்சிக்காரங்களும் அப்படித்தானே இருக்காங்க...'' அவர் பார்வை வானத்தை நோக்கி எதையோ தேடிக் கொண்டிருந்தது!

''ஆமா சார்; இத்தனை நடந்தும் எல்லாமே சுத்தமா இருக்கிற மாதிரி - இதை எல்லாங் கண்டுங் காணாம விட்டுர்றது யாரு? சின்னப் பசங்களா?''

''நல்லாச் சொன்னீங்க; அவுங்கள ஆட்டுறாங்க, பசங்க ஆடுறாங்க.''

''ஆட்டுறவங்கள விட்டுட்டு ஆடுற வங்களத் திட்டுறீங்களே, இது எப்படி சார் சரியாகும்? இன்னைய பசங்க வளக்குற பேஷனான முடிக்கும் சட்டைக்கும் போயி முணுமுணுக்குறோம். அந்தக் காலத்தில அமெரிக்கன் கிராப்புக்கும் ஒப்பன் ஷர்ட் டுக்கும் நாம வாங்குன வசவை மறந்திட றோம். பசங்களோட இந்த வெளித் தோற்றம் இன்னைக்கு ஒண்ணு; நாளைக்கு ஒண்ணா வரும்; போகும்; இதில பெரிய நட்டம் ஒண்ணுமில்லை சார்; அடுத்தவர் மனத்தையும் உடைமையையும் உரிமையை யும் பாழடிக்கிறோமேங்கிற ஈவு இரக்கமே இல்லாம ஒரு இளந் தலைமுறைய வளத்து விடுறோமே அதைப் பத்தித்தான் நாம



கவலைப் படணும்.''

''நாம ஒருத்தரு கவலைப்பட்டு என்ன சார் ஆகப் போகுது? கன்னியாகுமரியில ஒத்தக் கல்லைத் தூக்கிப் போட்டுட்டா, கடல் பூராவுமா அலை பரவும்?''

''அப்படி ஏன் தைரியமில்லாம இருக் கணும்? ஒருத்தர் ஒருத்தருக்குச் சொன்னது தான் சார் கீதை! நமக்குக் கீதை சொல்லுந் தகுதி இல்லைதான்; ஒரு சேதி சொல்லக் கூடவா...!''

– சாலமன் பாப்பையா



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இரங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 120 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஓர் நாள் உணவளிக்க,உணவு வகைகளை அனுசரித்து சுமார், முறையே ரூ. 300/' அல்லது 500/' ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 3000/' அல்லது 5000/' மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்குகொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்ப வேண்டிய பொருளும் முகவரியும் :

அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம் - 612 001.

வேத வைதிக நூல்கள் (விலை தபால் செலவு உட்பட)

I
1. ரிக்வேத ஸம்ஹிதா - நாகராக்ஷரம் - 10 மண்டலங்கள் விலை ரூ. 265/-
2. ரிக்வேத ச்ருங்கலா - நாகராக்ஷரம் - விலை ரூ. 60/-
3. யஜுர்வேத தைத்திரீய ஸம்ஹிதா - நாகராக்ஷரம் - 7 காண்டங்கள் - விலை ரூ. 165/-
4. ஸாமவேத ஸம்ஹிதா - கிரந்தாக்ஷரம் - 2 பாகங்கள் (முதல் பாகம் - ரூ. 185/-, இரண்டாம் பாகம் - ரூ. 210/-)
5. ஸாமவேத அஷ்டப்ராம்மணம் - நாகராக்ஷரம் - 3 பாகங்கள் (முதல் பாகம் - ரூ. 210/- இரண்டாம் பாகம் - ரூ. 110/- மூன்றாம் பாகம் - ரூ. 65/-)
6. ஸாமவேத பூர்வாபர ப்ரயோகம் - கிரந்தாக்ஷரம் - ரூ. 80/-
7. சாந்தி குஸுமாகரம் (2 பாகங்கள்) - விலை ரூ. 170/- (1 ம் பாகம் ரூ. 85/- 2 ம் பாகம் ரூ. 85) (கிரந்தாக்ஷரம்)


II கிரந்தாக்ஷரத்தில் காரிகையுடன் பிரம்மஸ்ரீ முத்துச்ரௌதிகளால் பதிப்பிக்கப்பட்ட கிரந்தங்களின் மறுபதிப்புகள்
1. போதாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 95/-
2. ஆபஸ்தம்ப பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 90/-
3. ஆபஸ்தம்ப ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 55/-
4. ஆச்வலாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 65/-
5. ஆச்வலாயன ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 50/-
6. கல்ப சிந்தாமணி - ரூ. 55/-

III நாகராக்ஷரம்
1. மனாசேச்லோக - ராமசந்த்ராசே ச்லோக - ரூ. 25/- (மராத்தி மூலம் தமிழ் பதவுரை)
2. ஸ்ரீ ராதாக்ருஷ்ண பூஜாவிதானம் - ரூ. 25/- (ஸம்ஸ்க்ருதமூலம் - தமிழ் பதவுரை)
3. நளோதந்தம் - நைஷதகாவ்யத்தின் சுருக்கம் - ரூ. 25/- (ஸம்ஸ்க்ருத மூலம் - ஆங்கில பதவுரை)
4. வேதபாட வழிமுறை (syllabus) ரிக், யஜுர், ஸாம - ரூ. 25/-
5. ராமோதந்தம் - நாகராக்ஷரம் - விலை ரூ. 25/-

V.P.P. யில் அனுப்புவதில்லை. முழுத் தொகையையும் M.O. (or) Draft மூலம் கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும். செக் மூலம் அனுப்ப வேண்டாம். "எமது நூல்கள் பற்றிய விவரமான கேட்லாக் வாங்க விரும்புவோர் ரூ. 3/- தபால்தலை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்."

பிரஸிடெண்ட் - டிரஷரர் - A.V.M.S.G.D.P.S. சமிதி, D-76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம் - 612 001.

நேரில் வாங்க விரும்புவோர் கண்டிப்பாக - ராஜா வேதகாவ்ய பாடசாலை, யாகசாலை தெரு, (சக்கரை படித்துறை அருகில்) கும்பகோணம் - 612 001 என்ற விலாசத்தில் பெற்றுக் கொள்ளவும்.



● சுந்தரராமசாமி : ''நினைத்தபடி முடியவில்லை!''

முக்கடல் சங்கமத்தில் சிற்றலைகள்!

●● ஆதிசங்கரர் 'சௌந்தர்ய லஹரி' யை எங்கிருந்து பாடினார்? ''நிச்சயம் கன்னியாகுமரியிலிருந்துதான் பாடியிருக்க வேண்டுமே தவிர, இமயமலைச்சாரல் பக்கமிருந்து அல்ல என்பதற்குச் சுசீந்திரம் கோயில் தூண் ஒன்றில் ஆதிசங்கரர் பற்றி வடிக்கப்பட்டுள்ள சிற்பங்களே சான்று. எனது இந்த ஆய்வைக் காஞ்சிப் பெரியவரும் சரியானதென்றே கருதுகிறார்!'' என்கிறார் கன்னியாகுமரி வரலாற்றுப் பண்பாட்டு ஆய்வு மையத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் எஸ். பத்மநாபன். இவருக்கு ஒரு குறை : 1956-ஆம் ஆண்டே ஏற்படுத்தப்பட்ட குமரி மாவட்டத்திற்கு இன்னமும் District Gazetteer இல்லை என்பதுதான் அது!

●● குமரி மாவட்டத்தில் ஏகப்பட்ட சிறு பத்திரிகைகள்; பட்டியலிட்டு மாளாது. இந்த நிலையிலும் எழுத்தாளர் சுந்தரராமசாமி தாம் நடத்தி வந்த 'காலச் சுவடு' என்ற பத்திரிகையை நிறுத்தி விட்டார். காரணம்? ''எனக்கிருக்கிற பல்வேறு வேலைகளுக்கிடையில், நான் நினைத்தபடி அந்தப் பத்திரிகையை முழுமையாகக் கொண்டு வர முடியாமல் போனதுதான்!'' என்கிறார் அவர்.

●● சுசீந்திரம் கோயில் சிற்ப வேலைகளுக்காகக் குடிவந்தவர்களின் பரம்பரையினர் இன்னமும் மைலாடியில் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் 'மைலாடி கல்(சிற்ப) தொழிலாளர்கள் சங்கம்' என்ற பெயரில் ஒரு சங்கத்தை ஏற்படுத்தி, சிற்பிகளின் திறமைக்கேற்ப அம்மிக்கல் செய்வது முதல், வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் கல் சிற்பங்கள் செய்வது வரை வேலைகளைப் பிரித்துக் கொண்டு செய்கிறார்கள். காணிமடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள யோகி ராம் சுரத்குமாரின் சிற்பம் கூட இவர்கள் செய்ததுதான். இவர்கள் அனைவருக்கும் போதுமான அளவுக்கு வேலை கிடைக்கிறதா? ''என்ன அப்படிக் கேட்டு விட்டீர்கள்? இன்னும் பல சிற்பிகள் வந்தால் கூட அவர்களுக்கும் எங்கள் சங்கத்தால் வேலை தர முடியும்!'' என்கிறார் தலைமைச் சிற்பி நல்லதாணு.



● மைலாடி : அம்மி முதல் சிற்பம் வரை...

●● உயிரோடிருக்கும் எந்த மகானுக்காவது சிலை வடித்துப் பிரதிஷ்டை செய்து அபிஷேக ஆராதனைகள் செய்யப்படுகிறதா? காணிமடத்திலுள்ள யோகி ராம்சுரத்குமார் மந்திராலயத்தில் செய்யப்படுகிறது. மலர்த் தோட்டத்தின் நடுவே அமைந்துள்ள மந்திராலயம் பார்க்கப்


● நல்லதாணு : ''வேலைக்கு ஆள் தேவை!''




● பத்மநாபன் : ''இன்னும் கெஜட் இல்லை!''



● எம். சி. பாலன் : தொழிலுக்கு யோசனை





● காணிமடம் : கண்ணுக்கு ரம்மியம்

பார்க்க ரம்மியமாக இருக்கிறது.

●● நாகர்கோயில் அருகிலுள்ளது வெள்ளமடம். அங்குள்ள கடலை மாடசாமி கோயில், தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. கோயிலை ஒட்டி ஒரு புளிய மரம். போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கிறதென்று அதை நெடுஞ்சாலைத் துறையினர் வெட்டப் போக, ஊர் மக்கள் அந்தப் புளியமரத்தின் கொட்டைகள் மற்ற புளியங்கொட்டைகள் போல் அல்லாமல், கடலை மாடசாமியின் சிலை வடிவம் போலவே அமைந்திருப்பதால் மரத்தை வெட்டக் கூடாது என்று நீதிமன்றம் போனார்கள். அந்தக் கொட்டைகளை நேரில் பார்த்த நீதிமன்றமும் மக்களின் கருத்தை ஏற்றுக் கொண்டு, மரத்தை வெட்டுவதற்குத் தடைவிதித்து விட்டது!

●● மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் அரபிக் கடலை ஒட்டியுள்ள கிராமம் புத்தளம். சில காலம் வட இந்திய யாத்திரை மேற்கொண்டு, மீண்டும் தமது சொந்த ஊருக்குத் திரும்பி வந்த சுமார் முப்பது வயதுக் கிறிஸ்துவ இளைஞரான மனோகரன் இப்போது அவ்வூர் மக்களின் வழிபாட்டுக்குரியவராகி விட்டார்! கடற்கரை மணலில் ஒரு சிறு ஓலைக் குடிசை. அதைச் சென்றடைவதற்காகத் தென்னந்தோப்புக்கு நடுவில் தென்னை மரங்களை வெட்டிப் புதிதாகப் பாதையும் போட்டிருக்கிறார்கள்!

நீண்ட முடியும் காவியுடையுமாகப் பகவத் கீதையைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் அந்த கிறிஸ்துவ இளைஞர், யாருடனும் பேசுவதில்லை. எப்போதும் மௌனம்தான். தங்கள் குறைகளும் நோய்களும் தீர வேண்டி, அண்டை அயல் கிராமங்களிலிருந்தெல்லாம் மக்கள் வந்து குடிசையைச் சுற்றி வலம் வருகிறார்கள். பிறகு அவர் தரும் கடற்கரை மணல் உருண்டையை நீர் நிரம்பிய பாத்திரத்தில் வாங்கிக் கொண்டு செல்கிறார்கள். பிறகு அந்த நீரை அருந்தி வர, நோய்கள் தீருவதாக மக்கள் நம்புகிறார்கள்.

●● நாகர்கோயில் பஸ் நிலையத்தை, நெரிசல் காரணமாக நகருக்கு வெளியே உள்ள வடசேரிக்கு மாற்றி ரொம்ப நாள் ஆகிறது. புதிய பஸ் நிலையம் கட்டப்பட்டுக் கூட நீண்ட நாள் ஆகிறது. ஆயினும் இன்னமும் இது திறந்து வைக்கப்படவில்லை. காரணம், ஜெ.வுக்குத் தோதான தேதி கிடைக்காததுதானாம்!

●● கன்னியாகுமரி மாவட்டத்தில் வழங்கப்படும் சொற்களைக் கொண்டு ஒரு புதிய தமிழ் அகராதியே தயாரிக்கலாம். உதாரணத்திற்குச் சில : தாக்கோல் - சாவி; உருப்படி - நகைகள்; சப்பட்டை - பயனில்லாதது; கொள்ளாம் - போதும்; பச்சக்காரன் - நண்பன்; ஊச்சாளி - குண்டன்; கச்சவடம் - வியாபாரம்; தப்பளையன் - அறிவற்றவன்; தேச்சியம் - கோபம்...

●● "நெல், ரப்பர், தேங்காய் இந்த மூன்றும்தான் கன்னியாகுமரி மாவட்டத்தில் சமவிகிதத்தில் விளைகின்றன. கடலில் தரமான மீன்களும் கிடைக்கின்றன. ஆனால் இவை அத்தனையும் கேரள வியாபாரிகளின் வியாபாரத்துக்குத்தான் பயன்படுகின்றன. காரணம், இவற்றை மூலப் பொருளாகக் கொண்ட பெரிய தொழிற்சாலைகள் ஏதும் எங்கள் மாவட்டத்தில் இல்லாததுதான். இந்த நிலை மாறினால் எங்கள் மாவட்டம் மேலும் சிறந்து விளங்கும்!" என்கிறார் முன்னாள் எம்.பியும் இன்றைய தொழிலதிபருமான எம். சி. பாலன்.

– நமது நிருபர்கள்

தகவல் தந்த வாசகர்கள் :
எல். அலமேலு மணி, எம்.ஜியோபிரகாஷ், வெள்ளமடம் அரவிந்த், ப. இராம்முருகன், மீனாக்ஷிசுந்தரம், என். முத்துகிருஷ்ணன்.

அடுத்த இதழ்...

புத்தாண்டு ஸ்பெஷல்!

● 'கிரேஸி கமெண்ட்ஸ் – 1994'

– கிரேஸி மோகன் வழங்கும் ஜெஜூவில் கேட்கும் கவர் ஸ்டோரி!

● அண்ணா சாலையில் 'ஜெ' மாளிகை!

கல்கி சந்தாதாரர்களுக்கு ஈகிள் டயரி இலவசம்!

வாருங்கள், வி.ஐ.பி.களுடன் கைகுலுக்கலாம்!

சென்னை புத்தகக் கண்காட்சியில் இவ்வாண்டு கல்கி நிறுவனம் பங்கேற்கிறது. அண்ணா சாலை, காயிதே மில்லத் பெண்கள் கலைக் கல்லூரித் திடலில், டிசம்பர் 25 முதல் ஜனவரி 2 வரை நடைபெறும் இக் கண்காட்சிக்கு, உங்களை அன்புடன் அழைக்கிறோம். கல்கி ஸ்டாலுக்கு வந்தால் சில வி.ஐ.பி.களைச் சந்திக்கும் வாய்ப்பும் இருக்கிறது.

டிசம்பர் 26 மாலை 5:30
டைரக்டர் கே. பாலசந்தர்

டிசம்பர் 29 மாலை 5:30
கவிஞர் வைரமுத்து

டிசம்பர் 30 மாலை 5:30
கிரிக்கெட் வீரர் ஸ்ரீகாந்த்

ஜனவரி 1 மாலை 5:30
ஓவியர் கோபுலு

ஜனவரி 2 மாலை 5:30
எழுத்தாளர் சிவசங்கரி

ஆகியோர் கல்கி ஸ்டாலின் சிறப்பு விருந்தினர்கள்.

புத்தகக் கண்காட்சிக்கு நேரில் வரும் கல்கி அன்பர்கள் ஓராண்டுச் சந்தா ரூ 156 செலுத்தி 1994-ம் ஆண்டுக்கான ஈகிள் டயரி ஒன்றினை இலவசமாகப் பெறலாம். முதல்தரத் தயாரிப்பான இந்த ஈகிள் டயரி கணிசமான விலைமதிப்புடையது என்பது ஒருபுறமிருக்க, கல்கி விநாயகரின் அருளாசியுடன் உங்களுக்குக் கிடைக்கிறது.

கண்காட்சிக்கு நேரில் வர முடியாத சென்னை கல்கி அன்பர்களும் வெளியூர் வாசகர்களும் கூட ரூ 156க்கு டிராஃப்ட் அல்லது எம்.ஓ. அனுப்பி, தபால் மூலம் இந்த டயரியைப் பெறலாம். ஏற்கெனவே சந்தாதாரர்களாக உள்ளவர்களும் மேலும் ஓராண்டுக்கு சந்தாவைப் புதுப்பித்துக் கொண்டு இப் பரிசைப் பெறலாம். வெளியூர் செக்குகள் கண்டிப்பாக ஏற்கப்பட மாட்டாது. டிராஃப்ட் அல்லது எம்.ஓ. ''மானேஜர், கல்கி'' என்ற பெயரில் அனுப்பவும்.


கடைசி தேதி : ஜனவரி 20.

ஸ்டாக் உள்ளவரை மட்டுமே இந்த டயரிகள் விநியோகிக்கப்படும் என்பதால் முந்திக் கொள்ளவும்.

புத்தாண்டு வாழ்த்துக்கள்!
ஆசிரியர், கல்கி

விலாசம் : கல்கி காரியாலயம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.

17th MADRAS BOOK FAIR



சரியான அரசியல் தேளு! என்னைக் கொட்டாது, கடைசியில கட்சியை அழியப் போகுது!...
ரங்கராஜன் குமாரமங்கலம்
அந்தாளுக்கு ஏழைகளைப் பத்தி ஒரு எழவும் தெரியாது!
தமிழ் நாடு காங்கிரஸ் இ(ஸ)சை விழா...
இந்தாளு, பாடற லட்சணத்துக்கு இதுதான் கடைசிக் கச்சேரி!
ஐயோ, ஒரே அபஸ்வரம்...
அன்பரசு
குமாரமங்கலம்
வாழப்பாடி
தங்கபாலு
சரிகம... நிதபம...
வீரப்பன் எங்கே இருக்கான்னு இனிமேலாவது சொல்லு... ஆனா, சர்வரை மாட்டி விட்டுடாதே!...
காவல்துறை கம்ப்யூட்டர் மையம்
அதான் நவீனப் படுத்தலுக்கு 10 கோடி ஒதுக்கியிருக்கே, என்ன செய்யுதோ, பார்ப்போம்!



கல்கி



1993
டிசம்பர் 26
மலர் : 52
இதழ் : 22
ஸ்ரீமுக
மார்கழி 11

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.

சிறுமுதலீட்டாளருக்குப் பேரிடி!

கிறிஸ்துமஸ், புத்தாண்டு வாழ்த்துக்கள்.

கிறிஸ்துமஸ் என்றதுமே அன்பே வடிவமான ஏசுபிரானின் நினைவு மட்டுமின்றி, "கிறிஸ்துவத் துறவி லாரன்ஸ்" நூல் எழுதியதுடன், அன்புமயமான வாழ்க்கை நடத்தி, கிறிஸ்துமஸ் தினத்தன்றே அமரத்துவம் அடைந்த ராஜாஜியின் நினைவும் வரும். ஏசுவின் செய்தியும் ராஜாஜியின் எடுத்துக்காட்டான வாழ்க்கையும்தான் இன்று நாட்டுக்குத் தேவை. ஏசு, புத்தர், காந்தி எல்லோரையும் மறந்து, 'கருத்துச் சுதந்திரம்' என்ற பெயரில், நாம் பகை உணர்வையும் மதத்துவேஷத்தையும் வளர்க்க, இன்று அது 'குண்டு கலாசார'மாக மலர்ந்திருக்கிறது!

ஜனநாயகத்தில் மாற்றுக் கருத்து என்பது இன்றியமையாதது என்றாலும் அந்தக் கருத்துச் சுதந்திரம், கட்சிக்குள்ளேயும் எதிர்க்கட்சி என்ற அளவிலும் ஆரோக்கியமான விதத்தில் செயல்பட வேண்டும். வெறுப்பும் வன்மமுமாக உருமாறக் கூடாது. தம்மை எதிர்த்தவர்களிடமும் சகோதர பாசம் காட்டியவர் ராஜாஜி. மதுவிலக்கை ரத்து செய்து, தமது மனம் நோகச் செய்த கருணாநிதியிடம் கூட மரணப் படுக்கையில் சகோதர அன்பை வெளிப்படுத்தியவர். நேருவையும் அவர் மகள் இந்திராவையும் அவர்களது சோஷலிஸ சித்தாந்தத்துக்காக எதிர்த்து, பேசி – எழுதினாலும் அவர்களிடம் பாசம் வைத்திருந்தார். 'கருத்து மாறுபாடு என்பது அன்புக்கு இடையூறு இல்லை' என்பதை இன்றைய சிறிய பெரிய அரசியல் தலைவர்கள் உணர்ந்து நடந்தால், நமது அரசியல் துர்நாற்றம் விலகுவதாக அன்றி, மணம் பரப்புவதாக மாறிச் செம்மைப்படும்.

இந்தியாவின் தொழில் – பொருளாதார முன்னேற்றத்துக்கு, இன்றைய நிதி அமைச்சர் ராஜாஜியின் சுதந்திரா கருத்துக்களைத்தான் ஏற்று, அமுல்படுத்தி வருகிறார். எந்த காங்கிரஸ், ராஜாஜியின் சுதந்திரா கட்சியை "பணக்காரர்கள் கட்சி" என்று அவதூறு சுமத்தி, ஏசியதோ, அதே காங்கிரஸ், இன்று சுதந்திரா கொள்கைகளை சுவீகரித்துக் கொண்டு ஆட்சியில் அமர்ந்து நிறைவேற்றி வருகிறது! இன்னும் நடக்க வேண்டியது எவ்வளவோ இருந்தாலும் இப்போதே கணிசமான முன்னேற்றம் தெரிகிறது. இதை உலகமே ஒப்புக் கொள்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் சுதந்திரப் பொருளாதாரத்தின் ஆணிவேரையே தோண்டி, வெந்நீர் ஊற்றும் காரியம் ஒன்றும் நடைபெற்றுள்ளது!

நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு உதவுவோர் தொழிலாளர்களும் தொழிலதிபர்களும் மட்டுமல்ல; பின்னவர் முதலீடு கோரி பங்கு மார்க்கெட்டுக்கு வரும் போது, அப் பங்குகளை வாங்கிப் பணம் தரும் கோடிக்கணக்கான சிறிய, பெரிய முதலீட்டாளர்களும் உதவுகிறார்கள். இவர்களில் ஆயிரம் ரூபாய் தந்து, குறைந்தபட்சமான நூறு பங்குகள் பெறுவோர்தான் ஏராளம். இத்தகைய லட்சக்கணக்கான எளிய முதலீட்டாளர்களுடன், தபால் தொடர்பு கொள்வது, நிறுவனங்களுக்குச் சற்றுச் சிரமமாக இருக்கலாம். ஆனால் இவர்களே தொழில் முன்னேற்றத்துக்கு முதுகெலும்பு. இவர்களின் வயிற்றில் அடிப்பது போல், 'இனி குறைந்தபட்சம் ஐந்நூறு பங்குகளுக்குத்தான் விண்ணப்பிக்க வேண்டும்' என்று Securities and Exchange Board of India தீர்மானித்து, அதன்படி தொழிலகங்களுக்குச் சுற்றறிக்கையும் அனுப்பியிருப்பது அனுசிதம் மட்டுமல்ல; அநீதியும் கூட. இவர்கள், தங்கள் பங்குகளின் மதிப்பு உயரும் என்று எதிர்பார்ப்பதுடன், 'நாட்டின் வளர்ச்சிக்கு ஏதோ நம்மாலான உதவி செய்கிறோம்' என்ற மனத்திருப்தியும் அடைகிறார்கள். இதை மறுப்பது, அனைவருக்கும் சமவாய்ப்பு, சம நீதி என்ற ஜனநாயகப் பண்புக்கு முற்றிலும் முரணானது.

'சிறு முதலீட்டாளர்கள் யூனிட் டிரஸ்ட் போன்ற அமைப்புக்களை நாடலாம்' என்ற சமாதானம் செல்லாது. இப்படி சிறு முதலீட்டாளர் சார்பில், வேறு யாரோ ஏஸி அறையில் அமர்ந்து முடிவெடுப்பதை அனுமதிக்கவே முடியாது. ஆரோக்கியமான நல்ல நிறுவனங்களில் பெறப்படும் பங்குகளின் மதிப்பு உயர்வது போல், யூனிட்டுகளின் மதிப்பு உயரவே செய்யாது. வசதி படைத்தவர்களிடம் முதலைப் பெற்று விடலாம்; ஆனால் சிறு முதலீட்டாளருக்கு இந்த முடிவு பெரும் அநீதி இழைத்ததாகும். அவர்கள் உணர்வுகளை நசுக்குவதாகும். நிதி அமைச்சர் இதைக் கவனித்து, உடனே மாற்று உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

"பாதிக்கப்பட்டவர்கள் நிலையில் பிரச்னைகளைப் பார்க்க வேண்டும்!"



"குமரி மாவட்டத்தில், கடந்த 1982-ல் நடந்த (மண்டைக்காடு) சம்பவத்திற்குப் பிறகு, பெரிய அளவில் ஏதும் மதக்கலவரம் இல்லாதவாறு பார்த்துக் கொள்வதில் போலீஸ் வெற்றி பெற்றுள்ளது. காரணம், ஒரு பிரச்னை தோன்றும் போது முளையிலேயே கிள்ளி எறிந்து விடுவதுதான். இதற்கு ஒற்றுப் பணி செய்ய இங்கே அருமையான நெட் ஓர்க் இருக்கிறது. காதும் காதும் வைத்தாற்போல விஷயத்தை முடித்து விடுகிறோம்'' என்கிறார் குமரி மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர் ச.கு. டோக்ரா.

இவரைச் சந்திப்பது யாருக்கும் சுலபம். யார் சிபாரிசும் தேவையில்லை. நாங்கள் சென்ற சமயம் (இரவு 8 மணி) கூட கிராமத்திலிருந்து வந்திருந்த உடல் ஊனமுற்ற ஒருவர், தமது பிரச்னையைச் சொல்லக் காத்திருந்தார்!

''திங்கட் கிழமைதோறும் நான் பொது மக்களிடமிருந்து மனுக்கள் பெறுகிறேன். உடனுக்குடன் விசாரித்து உண்மையைத் தெரிந்து கொள்கிறோம். இதன் பலன் என்னவென்றால் பொய் மற்றும் அவதூறுப் புகார்களின் எண்ணிக்கை முழுமையாகவே குறைந்திருக்கிறது'' என்றார் டோக்ரா.

புகார்களைப் பெற நடமாடும் புகார்ப் பிரிவு ஒன்றையும் துவக்கியிருக்கிறார் இவர். பெண் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் தலைமையில், பெண் வழக்கறிஞரையும் கொண்ட குழுவொன்று மாவட்டத்திலுள்ள பல கிராமங்களுக்கும் சென்று புகார்களைப் பெறுகிறது. காவல் துறை சம்பந்தப்பட்ட புகார்களைத் தவிர சுகாதாரம், மின் விநியோகம், பட்டா வழங்குவது என்று பல தரப்பட்ட புகார்களும் இவர்களிடம் தரப்படுகின்றனவாம். ''அவையெல்லாம் எங்கள் காவல் துறை சம்பந்தப்பட்டதல்ல என்று நாங்கள் வாங்க மறுப்பதில்லை. மாறாக, அவற்றைப் பெற்றுக் கொண்டு வந்து, சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைக்கிறோம்!'' என்கிறார் டோக்ரா.

இவருக்கு அறிவொளி திட்டத்திலும் ஆர்வம் அதிகம். ''படித்தவர்கள் அதிகம் இருக்கும் இந்த மாவட்டத்தில் அறிவொளி இயக்கம் தேவைதானா?'' என்று கேட்டால் ''உடல் நிலை நன்றாக இருப்பவன் உடற்பயிற்சிகள் செய்யக் கூடாதா?'' என்று திருப்பிக் கேட்கிறார் டோக்ரா!

நாகர்கோவிலிலுள்ள ரெயில்வே ஸ்டேஷனுக்குச் செல்லும் சாலையைப் பகல் முழுக்க சரக்கு லாரிகள் ஆக்ரமித்துக் கொள்வதால் பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறுகளை எடுத்துச் சொன்ன போது, ''இந்தப் பிரச்னை எனக்கும் தெரியும். ஒரே நாளில் அங்கு லாரிகள் செல்ல முடியாதபடி தடுத்து விட முடியும். அப்படிச் செய்தால் எதிர்ப்புத்தான் கிளம்பும். அதனால் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்து பேசித் திட்டம் வகுத்தால்தான் அதை நன்கு அமுல்படுத்த முடியும். அதற்கான ஏற்பாடுகளை இப்போது செய்து கொண்டிருக்கிறோம். விரைவில் ஒரு நல்ல முடிவை எடுத்து விடுவோம்!'' என்று சொல்லும் டோக்ரா பஞ்சாப்காரர். சொந்த ஊர் குருதாஸ்பூர் (பயங்கரவாதிகளின் கோட்டை) அருகே உள்ள ஹரிவால் கிராமம். இலக்கியத்தில் பட்டமேற்படிப்பை முடித்து விட்டு, இரண்டு வருட காலம் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றிய பிறகு, காவல் பணிக்கு வந்தவர். நன்றாகத் தமிழ் பேசும் இவர், தமிழில் சிறுகதைகளும் கவிதைகளும் கூட எழுதுகிறார்!

''தவறு செய்தவனைப் பிடிப்பதும், சட்டத்தின் அடிப்படையில் அவனுக்குத் தண்டனை வாங்கித் தருவதும்தான் காவல் துறையின் நடைமுறைப் பணி. ஆனால் பாதிக்கப்பட்டவன் நிலையில் • நம்மை வைத்துப் பார்த்தால், பிரச்னையை அணுகுவது எளிமையாக இருக்கும். அந்த மனிதாபிமானத்தை இலக்கியம் எனக்குக் கற்றுத் தந்துள்ளது!'' என்கிறார் டோக்ரா.

சந்திப்பு : தில்லப்பா



‘‘மாதங்களில் மார்கழி நான்.



பகவான் கூறுகிறார்:

சூரியோதயத்துக்குச் சற்று முன்புள்ள நேரம் பிரம்ம முகூர்த்தம் எனப்படுகிறது. ஆத்ம சாதனத்துக்கு அது சிறந்த வேளையாகும். மனிதர்களுடைய ஒரு வருஷம் தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். தை மாதமாகிய உத்தராய புண்ணிய காலம் அவர்களுக்கு சூரியோதயம். அதிலிருந்து உத்தராயணம் ஆறு மாதம் அவர்களுக்கு பகல். ஆடியிலிருந்து மார்கழி வரையில் தக்ஷிணாயணம் அவர்களுக்கு இரவு. அதில் மார்கழி மாதம் விடியற்காலம் தேவர்களது நாளில் பிரம்ம முகூர்த்தமாகிறது. அப்பொழுது செய்யும் தேவாராதனை, வந்தனை, வழிபாடு முதலியன மனதை நன்கு பண்படுத்த வல்லவைகளாம். இங்ஙனம் மார்கழி மாதம் புலனடக்கம், கடவுள் வழிபாடு ஆகியவைகளோடு முழுதும் இணைக்கப்பட்டிருக்கிறபடியால் மாதங்களுள் தாம் மார்கழி மாதம் என்கிறார் பகவான்.

ஸ்வீட்களில் சிறந்தது **கிராண்ட் ஸ்வீட்ஸ்**

இனிப்புகள்:— மங்களூர் போளி, ரஸமலாய், ஸோன்பப்டி, இனிப்பு சோமாஸ், பொரிவிளங்காய் உருண்டை, தேங்காய் கோவா குங்குமப்பூ ஹல்வா.

காரவகைகள்:— தட்டை, தேன்குழல், கைமுறுக்கு, சீடை, ஸ்பெஷல் மிக்ஸர், சீப்புச்சீடை, இரயில்கட்டிடம், வறுபயறு, விஜிடபிள் சமோசா.

பொடிவகைகள்:— கருவேப்பிலைபொடி, பருப்புப்பொடி, இட்லிபொடி, ரசப்பொடி, சாம்பார்பொடி, உறுகாய்பொடி.

திருமண வைபவங்களுக்கு:— சீர்முறுக்கு, சீர்அதிரசம், முள்ளுத்தேன்குழல், பருப்புத் தேங்காய் வகைகள், திரட்டுப்பால், அப்பம் முதலியன.





தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு,
சென்னை-600 020.
போன்: 412557

திருச்சியிலிருந்து திருவோணம் வரை...

உச்சி வெயிலில் மத்திய பேருந்து நிலையம் புழுங்கிக் கொண்டிருந்தது.

கைக்குட்டையால் முகம் துடைத்து, பஸ்ஸை ஒரு நோட்டம் விட்டான், அரவிந்தன். அவ்வளவாகக் கூட்டம் இல்லை.

பட்டுக்கோட்டை பஸ்.

எப்போதும் இப்படித்தான்.

நிறுத்தி இருக்கும்போது ஒருத்தரும் வர மாட்டார்கள்.

பஸ் கிளம்பி, மெள்ள ஊர்ந்து, நிலையத்தை விட்டு வெளியேறும்போது, பிசிறு பிசிறாய்க் கூட்டம் சேர்ந்துவிடும்.

சென்ற முறை அப்படித்தான் சேர்ந்தது.

இரண்டு மாதங்களுக்கு முன்பு.

அக்கா எழுதி இருந்தாள்.

ஊரணிபுரத்தில் வாழ்க்கைப்பட்டவள். பாப்பா நாடுதான் சொந்த ஊர். அப்பா, அம்மாவுக்குப் பிறகு இப்போது அங்கே யாரும் இல்லை. அரவிந்தன் உத்தியோக மாகி இங்கே - திருச்சிராப்பள்ளிக்குக் குடியேறிவிட்டான். அடிக்கடி போய் அக்காவைப் பார்ப்பான். ஆனால், கடந்த ஏழெட்டு மாதங்களாக அப்படி முடியவில்லை. அதனால்தான் எழுதி இருப்பாளோ!

புரியாத குழப்பத்துடன் போனவனிடம் -

''ஏம்பா... எழுதிக் கூப்பிட்டால்தான் அக்காவைப் பார்க்க வருவாயா...?'' என்று ஆதங்கப்பட்டாள், மாலதி.

''அதில்லை அக்கா. ஆபீஸ் பிடுங்கல் அதிகமாயிடுச்சு. போதாக் குறைக்கு ஈவினிங் காலேஜில வேறு சேர்ந்துட்டேனா, ராத்திரி எட்டு........ ஒன்பதாகிறது, வீடு போய்ச்சேர... கஸினையப் பற்றிச் சொல்ல வேண்டாம். வெளியில் கால் வைக்க மாட்டான். ஐம்பது காக மிளகாய்க்குக் கூட நான் தான் ஓடணும். ம்... அத்திம்பேர் எங்கே...?''

''வயலுக்குப் போய் இருக்கார்.''

''சங்கர்?''

''களத்து மேட்டில் கிரிக்கெட் ஆடுவான்.''

''இந்த வருஷம் எட்டாம் வகுப்பு எழுதி இருப்பானே?''

''ஆமாம். உன்னை இப்ப வரவழைச்சதே அவன் விஷயமாய்த்தான்.''

''பாஸ் பண்ணிடுவான் இல்லே...?''

''ஓ... அதெல்லாம் கெட்டி. படிப்பு நல்லா வருது. ஆனால்... இந்த ஊர் லாயக்கில்லை. பள்ளிக்கூடம் சரியில்லை. டீச்சர்கள் போதாது. வரக் கூடியவர்களும் ஒழுங்காப் பாடம் நடத்தறது இல்லையாம். பௌதிகம்... ரசாயனம் சம்பந்தமா பரிசோதனை பண்ணணும்னா... வசதி கிடையாது. பள்ளிக்கூடக் கட்டடத்தைப் பார்த்தாலே படிக்கிற ஆசை போயிடும்.''

''ஆமாம். வழியிலே பார்த்தேன்.'' சிரித்தான்.

''மேல் படிப்பு போறதுன்னா இங்கே படிக்கப் பிரயோஜனமில்லை... மார்க் வராது. அதனாலேதான் ஒன்பதாம் கிளாஸிலே இருந்து சங்கரை திருச்சியிலே சேர்த்துப் படிக்க வைக்கலாம்னு முடிவு பண்ணி இருக்கிறோம். உன்னாலே முடியுமா, அரவிந்த்?''

''என்னக்கா நீ... முடியுமாவது. அது என் கடமையாச்சே. சந்தோஷமாச் செய்யறேன். வீட்டுக்குப் பக்கத்திலேயே ஒரு நல்ல ஸ்கூல் இருக்கு. அங்கே சேர்த்திடலாம்.''

கரை புரளும் வெள்ளத்தில் கலயம் கொண்டு நீர் மொள்ளுவது போல் கலபமாய் நினைத்தான், அரவிந்தன்.

ஆனால் அது கானல் நீர் என்பது இங்கு வந்த பிறகுதான் புரிந்தது.

பள்ளி விட்டுப் பள்ளி - அதுவும் ஊர் விட்டு ஊர் வரும் மாணவர்களைச் சேர்க்க மாட்டோம் என்று விண்ணப்ப மனுவைக் கூட கண்ணில் காட்ட மறுத்து விட்டார்கள்.

அரவிந்தன் முகம் வியர்த்தான்.

தலைவாசல் நந்திகளை மீறித் தலைமையாசிரியரைப் பார்த்தான்.

''தயவு செய்து தொந்தரவு பண்ணாதீங்களேன்'' என்றார் அவர், தலைநிமிராமல்.

தாளாளர் வீட்டுக்குச் சென்றான்.

''ஷரி... ஷரி... ஹெச். எம்மை மீறி நான் எதுவும் பண்ணறதில்லே.''

கிழிந்த நாராய்க் கசங்கிப் போயிற்று மனம்.

ஃபைலைப் பிரித்து வைத்துக் கொண்டு கையாலாகாதவனாய் உட்கார்ந்திருந்தான், அரவிந்தன்.

அப்போதுதான் அந்தப் பாலைவன மழை பெய்தது.

''அரவிந்தா... அந்த ஸ்கூலுக்கு வருஷா வருஷம் நம் கம்பெனியில் இருந்து



டொனேஷன் தருகிறார்கள். அதுக்காக நமக்கு ஏதோ கோட்டா உண்டு போல. எதுக்கும் மேலிடத்தில் யாரையாவது பாரேன்'' - தோளைத் தொட்டுச் சொன்னான், நண்பன். இப்படித்தான்... ஈஸ்வர சங்கல்பம் இருந்தால், யார் மூலமாவது செய்தி வந்து விடுகிறது.

காது குளிர்ந்தான், அரவிந்தன்.

அடுத்த நிமிடமே ஜி. எம். ஆபீசுக்கு ஓடினான்.

காலில் விழுந்தான்.

கை தூக்கி விட்டார் அந்த அதிகாரி.

விண்ணப்பம் கிடைத்தது.

விண்ணுலகமே கைக்கு வந்தது போல் கூத்தாடினான்.

ஆனால், நுழைவுத் தேர்வு எழுத வேண்டும் என்ற விதிமுறையைக் கேள்விப்பட்ட போது, அவனது நாடித் துடிப்பு மறுபடியும் கீழே விழுந்தது.

நகராந்திரப் பள்ளி ஸ்டாண்டர்டு கொஞ்சம் அதிகமாய் இருக்கும்.

சங்கர் கிராமத்தில் படித்தவன்.

அவனால் ஈடுகொடுக்க முடியுமா? எட்டிப் பிடிப்பானா?

உடனே சங்கரை வரவழைத்தான்.

ஒரு வாரம் லீவு போட்டு விட்டுப் பாடம் சொல்லிக் கொடுத்தான். திருப்தி இல்லை.

அப்பள்ளி ஆசிரியர் ஒருவரைப் பிடித்து டியூஷன் எடுக்கச் செய்தான். ஆனால் -

''மிஸ்டர் அரவிந்த்... எனக்குப் பணம் தந்து டியூஷன் வைக்கிறதாலே அட்மிஷன் ஆகிடும்னு நினைச்சுடாதீங்க. ஹெச். எம். இந்த விஷயத்திலே

ரொம்பவும் ஸ்டிரிக்ட். எல்லாம் உங்கள் பையன் கையிலேதான் இருக்கு.'' முன்னெச்சரிக்கையாய்த் தன்னை ஓரங் கட்டிக் கொண்டார், அந்த ஆசிரியர்.

'கடவுளே... அப்பனே... ஆஞ்சநேயா... என் ஒரே அக்காவின் ஒரே ஆசை... வாய் விட்டுக் கேட்டுட்டா... நானும் செய்து முடிச்சுடறதாக வாக்குக் கொடுத்துட்டேன். அதைக் காப்பாத்திடு... பகவானே... என் சங்கர் பரீட்சையிலே பாஸாயிடணும்... நான் செய்ய வேண்டியதெல்லாம் செய்துட்டேன். இனி நீதான்... நீதான் அவனைப் பாஸ் பண்ண வைக்கணும். கைவிட்டுடாதே... காப்பாற்று... எல்லை அம்மன் முதல் ஏழுமலையான் வரை ஒரு தெய்வம் பாக்கி விடாமல் வேண்டினான்.



சித்திரகுப்தன் : பிரபோ! இந்த ஆளுக்கு ஒண்ணும் சலுகை காட்டாதீங்க... ஆயிரம் ஸ்ரீராம ஜெயம் எழுதறேன்னு நேர்ந்துக்கிட்டானே தவிர, நாறு எழுதி... ஜெராக்ஸ் எடுத்துட்டான்!

- கார்த்திக்

பஸ்ஸில் இப்போது கூட்டம் சேர்ந்து விட்டது. இருக்கைகள் எல்லாம் நிரம்பிக் கடைசியாய் ஏறிய 'லோக்கல்' டிக்கெட்டுகள் நின்றன.

எல்லாம் சீருடை அணிந்த மாணவர்கள். மீசை அரும்பியும் அரும்பாமலும்.

அரவிந்தனின் பக்கத்தில் ஒரு மாணவன். துறுதுறு கண்களுடன் துடியாய் இருந்தான். அவனோடு வந்த சகாக்கள், அவனைச் சூழ்ந்து கொண்டு நின்றார்கள்.

அவர்களில் ஒருவன், ''டேய் சதீஷ். பகாளா பாத்'' என்றான். குரலில் எகத்தாளம். குறிப்பிட்டுச் சொன்ன விதத்தில் ஒரு நையாண்டி.

''எங்கேடா?''

''அதோ டிரைவர் ஸீட்டுக்குப் பின்னாடி.''

உட்கார்ந்திருந்த மாணவன் எட்டிப் பார்த்தான்.

''அட... ஆமாம்... இந்த ஓல்ட் டாக் இங்கே எங்கே வந்தது?''

''ஏதானும் வேலையாய் வந்திருக்கும். காலிலே என்னவோ கட்டுப் போட்டிருக்காரே?''

''ஆமாம். பெருவிரலிலே ஃப்ராக்சர். பாத்ரூமிலே வழுக்கி விழுந்துட்டாராம். விழுந்தாரே, ஒரேயடியாய் விழுந்து தொலையக்கூடாது? சை... சாஸிறதிலே கூட ராசி இல்லாத ஆளுங்கப்பா.''

''இங்கே கூப்பிட்டு 'ரூட்' விடலாமா?''

''வேண்டாம்பா... வேண்டாம். அந்த மூஞ்சியைப் பார்த்தால் மூணு நாளைக்குச் சாப்பிட முடியாது...''

''அத்தனை அருவருப்பானவரா?'' அரவிந்தன் குறுக்கிட்டான்.

''இல்லை, சார். வெறுப்பு. கிளாஸிலே நம்பர் ஒன் போர் யாருன்னா இந்த மனுஷன்தான்.''

''டீச்சரா?''

''அந்தப் பொறுக்கிதான்.''

''என்ன தம்பி... டீச்சரை அப்படிச் சொல்லலாமா?''

''உங்களுக்கு ஏன் பொத்துக் கொண்டு வருது?''

''என்ன இருந்தாலும் கல்வி போதிக்கும் ஆசான் இல்லையா?''

''அவர் ஒண்ணும் இனாமாச் சொல்லித் தரலை. சம்பளம் வாங்கிக் கொட்டிக்கிறார்.''

''சம்பளம் அவர் உழைக்கிற நேரத்துக்குத்தான், தம்பி. ஆனால் அவர் செய்கிற சேவை உங்கள் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டது. அதுக்கு நீங்கள் மரியாதை தர வேண்டாமா?''

''ஏன் சார் நீங்கள் என்ன பாசஞ்சரா... பிரீச்சரா...?''

நின்ற மாணவர்கள் ஒன்று போல் சிரித்தார்கள்.

''டிக்கெட் வாங்கினா கம்மா வாயை மூடிக்கிட்டு வா, மேன்,'' என்றான் யாரோ ஒரு மாணவன் - முகத்தைக் காட்டாமல்.

அப்புறம் வாய் திறக்க அரவிந்தனுக்குப் பைத்தியமா என்ன? மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டாமா?

பஸ் நகர எல்லையைத் தாண்டியது. புறநகர்ப் பகுதிகளில் அடுத்தடுத்து மாணவ

மணிகள் அனைவரும் இறங்கி விட்டார்கள். இப்போது -

நெடுந்தொலைவு செல்லும் நிஜப் பிரயாணிகளே பாக்கி இருக்க, யோசிக்கத் துவங்கினான், அரவிந்தன்.

இன்று காலையில் ரிசல்ட் ஒட்டினார்கள்.

சங்கர், பாஸாகி விட்டான். நாளைக் காலையில் அவனுக்கு அட்மிஷன்.

அளவற்ற மகிழ்ச்சி அடைந்தான், முடிவைப் படித்த போது. பகீரத வெற்றியாய் எண்ணிப் பரவசித்தான். அவ்வானந்த கங்கையில் கசிவாவும் மூழ்கிக் களித்தான்.

மதியத்துக்குமேல் விடுப்பெழுதி விட்டு அரவிந்தன் இப்போது போய்க் கொண்டிருப்பது சங்கரை அழைத்து வரத் தான்.

ஆனால், சற்றுமுன் மாணவர்களுடன் ஏற்பட்ட அரைமணிநேர அனுபவம் அவனது மகிழ்ச்சியைச் சூறையாடிவிட்டது.

மரியாதை பற்றி ஸ்நானப் பிராப்திகூட தெரியாத இவர்களுடன் சேர்ந்து சங்கரும் படிக்க வேண்டுமா என்ற கேள்வி எழுந்தது.

நகரக் கல்வியில் ஞானம் வளரும். ஐ. க்யூ அதிகரிக்கும். உண்மைதான். ஆனால் மனிதப் பண்புகளும், மரியாதை உணர்வுகளும் பூஜ்யமாகிவிட்டதே!

பசு நெய்யை ஓட்டைத் தொன்னையில் பிடித்து என்ன பிரயோஜனம்?'

பஸ் திருவோணத்தில் நின்றது.

சாலைமருங்கில் படிந்து கிடந்த வைக்கோல் தூசுகளும், பொடி மணலும் பறந்து வந்து உள்ளே ஆக்கிரமிப்புச் செய்தன.

சுற்றுப்புற டவுன்கள் எல்லாம் எட்டி இருந்ததால்தானோ என்னவோ, இன்னும் அக்கிராமம் கிராமமாகவே இருந்தது. முட்டி மோதி பஸ் ஏறிய பிரயாணிகளின் முகத்தில் அப்பட்டமான கிராமியக் களை.

அவர்களுடன் சேர்ந்து மாணவர்களும் ஏறினார்கள். அப்போதுதான் கைக்கடியாரத்தைப் பார்த்தான், அரவிந்தன்.

மணி நான்கு. பள்ளிக்கூடம் விட்டிருப் பார்களோ?

சொல்லி வைத்தது போல் அரவிந்தன் பக்கத்திலேயே ஒரு மாணவன் உட்கார்ந்து கொண்டான். உட்கார்ந்தவன் கம்மா இருக்கவில்லை. இடைவெளியில் பார்வையை நுழைத்து வெளியில் யாரையோ தேடினான்.

அவனுடைய பரபரப்பு அரவிந்தனுக்கு ஆச்சரியமாய் இருந்தது. ''யாரைத் தம்பி பார்க்கிறாய்?'' என்றான்.

''எங்கள் சார் வர்றாரான்னு பார்க்கிறேன்.''

''உங்கள் டீச்சரா?''

''ஆமாம்.''

''வந்தால் வரட்டுமே?''

''அவருக்குத்தான் இந்த இடம். அவர் வந்ததும் நான் எழுந்திடுவேன்.''

சற்றுமுன் ஏற்பட்ட அனுபவத்துக்கு முற்றிலும் மாறாக இருந்தது அப்பையனின் பேச்சும், செய்கையும்.

அரவிந்தன் ஆர்வம் கூடினான்.

''அந்த டீச்சரால் ஏறி இடம் பிடிக்க முடியாதா...? வயசாயிடுச்சா?''

''இல்லை ஐயா. உங்களை மாதிரி சின்ன வயசுதான். இருந்தாலும் ஒரு மரியாதை இருக்குதில்லே. ஸ்கூலிலே பாடம்



"எல்லாருக்கும் வெள்ளிவாள் பரிசு கொடுக்கிறவங்க, நம்ம அண்ணனுக்கு மட்டும் ஏன் வெள்ளிக் 'கோடாலி'யைப் பரிசாக் கொடுத்திருக்காங்க?"

"என்ன இருந்தாலும் கட்சியைப் பிளந்தவர் ஆச்சே!"

– சீர்காழி வி. ரேவதி

சொல்லித் தர்ற ஆசிரியரை... இந்த சனங்களோட முட்டி மோதி ஏறவிட்டால் நல்லா இருக்குமா? அதனால்தான் நாங்கள் யாராவது முன்னாலே ஏறி டீச்சருக்கு இடம் பிடிச்சுடுவோம்...'' பெருமையும், மகிழ்ச்சியும் பொங்கி வழிந்தது அம்மாணவனிடம். ஒரு புனித யாத்திரையைப் பூர்த்தி பண்ணியவனைப் போல் வெற்றிக் களிப்புடன் பேசினான், அவன்.

''அதோ... எங்க சார் வந்துட்டார்!'' பந்துபோல் துள்ளி எழுந்தான், அம்மாணவன்.

அவன் காலி பண்ணிய இடத்தில் அந்த ஆசிரியர் வந்து அமர்ந்தார்.

அவரை வியப்புடன் நோக்கினான், அரவிந்தன். அது அவருக்குப் புரிந்திருக்க வேண்டும்.

''பாவம் சார் இந்தப் பையன்கள். சொன்னால் கேட்கிறதே இல்லை. இடம் இல்லேன்னா குடிமுழுகி விடாது. நின்று கொண்டே போகலாமென்றால் விட

மாட்டேனென்கிறார்கள். அடித்துப் பிடித்து ஏறி எப்படியோ இடம் போட்டு விடுகிறார்கள். இது ஒன்றுதான் எங்களுக்குச் சந்தோஷம். வசதிக் குறைவான இந்த ஊரிலே நாங்கள் உத்தியோகம் பார்க்கிறோமென்றால் அதுக்குக் காரணம் அப்பழுக்கற்ற இந்த மாணவர்களின் அன்பும், மரியாதையும்தான் சார்.''

ஆத்மார்த்தமாய்ப் பேசினார் அந்த ஆசிரியர். நின்றிருந்த மாணவர்களைப் பாசக் கனிவுடன் பார்த்தார்.

அரவிந்தனுக்கு உடம்பு சிலிர்த்தது.

பிரமித்தான். யோசித்தான்.

இக்குரு பக்தி, குரு மரியாதை நகரங்களைப் பொறுத்தவரையில் நசுங்கி நலிவடைந்து வருகிறது.

ஆனால் இங்கே... இக்கிராமத்தில் இன்னும் அந்த விசுவாச மணம் இருக்கிறது. நன்றி மறக்காத குணம் இருக்கிறது. இம்மண்ணில் காலூன்றும் மாணவ நாற்றுக்கள் ஆசான் கல்வித் தொண்டை அன்புடன் நினைவுகூர்கிறார்கள். மதிப்பாய்க் கருதி, மரியாதை செய்யக் காத்திருக்கிறார்கள்.

இதுவன்றோ மழலைச் செல்வங்களின் மகத்தான சக்தி!

ஒருவன் அறிவுக் குறைவானவனாய் இருக்கலாம். பாதிப்பு அவனோடு போய் விடும். ஆனால் ஒழுக்கம் குறைந்த ஒருவனால் இச்சமூகத்தின் அமைதி அழிகிறது.

தெரிந்தோ தெரியாமலோ சங்கர் அந்த அணியில் சேர வேண்டாம்.

ஒழுக்கத்துக்கு உத்தரவாதமில்லாமல் வரும் எந்த சௌகரியத்தையும் இன்று புறக்கணித்தால்தான் நாளைய சமூகம் கொஞ்சமாவது நமக்கு நன்றி சொல்லும்.

சங்கர் இங்கேயே படிப்பைத் தொடரட்டும்.


“என்னப்பா அரவிந்த்... ஏன் ஒரு மாதிரியா வர்றே? சங்கரோட ரிசல்ட் வந்துடுத்தா? உன்னைப் பார்த்தால் ஃபெயிலானது மாதிரி தெரியுதே?''

வாசலிலேயே அவனுக்காகக் காத்து நின்ற மாலதி ஊகமும், ஒடிந்த மனசுமாய்ப் பரபரத்தாள்.

அரவிந்தன் வாய் பேசாமல் கூடத்தில் கிடந்த நாற்காலியில் போய் உட்கார்ந்தான்.

''போனால் போகிறது விடுப்பா. அதற்கேன் இவ்வளவு கவலைப்படுகிறாய்? சங்கர் எங்கே படிக்கணும்னு பிராப்தமோ அதுதானே நடக்கும்? வா... வந்து சாப்பிடு.''

இலை போட்டு நீர் தெளித்தாள், மாலதி.



தியாக பூமி

26. கோட்டை இடிந்தது!

கல்கத்தாவில் ஸ்ரீதரனுடைய வீட்டில் ராஜாராமய்யர் தம்முடைய அறையில் உட்கார்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார். வீட்டின் பின்புறத்திலிருந்து 'லொக்கு லொக்கு' என்று இருமுகிற சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது. ராஜாராமய்யரின் கவனம் பத்திரிகையில் செல்லவில்லை. ''தங்கம்; தங்கம்!'' என்று கூப்பிட்டார்.

''ஏன் கூப்பிட்டேள்?'' என்று கேட்டுக் கொண்டு, தங்கம் அறைக்குள் வந்தாள்.

''ஏண்டி! இந்தப் பொண்ணு இப்படி வாய் ஓயாமே இருமிண்டிருக்கே! பிள்ளைத் தாச்சிப் பொண்ணை இப்படிக் கவனிக்காம வச்சுண்டிருந்தா, ஏதா வது இசை கேடா முடியப் போறதேடி!'' என்றார் ராஜாராமய்யர்.

''இதுக்கு நான் என்ன பண்ணுவேன்? அந்த எழவு, சம்பந்திப் பிராம்மணன் வந்து பொண்ணை அழைச்சுண்டு போனானே, அவனுக்குத் தேவலை? உலகத்திலே ஒரு தகப்பனும் இப்படி இருக்க மாட்டான். இந்தப் பொண்ணு பத்து நாளைக்கு ஒரு கடுதாசி போடறதிலே குறைச்சலில்லை. ஒண்ணுக்காவது பதில் கிடையாதாம்.''

''அங்கே அவருக்கு என்ன தொல்லையோ, என்னமோ?''

''என்ன தொல்லை வந்துடுத்து, உலகத்திலே இல்லாத தொல்லை? பணச் செலவுக்குச் சோம்பிண்டுதான் இப்படி வாயை மூடிண்டு இருக்கார்! வீட்டிலே இரண்டு லங்கிணிகள் இருக்காளே, அவா போதனையாயிருந்தாலும் இருக்கும்.''

''சரி, அதுக்காக நாம் என்ன பண்ற துங்கறே?''

''நாக்பூர்லேருந்து செல்லத்தை வேறே இங்கே பிரசவத்துக்கு அனுப்பப் போறாளாம்! இரண்டு பிள்ளைத்தாச்சிகளை வைச்சிண்டு நான் என்ன பண்றது? சாஸ்திரத்துக்கும் விரோதம். இந்தப் பொண்ணானா, என்னை ரயிலேத்தி விட்டுடுங்கோ, நான் ஊருக்குப் போறேன்னு சொல்லிண்டிருக்கா. அனுப்பிச்சுடலாமான்னு பார்க்கறேன்.''

''என்னடி இது? நிஜமா தானே போறேன்னு சொல்றாளா?''

''நிஜமா வேறே, அப்புறம் பொய்யா வேறயா? உங்களோட எழவு, பொய் சொல்லி இப்ப எனக்கு என்ன ஆகணும்?''

''கோவிக்கக்காதேடி! அந்தப் பொண்ணு தைரியமாய்ப் போறேன்னு சொன்னா, திவ்யமாப் போகச் சொல்லு. அது ரொம்பத் தேவலை. இங்கே இருந்தா, நீங்க ரெண்டு பேருமாச் சேர்ந்து அவளைக் கொன்னே விடுவயள். குரங்கு கையிலே பூமாலையாட்டமா, உன் கையிலும், உன் பிள்ளை கையிலும் ஆப்புட்டுண்டாளே, பாவம்! பெண்டாட்டியாம், பிள்ளையாம்! தூத்தேறி!'' என்று சொல்லிக் கொண்டே ராஜாராமய்யர் எழுந்திருந்து கையிலிருந்த பத்திரிகையைத் துண்டு துண்டாகக் கிழித்துப் போட்டு விட்டு வெளிக் கிளம்பிச் சென்றார்.

தங்கம்மாள் அங்கிருந்து நேரே பின் கட்டுக்குப் போனாள். அங்கே அடிக்கடி இருமிக் கொண்டே, இரும்பு உரலில் மிளகாய்ப் பொடி இடித்துக் கொண்டிருந்தாள் சாவித்திரி.

''ஏண்டி அம்மா, என்னத்திற்காக இப்படி வாய் ஓயாமே இருமறே? வேணும்னு இருமறாப்பலேன்னா இருக்கு?'' என்றாள் தங்கம்மாள்.

''இல்லேம்மா! ஏற்கெனவே, இருமிண்டிருக்கேன்னோ? ஏன் மிளகாய்ப் பொடி இடிக்கலைன்னு கேட்டேளேன்னு இடிச்சேன். மிளகாய்க் காரத்தினாலே ஜாஸ்தியா இருமறது.''

''அப்படி என் மேலே பழியைப் போடு. இஷ்டம் இல்லைன்னா, முடியாதுன்னுட்டுப் போயேன். என்னத்துக்காகப் பொய் சாக்குப் போக்கெல்லாம் சொல்றே?''

''பொய் இல்லேம்மா. இருமி இருமி மாரெல்லாம் வலிக்கிறதம்மா. தலையைக் கூடச் சுத்தறது.''

அமரர் கல்கி

''இப்படி வெறுமனே உடம்பு உடம்புன்னு என் பிராணனை வாங்காதே! சாயங்காலம் அழைச்கண்டு போய் ரயில்லே ஏத்தி விட்டுடறேன்; பேசாமே பொறந்தாத்துக் குப் போய்ச் சேரு.''

'' என் பொறந்தாம் சவரணையா விருந்தாநான் ஏன் அம்மா இப்படி இருக்கேன்? போட்ட கடுதாசி ஒண்ணுக்காவதுதான் அப்பா பதிலே போடலையோ? அதுதான் நீங்க பரிகாசம் பண்றயள்.''

''பரிகாசமில் லேடி! உன்னோடு மோத வந்து நான் பரிகாசம் பண்றே னாக்கும்?



நான் கூடச் சொல்லலே. எல்லாம் உன் மாமனார் உத்தரவு! நீ லொக்கு லொக்குனு இருமறது அவருக்குச் சகிக்க வில்லையாம். இன்னி ராத்திரியே ரயில் ஏத்தி அனுப்பி விடச் சொல்கிறார். நகை நட்டுன்னு ஒண்ணும் எடுத்துண்டு போகப் படாது. பிழைச்சுக் கிடந்து வந்தால் பூட்டிக்கலாம். மாத்திக் கட்டிக்கறதற்கு ஒரு புடைவையை எடுத்துண்டு சாயங்காலம் கிளம்பறத்துக்குத் தயாராயிரு.''

இதைக் கேட்டதும் சாவித்திரியின் முகத்தில் வியப்பும் துயரமும் ஒருங்கே தோன்றின. ''என்ன அம்மா! நிஜமா, மாமாவா என்னைத் தனியா ரயிலேத்தி விடச் சொன்னார்?'' என்றாள்.

''இதென்னடி எழவு! எல்லாருக்கும் என்னைப் பார்த்தா பொய் சொல்றவ மாதிரி தோணறாப்பலே இருக்கே!'' என்றாள் தங்கம்மாள்.

''இல்லை, அம்மா! அவர் ஒண்டிக்காவது என்பேரிலே கொஞ்சம் இரக்கம் இருந்ததுன்னு நினைச்சண்டிருந்தேன்; அதனாலே. கேட்டேன்'' என்று சாவித்திரி சொன்ன போது, அவள் குரலில் துயரமும் கோபமும் கலந்திருந்தன.

தங்கம்மாள் உடனே ஆங்காரமான குரலில், ''ஓகோ! அப்படியா நினைச்சண்டிருக்கே மனஸிலே! மாமனார் மகராஜன், மாமியார் மூதேவின்னு நினைச்சண்டிருக்கயாக்கும்! அதான் ஸ்வாமி உன்னை இந்த நிலைமையிலே வச்சிருக்கார். இல்லாட்டா, உலகத்திலேயெல்லாம் ஆம்படையான் பொண்டாட்டின்னு சவரணையாயில்லையோ? அவன் ஏன் உன் மூஞ்சியைக் கூடப் பார்க்கப் புடிக்கலே என்கிறான்? உன்னைத் தாலி கட்டினதிலேயிருந்து சனியன் புடிச்சதடிம்மா, புடிச்சது!'' என்றாள்.

நெடுங்கரையிலிருந்து சாவித்திரி கல்கத்தாவுக்குக் கிளம்பி வந்த போது, என்ன வெல்லாமோ ஆகாயக் கோட்டை கட்டிக் கொண்டு வந்தாள். அந்தக் கோட்டை சென்ற இரண்டு வருஷ காலத்தில் ரொம்பவும் இடிந்து, சிதைந்து போயிருந்தது. இப்போது அது அஸ்திவாரம் உள்படப் பெயர்ந்து விழுந்து மண்ணோடு மண்ணா யிற்று!

சாவித்திரி புருஷன் வீட்டில் கிருகப் பிரவேசம் செய்த அன்றே அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியைப் பார்த்தோம். அந்த வரவேற்பு அவளுக்கு அளவற்ற ஏமாற்றத்தையும் துயரத்தையும் அளித்தது. ஆனாலும், அவள் அடியோடு தைரியத்தை இழந்து விட வில்லை. தன்னுடைய நடத்தையினால் எல்லாவற்றையும் சரிப்படுத்தி விடலாமென்று மனத்தைத் தேற்றிக் கொண்டாள்.

மாமியார், மாமனார், புருஷன் - இந்த மூன்று பேருடைய பிரியத்தையும் எப்படியாவது சம்பாதித்து விட வேண்டும் என்று சங்கல்பம் செய்து கொண்டு, சாவித்திரி புக்ககத்தில் தன் வாழ்க்கையை ஆரம்பித்தாள். ஐயோ! இது எவ்வளவு அசாத்தியமான - ஒன்றோடொன்று முரண்பட்ட காரியம் என்பது அந்தப் பேதைப் பெண்ணுக்குத் தெரிந்திருக்கவில்லை.

இந்த வீட்டில் மாமியார்தான் முக்கியமானவள் என்பதை சாவித்திரி முதலிலேயே அறிந்து கொண்டாள். எனவே, அவளுடைய பிரியத்தைச் சம்பாதிப்பதிலேயே அதிகமாகக் கவனம் செலுத்தினாள். வீட்டுக் காரியங்களைச் சரிவரச் செய்வதிலும், மாமியாருக்குச் சிசுருஷை புரிவதிலும் முழு மனத்துடன் ஈடுபட்டாள்.

இதனால், ஆரம்பத்தில் சில நாள்வரை மாமியாரின் பிரியத்தைச் சம்பாதித்து விட்டதாகக் கூட அவளுக்குத் தோன்றிற்று. ஆனால், இது வெறும் பிரமை என்பது சீக்கிரத்திலேயே தெரிந்தது.

சாவித்திரி எவ்வளவுதான் பணிவாயிருக்கட்டும், சிசுருஷை செய்யட்டுமே? என்ன பிரயோஜனம்? அவள் தகப்பனார் எதற்காக இப்படி அச்சுப்பிச்சாயிருக்க வேண்டும்? உலகத்திலே எல்லாத் தகப்பனார்களையும் போல் பெண்ணுக்குச் சவரணையாய்ச் சீர்செனத்தி ஏன் செய்யவில்லை? - இதைப் பற்றித் தங்கம்மாளின் குறை தீராத குறையாயிருந்தது.

''நெடுங்கரைப் பட்டிக்காட்டிலே போய்க் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு அப்பவே பிள்ளையாண்டான் முட்டிண்டான். நான்தான் பிடிவாதமாகக் கல்யாணத்தைப் பண்ணி வைச்சேன். அந்த நன்னி எந்த நாய்களுக்காவது இருக்கோ? - என்னெல்லாம் ஊர் சிரிக்க அடிச்சுட்டான் பிராமணன்! பறையனையெல்லாம் வீட்டுக்குள்ளே அழைச்சண்டு வந்து - ஊரிலே எல்லாரும் சாதியை விட்டுத் தள்ளி வைச்சு - ஐயையோ! இந்த அவமானத்துக்காகவே ஊர்ப் பக்கம் இத்தனை நாளாய் நான் தலைகாட்டலை! - அப்புறம், போனாப் போறது, தகப்பன் பைத்தியமா இருந்தா, பொண்ணு என்ன பண்ணும்னு மனசு இரங்கிப் போய் அழைச்சண்டு வந்தேன். அப்படியாவது என்னடி அம்மா வந்தது? - கொஞ்சம் வாயைத் திறந்தால் போரும். என் பிள்ளைக்குப் பெண் கொடுக்க நான் நீ என்று ஓடி வருவா. ஏதடா, அப்படியெல்லாம் பண்ணாதிருக்காளேன்னு யாருக்காவது மனஸிலே நன்னி விசுவாசம் இருக்கோ? - ராங்கியிலே *குறைச்சலில்லை, ராங்கி!'' என்று தங்கம்மாள் இப்படி ஏதாவது சொல்லிக் கொண்டேயிருப்பாள்.

சாவித்திரியிடம் இந்த ஒரு குறை உண்டு என்பதை நாம் முன்னமே பார்த்



"ராத்திரி தூக்கத்திலே என் பெண்டாட்டி, நான் ஒரு லட்சாதிபதியைக் கல்யாணம் பண்ணியிருக்கிறதா கனவு கண்டாளாம்!"
"பரவாயில்லியே! என் பெண்டாட்டி பகல்லேயே அப்படித் தானே நினைக்கறா!"
- கார்த்திக் ராஜா.

திருக்கிறோம். அவள் ரோஸக்காரி; கொஞ்சம் வாய் அதிகம். அதிலும் அவளுடைய தகப்பனாரைப் பற்றி யாராவது ஏதாவது சொன்னால், அவளுக்குப் பொறுக்கவே பொறுக்காது. மாமியார் ஏசிக் காட்டுவதையெல்லாம் சகித்துச் சகித்துப் பார்ப்பாள். கடைசியில், சகிக்க முடியாமல் போய், "என்னை என்ன வேணாலும் சொல்லுங்கோ, அம்மா! எங்க அப்பாவை ஒண்ணும் சொல்லாதேங்கோ. அவர் மாதிரி எல்லாரும் இருந்தாப் போரும். அவர் எனக்குச் செய்தாப்பலே எல்லாரும் அவாவா பொண்ணுக்குச் செய்தால் போரும்" என்று ஏதாவது சொல்லி வைப்பாள். இந்த மாதிரி, பேச்சு வளரும். இதனால், போகப் போக, தங்கம்மாளுக்கு மாட்டுப்பெண் பேரில் எரிச்சல் அதிகமாகிக் கொண்டு வந்தது. இந்த எரிச்சலை அதிகமாக்கும்படியான இரண்டொரு சந்தர்ப்பங்களும் ஸ்ரீதரனால் ஏற்பட்டன.

27. அநாதைக் கடிதம்

இந்த இரண்டு வருஷ காலத்தில் சாவித்திரியின் விஷயமாக ஸ்ரீதரனுடைய மனோபாவம் இரண்டு மூன்று தடவை மாறுதல் அடைந்து விட்டது.


ஆரம்பத்தில் கொஞ்ச நாள், தன்னைக் கேட்காமல் தங்கம்மாள் அவளை அழைத்துக் கொண்டு வந்த காரணத்தினால் அவனுக்கு வெறுப்பும் கோபமுமாயிருந்தது. போகப் போக, "சரிதான்; இந்தப் பிராரப்தத்தைக் கட்டிக் கொண்டுதான் மாரடித்தாக வேண்டும் போல் இருக்கிறது. ஆனால் நமக் கென்ன கஷ்டம் வந்தது? அவள் பாட்டுக்கு வீட்டில் அம்மாவுக்கு ஒத்தாசையாயிருந்து விட்டுப் போகிறாள்" என்று ஒரு மாதிரி முடிவுக்கு வந்திருந்தான்.

சில நாளைக்கெல்லாம் சாவித்திரியிடம் அவனுக்குக் கொஞ்சம் சிரத்தை உண்டாகத் தொடங்கிற்று. சிரத்தை உண்டானதும், அவளைத் தன் தாயார் படுத்துகிற கஷ்டத்தைப் பார்த்து இரக்கமும் ஏற்பட்டது. ஸ்ரீதரனுடைய இரக்கம் சாவித்திரிக்கு ஆபத்தாய் முடிந்தது.

ஒரு தடவை சாவித்திரி கஷ்டமான காரியம் செய்வதைப் பார்த்து, ஸ்ரீதரன் அம்மாவிடம், "ஏனம்மா இந்த வேலையெல்லாம் அவளைச் செய்யச் சொல்கிறாய்?" என்றான். தங்கம்மாளுக்கு ஆத்திரம் வந்து விட்டது. "ஆமாண்டாப்பா, உன் ஆம்படையாள் காரியம் செய்யலாமோ? தேஞ்சு கன்னா போயிடுவள்? நீ வேணா, பூட்டி வைச்சுட்டுப் போ! இல்லாட்டா, பின்னோட அழைச்சுண்டு போயிடு" என்று கத்தினாள். அவன் வெளியே போன பிறகு, சாவித்திரியிடம், "ஏண்டி பொண்ணே! ஆம்படையானிடம் கோழிச் சொல்ல ஆரம்பிச்சுட்டயோல்லியோ? நீ காரியம் செய்யலாமோடி? மிராசுதார் பொண்ணாச்சே! போய் மெத்தையை விரிச்சுப் போட்டுண்டு படுத்துக்கோ! நான்தான் ஒத்தி இருக்கேனே இந்த வீட்டிலே காரியம் செய்யறதற்கு!..." என்று சரமாரியாய்ப் பொழியத் தொடங்கினாள்.

இம்மாதிரி சாவித்திரிக்கு ஸ்ரீதரன் பரிந்து பேசிய ஒவ்வொரு தடவையும் அவளுக்கு அதனால் கஷ்டமே நேர்ந்தது. ஒரு நாள் சாவித்திரி மாவு இடித்துக் கொண்டிருந்த போது ஸ்ரீதரன் பார்த்து விட்டான். "உன்னை யார் மாவு இடிக்கச் சொன்னது? வீட்டிலே வேலைக்காரியில்லையா?" என்று ஸ்ரீதரன் கோபமாய்க் கேட்டான். சாவித்திரி, அவனுடைய கோபத்தைத் தணிக்கும் நோக்கத்துடன், "அம்மாதான் இடிக்கச் சொன்னார்" என்று சொல்லி விட்டாள். ஸ்ரீதரன் அம்மாவிடம் போய், "இதென்ன அம்மா நான்ஸென்ஸ்? இவளை என்னத்திற்காக மாவு இடிக்கச் சொன்னாய்?" என்று கேட்டான். "அப்படிச் சொல்லு தகடிகை!" என்றாள் தங்கம்மாள். "நான் என்னடா அப்பா சொன்னேன்! கொஞ்ச நாள் போனா, ஆம்படையாளும் பொண்டாட்டியும் ஒண்ணாப் போயிடுவயள்; நான்தான் நான்ஸென்ஸாப் போயிடுவேன்னு சொன்னேனோ இல்லையோ? என் வாக்குப் பலிச்சுதா?" என்று கூச்சலிட்டாள். பிறகு, சாவித்திரியைக் கூப்பிட்டு, "ஏண்டி பொண்ணே! நானாடி உன்னை மாவு இடிக்கச் சொன்னேன்; என் மூஞ்சியைப் பார்த்துச் சொல்லடி!" என்று கேட்டாள். சாவித்திரி பயந்து போய்ப் பேசாமல் இருந்தாள். "பார்த்தயோல்லியோடா கள்ள முழி முழிக்கிறதை!" என்றாள் தங்கம்மாள். ஸ்ரீதரனுக்கு ரொம்பக் கோபம் வந்து விட்டது. "ஏண்டி! பொய்யா சொன்னே?" என்று சாவித்திரியின் கன்னத்தில் ஓர் அறை அறைந்து விட்டுப் போய் விட்டான்.

சாவித்திரி அழுது கொண்டே மாவு இடிக்கத் தொடங்கினாள். தங்கம்மாள், "என் பிள்ளைக்கும் எனக்கும் ஆகாமடிக்க வந்துட்டயாடி அம்மா, மகராஜி! என்ன சொக்குப் பொடி போட்டிருக்கயோ, என்ன மருந்து இட்டிருக்கயோ, நான் என்னத்தைக் கண்டேன்!" என்று புலம்பத் தொடங்கி விட்டாள். (தொடரும்)



• பள்ளிக்கூடத்திடல் : மணக்கும் வியாபாரம்

யாராவது மணக்கும் கிராமத்தைப் பார்த்திருக்கிறீர்களா? பார்க்க வேண்டுமானால் நாகர்கோயில் அருகே உள்ள தோவாளை கிராமத்திற்குத்தான் செல்ல வேண்டும். ஆமாம்; அந்தக் கிராமத்திலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் பெரும்பாலும் பூக்கள் மட்டுமே பயிரிடப்படுவதால் கிராமமே மணக்கிறது!

விவசாயிகள் என்றால் ஆறு மாதத்திற்கொரு முறை, வருஷத்துக்கொரு முறைதான் பணம் பார்க்க முடியும் என்ற நிலையை மாற்றி, தினமும் பணம் பார்க்கும் நிலையை உண்டாக்கியுள்ளன மலர்கள்; பூக்கள் கொடுக்கின்ற புதுவாழ்வு இது.

தோவாளையைச் சுற்றியுள்ள கிராமங்களான பணக்குடி, குமாரபுரம், காவல்கிணறு, திருமலைபுரம், விசுவாசபுரம், ஆரல்வாய்மொழி ஆகியவற்றில் உள்ள விவசாயிகளும் தோவாளை விவசாயிகள் போலவே நெல்லையும் வாழையையும் 'சற்றே விலகியிரும் பிள்ளாய்' என்கிற மாதிரி ஒதுக்கிவிட்டு, மல்லி, வாடாமல்லி, ரோஜா, பிச்சி, அரளி, கனகாம்பரம், சாமந்தி என்று பயிர் பண்ணத் துவங்கி விட்டார்கள். இந்த வாசனைப் பயிர்களுக்கு வங்கியும் கடன் தருகிறது. கேட்க வேண்டுமா!

சாமந்தியும் அரளியும் பயிர் பண்ணும் தாணுப்பிள்ளை மூன்று பிள்ளைகளையும் நன்றாகப் படிக்க வைத்து, இருவரை விஞ்ஞானிகளாகவும் ஆக்க முடிந்திருக்கிறது என்றால் பூக்களால் அவருக்குக் கிடைக்கும் தினசரி வருமானம்தான்!

காலையில் ஐந்து மணிக்கே பூந்தோட்டங்களுக்குச் சென்று பூக்களைக் கொய்து மடியில் கட்டிக் கொண்டு தோவாளைக்குச் செல்கிறார்கள். அங்குள்ள பள்ளிக்கூட திடலில், இவர்களை எதிர்பார்த்து வியாபாரிகள் தயாராக இருக்கிறார்கள். மடியில் கையை விட்டுப் பார்த்தே எத்தனை படி பூ இருக்கும் என்பதைக் கணக்கிட்டு



சின்னதாக ஒரு கிராமம்; 15 கோடி வியாபாரம்!

விடும் அனுபவம் வியாபாரிகளுக்கு உண்டு. நாங்கள் சென்ற சமயம் ஒரு படி பிச்சிப்பூ பதினைந்து ரூபாய்க்கு விலை போயிற்று. இந்தக் கையில் பூ; அந்தக் கையில் பணம் என்கிற ரீதியில் வியாபாரம்!

வாங்கிய பூக்கள் உடனே கூடைகளில் கொட்டப்பட்டுச் சேர்க்கப்படுகிறது. கொட்டி வைக்கப்பட்டிருக்கும் விதவிதமான பூக்களுடன் துளசியும் உண்டு. இந்தப் பக்கம் மதுரை, அந்தப் பக்கம் திருவனந்தபுரம் என்று வெகு தூரத்திலிருந்து வியாபாரிகள் வேன்களில் வந்து பூக்களை வாங்கிச் செல்கிறார்கள். காலை மணி ஒன்பதுக்கெல்லாம் வியாபாரம் அடங்கிப் போய் விடுகிறது. இந்தச் சின்ன கிராமத்தில் நடக்கும் ஒரு





நாளைய பூ வியாபாரம் எவ்வளவு தெரியுமா? சுமார் ஐந்து லட்சம் ரூபாய்! ஒரு வருடத்தில் சுமார் பதினைந்து கோடி!!

விவசாயிகளிடத்தில் கொள்முதல் செய்யும் சுப்பையா "வருடம் முழுவதுமே லாபம் கிடைக்கும்னு சொல்ல முடியாது!" என்கிறார்.

"முகூர்த்த நாட்கள், பண்டிகைகள், திருவிழாக்கள் ஆகிய நாட்களில், பூக்களுக்குக் கடுமையான கிராக்கி வரும். அப்போது பூக்களின் விலை தானாகவே ஏறிவிடும். ஆனால் டல்லான நாட்களில் வந்த விலைக்குத் தள்ளி விட்டால் போதும் என்று அவர்கள் கொடுத்து விட்டுப் போய் விடுவார்கள். ரெகுலராகக் கொடுப்பவர்கள் என்பதால் நாங்களும் அவர்களிடம் வாங்காமல் இருக்க முடியாது. அப்போது எங்களுக்கும் கையைக் கடிக்கும் வாய்ப்பு உண்டு!" என்கிறார்.

காவல் கிணறைச் சேர்ந்த நல்லதம்பியோ, "இடையில் உள்ள

வியாபாரிகளுக்குக் கொண்டாட்டம் தான் ஸார். விலையை நிர்ணயிப்பது அவர்கள்தான். குறிப்பிட்ட சிலரின் பிடியில் இந்த வியாபாரம் மாட்டிக் கொண்டிருக்கிறது. எப்போதுமே பாதிக்கப்படுவது என்னைப் போன்ற விவசாயிகள்தான். அரசாங்கம் தலையிட்டு சீசனுக்கேற்ப விலையை நிர்ணயிக்க வேண்டும். இல்லையேல் இந்தப் பகுதியில் வாசனைப் பூக்களை அடிப்படையாகக் கொண்ட வாசனை திரவியத் தொழிற்சாலை ஒன்று துவங்கினால், விவசாயிகளுக்கு உதவி செய்தது போல் ஆகும்'' என்கிறார்.

• மாடசாமிப் பண்டாரம் : ஜனாதிபதி விருது!




கிராமத்திலுள்ள விவசாயிகள் மட்டுமே பூக்களால் பயன் பெறுவதில்லை. காலை வேளைகளில் சகாய விலைக்குக் கிடைக்கும் பூக்களை வாங்கிச் சரமாகத் தொடுத்து, விற்றுக் காசு பண்ணுகிறார்கள் தோவாளைப் பெண்கள். சொல்லி வைத்தாற் போல எல்லோர் வீட்டிலும் பெண்களின் விரல்கள் போட்டி போட்டுக் கொண்டு பூத்தொடுக்கின்றன.

வெறும் சரமாகத் தொடுத்து விற்பதைத் தவிர, பூக்களால், மணமேடை அலங்காரம் செய்வதில் ஜாம்பவான்களும் இந்தக் கிராமத்தில் இருக்கிறார்கள்.

இவர்களில் குறிப்பிடத்தக்கவர் மாடசாமி பண்டாரம். அழகான பூ வேலைப்பாடுகளுக்காக, ஜனாதிபதி பரிசு பெற்றவர். ஸ்வாமி வீதி உலா வரும்போது, சிலையைச் சுற்றிச் செய்யப்படும் பூ வேலைகளான ஆறுமுகச் சக்கரம், சராந்தல், மாணிக்க மாலை, ஆகியவற்றில் இவர் ஸ்பெஷலிஸ்ட். மாவட்டங்களின் பல பகுதிகளிலுள்ள கோயில்களிலிருந்து மட்டுமல்ல; திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோயிலிலிருந்தும் மாடசாமி பண்டாரத்துக்கு ஆர்டர்கள் வருகின்றன. தோவாளை பூ மார்க்கெட்டில் பூக்களை வாங்கி, இவரது குடும்பமே ஆர்டர்களுக்கேற்ப பூ வேலைகளைச் செய்கிறது.

''எங்க ஊர் பிச்சிப்பூவின் மணம் வேறெங்கும் வராது. இதற்குக் காரணம், வங்கக் கடலின் காற்றும், அரபிக் கடலின் காற்றும் சங்கமமாகும் ஊர் எங்கள் ஊர். தெற்கே காற்றாடி மலை; வடக்கே தாடகை மலை. இரண்டு குன்றுகளுக்கு இடையில் உள்ளதால் பூக்கள் பயிர் செய்ய ஏற்ற பகுதி என்றும் சொல்கிறார்கள். கூடவே, நல்ல மண்வாகு, நல்ல தண்ணீர்!'' என்று தோவாளையின் பெருமையைச் சொல்லிக் கொண்டே போகிறார், மாடசாமிப் பண்டாரம்.



• பெண்களின் விரல்கள் எப்போதும் பூவேலைதான்...

- ஸ்ரீநிவாசன்

தகவல் தந்த வாசகர்கள் :
எஸ். எஸ். மணி, ஏ. பி. எஸ். ரவீந்திரன்,
ஜி. சிதம்பர தாணு, எம். தங்கராஜ்,
வி. எம். ராமசாமி

அட்டை வண்ணப்படங்களும், நாகர் கோயில் - கன்னியாகுமரி சிறப்பிதழ் தொடர்பான மற்ற படங்களும் :
கோபிநாத்



ஐசிஎஸ் R. நடராஜன்
நிர்வாக இயக்குநர்

ஐசிஎஸ் குரூப்

வர்த்தக அலுவலகம்: 221, சத்தியமூர்த்தி சாலை, இராம் நகர்,
கோயமுத்தூர் - 641 009. போன்: 230463.

50 ஆண்டுகளுக்கு
மேலான
அரிய சேவை

டெபாசிட் திட்டங்கள்

குறுகிய கால டெபாசிட் | பிக்சட் டெபாசிட்

காலம்	1 நாள் முதல் 90 நாட்கள் முடிய	91 நாட்கள் முதல் 180 முடிய	181 நாட்கள் முதல் 365 முடிய	12 மாதங்களுக்கு	25 மாதங்களுக்கு	36 மாதங்களுக்கு	48 மாதங்களுக்கு	60 மாதங்களுக்கு
வட்டி விகிதம் ஆண்டுக்கு	15%	16%	17%	18%	18.5%	19%	19.5%	20%
				17%	17.5%	18%	18.5%	19%
				16%	16.5%	17%	17.5%	18%

சுபிட்சம் வைப்புத் திட்டம்

ரூ. 10,000/- செலுத்தினால் 45 மாதங்களில் ரூ. 21,000/- கிடைக்கிறது.

ரூ. 10,000/-ம் அதன் மடங்கில் பணம் செலுத்துவோர் மட்டுமே பங்கு பெற முடியும்

ரெக்கரிங் டெபாசிட் திட்டம்

மாத தவணைத் தொகை ரூ.	காலக்கெடுவில் பெறவுள்ள முதிர்வுத்தொகை				
	12 மாதங்கள்	24 மாதங்கள்	36 மாதங்கள்	48 மாதங்கள்	60 மாதங்கள்
100	1310	2850	4680	6870	9490
250	3275	7125	11700	17175	23725
500	6550	14250	23400	34350	47450

குமுலேட்டிவ் டெபாசிட் திட்டம்

டெபாசிட் தொகை ரூ.	முதிர்வு அடையும் போது பெறும் தொகை		
	45 மாதங்கள்	68 மாதங்கள்	90 மாதங்கள்
1000	2000	3000	4000
5000	10000	15000	20000
7500	15000	22500	30000
10000	20000	30000	40000

- 45 மாதங்களில் இரு மடங்கு
- 68 மாதங்களில் மூன்று மடங்கு
- 90 மாதங்களில் நான்கு மடங்கு

நகைக்கடன் மற்றும் இரண்டு சக்கர வாகனங்களுக்கு கடனுதவியும் வழங்கப்படும்

செழுமை தரும் சேமிப்பு திட்டங்கள்! ஐஸ்வர்யத்தின் அட்சயபாத்திரம் - ஐசிஎஸ்!



* கடலுக்குள் செல்லும் கோட்டை....

* கடலுக்குள் இருக்கும் கோட்டை மேலிருந்து கடற்கரையின் அழகு...



கன்னியாகுமரியில் சூரியோதயம் பார்ப்பது ஓர் அழகு; விவேகானந்தர் மண்டபத்திலுள்ள தியான மண்டபத்தில் நுழைந்தாலோ, கடலலைகளின் பேரிரைச்சல் கூட ஓங்கார நாதம்போல் ஒலிக்கும் அதிசயமான தோர் அமைதி.


கன்னியாகுமரிக்குச் சென்று வந்த பலரும் இந்த அழகையும் அமைதியையும் தனித்தனியாகத்தான் அனுபவித்து வந்திருப்பார்கள். இந்த இரண்டையும் ஒரே இடத்தில் அனுபவிக்கவும் அருகிலேயே ஓர் இடம் இருக்கிறது! அதுதான் வட்டக்கோட்டை!

கன்னியாகுமரியிலிருந்து சுமார் ஆறு கி.மீ. தூரத்திலுள்ளது வட்டக்கோட்டை. 1740 இல் டச்சுக்காரர்களால் கட்டப்பட்டது. கடலுக்குள் ஊடுருவி வரும் எதிரிகளைக் கண்காணிப்பதற்கென்றே கட்டப்பட்ட கோட்டை என்பதால், கோட்டையின் ஒரு பகுதி - துறைமுக 'ஜெட்டி' மாதிரி சுமார் இருநூறடி தூரத்திற்குமேல் கடலுக்குள்ளேயே நீண்டு செல்கிறது. இப்படி கடலுக்குள் செல்லும் கோட்டைப் பகுதியின் மேல் பரப்பு, ஏறத்தாழ ஒரு கால்பந்து விளையாட்டு மைதானத்தின் அளவுக்கு விஸ்தாரமாகவும் இருக்கிறது.

அப்புறமென்ன! மேற்பரப்பில் நின்று கொண்டால் கடற்காற்றின் இதமான தழுவல்; மூன்று புறங்களிலும் கடலலைகளின் தாலாட்டு; தெற்குப்புறம் பார்த்தால் கூப்பிடு தூரம் போலவே தெரியும் விவேகானந்தர் மண்டபம்; கொஞ்சம் கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டு வடக்குப்புறம் பார்த்தால், மங்கலாகத் தெரியும் திருச்செந்தூர் முருகன் கோவில்; கடற்கரையோரம் முழுவதும் அணிவகுத்து நிற்கும் தென்னை மரங்கள்!

அதிகாலையில் கன்னியாகுமரி சென்று அலைந்து திரிந்து களைத்துப் போகும் போது, பிற்பகல் இந்த வட்டக்கோட்டைக்கு வந்து மேல் பரப்பில் ஜமுக்காளத்தை விரித்துப் போட்டுக் கொண்டு குடும்பத்தோடு உட்கார்ந்து களைப்பாறலாம். நிலாக் காலமாக இருந்தால் சந்தோரதயத்துக்குக் காத்திருந்து நிலாச் சோறு சாப்பிடலாம்!

இப்படியெல்லாம் யாராவது செய்து அனுபவித்துவிடப் போகிறார்களே என்று கவலைப்பட்டுத்தானோ என்னவோ, வட்டக்கோட்டையைத் தன் வசத்தில் வைத்திருக்கும் மத்திய தொல்பொருள் பாதுகாப்புத் துறை, கோட்டையின் மேற்பரப்பு



கன்னியாகுமரிக்கு அருகே
ஒரு கனவுலகம்!

முழுவதிலும் நெருஞ்சிமுட்கள் படர்ந்து பழமாகக் கிடப்பதைக் கூட அப்படியே பாதுகாத்து வருகிறது!

வட்டக்கோட்டையைச் சுத்தப்படுத்திப் பராமரித்தால், ஏராளமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடங்களில், முன் வரிசையில் இருக்கும். ஏழை - எளிய மக்களும் இயற்கையழகை மொத்தமாகக் கொள் முதல் செய்து ஆனந்தப்படலாம். அரசு மனம் வைக்க வேண்டுமே!

- சார்ல்ஸ்

தகவல் தந்த வாசகர்கள் :

பி. மயில்தேவ், ஏ.பி.எஸ். ரவீந்திரன், என். முத்துகிருஷ்ணன்



அம்மா வேணும்

அதங்கோடு கலா

''கன்னிக்குடம் உடைஞ்சு நீட்டுக் கண்ட பெறவும் ஒரு சின்ன நோவு காணாதா இந்த குட்டிக்கு...?! சும்மா பிடிச்ச வெச்ச மண்ணு கணக்கா மிண்டாதெ இருக்கியா! என்னவோ அவ இருக்குத இருப்புப் பாத்த பெறவு பேடியாவுது எனக்கு. செணம் ஆருங்கிலும் பெய் ஒரு காரு பிடிச்சோண்டு வாருங்க. குட்டியை எத்திரை எழுப்பம் ஆசுத் திரிலெ சேக்குதோ அத்திரைக்கும் கொள் ளான்னா...'' பல நூறு பிரசவங்களைப் பார்த்து அனுபவப்பட்ட மருத்துவச்சியான பாலாச்சிக் கிழவி புரிபடாமல் பேசவே, வெளியில் காத்திருந்த ஆண்கள் கூட்டம் கல வரப்பட்டது. ஒவ்வொரு முகத்திலும் அனு மானிக்க முடியாத பீதி வந்து அப்பிக் கொண்டது.

''தேவராஜா...

எடே நீ வாடகை சைக்கிளை எடுத் தோண்டு படந் தாலுமூட்டுக்கோ, க வி ய க் க ா விளைக்கோ பெய் செணம்னு ஒரு காரு, பிடிச் சோண்டு வா.''

கார் பிடிக்கிற அவசரத்தில் தேவ ராஜன் ஓடினான்.

''எடே.....

அ ங் கே

இ ங் கே

ஆலோஜிக்காதே. மினிட்டுலெ காரு வரணும்.''

பிரசவ அவசரத்துக்காக வந்து கூடிய அக்கம் பக்கத்துப் பெண்கள் அதிசயப்பட்டார்கள். அடி வயிற்றில் பயந்தார்கள். ''என்ன பெண்ணோ என்னவோ... நம்ம வக்கத்துலெ எல்லாம் சொகமா பெற்றெளிச்ச மூணுக் கண்ணே வீட்டு சோலியெல் லாம் பாக்கியதைப் போல சொகமா விட்டு இவுளுக்கு பாரத்தையும் அந்த ஆண்டவன் இறக்கித் தரருதா...?! ஆணுங்க இல்லாத்த வீடு. பாவம், தள்ளை மட்டுமாவிட்டு என்னவெல் லாம் பாப்பா...?!''

''நீ மிண்டாதே எடியே. நம்ம வல்லதும் துக்கிச்க வேளம் பறஞ்சா தள்ளை இப்ப ஒப்பாரி வைப்பா.''


''ஒரு வெச்சை பிள்ளை தலை திரும்பி கெடக்குதோ என்னவோ...?''

''ஆருக்கெடியே அறிலாம்...?''

ஆளுக்கு ஆள் அபிப்பிராயப்பட்ட பெண்கள் ரஞ்சிதத்தை ஆஸ்பத்திரி யாத் திரைக்குத் தயார்படுத்துவதற்காக, கைத் திண்ணை தாண்டி உள் அறைக்கு அழைத்து வந்தார்கள். அதுவரை, அனுமதி மறுக்கப் பட்டு வெளியில் நின்று கொண்டிருந்த ஆண் கள், தயங்கித் தயங்கி உள்ளுக்குள் வந்து ரஞ் சிதத்தை அபூர்வமாய்ப் பார்த்தார்கள்.

அவள் மிகப் பெரிய வயிறோடு தலை குனிந்து சிரித்தாள்.

''போங்க..... ஆணுங்க எல்லாம் இத்திரி நேரம் வெளிலெ நில்லுங்க.'' கூட்டத்தில் கொஞ்சம் குண்டாக, கரகர குரல் கொண்ட ஒருத்தியின் உத்தரவுக்கு ஆண்கள் வெளி யிறங்கி, முற்றத்தில் வந்து நின்று கொண்டார் கள். இது முழுக்க முழுக்க பெண்களின் நேரம்.



'அதங்கோடு கலா' என்ற புனைபெயருக்குள் ஒளிந் திருப்பவர், க. சந்திரகலாதரன். கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த இவரது முதல் சிறுகதையே டி.வி. ராமசுப் பையர் நினைவுச் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றது. ''அந்த ஊக்கமும் எனது கிராமப்புறங்களில் பிரசவ வேதனையால் துடிக்கும் மகளைப் பார்க்கும் அந்தத் தாய் துடிக்கும் துடிப்பு, மகளின் துடிப்பை விட அதிகமானதாக இருக்கும். அதன் பாதிப்பால் உருவானதுதான் இந்தச் சிறுகதை. அதை வட்டார வழக்கில் எழுதும் போதுதான் ஜீவனிருக்கும் என்று எழுதியிருக்கிறேன்!'' என்கிறார்.

'ரெஞ்சிதத்துக்க தள்ளை எங்கே...?'

''கனகபாய்... நான் இஞ்செ இருக்கேன் எடியே...'' சாய்ந்து இறக்கியிருந்த பின்பக்க அடுக்களையிலிருந்து ரஞ்சிதத்தின் தாய் குரல் கொடுத்தாள்.

''வடக்கதுலெ என்ன செய்யியே நீ?! இஞ்செ வா. ஆசுத்திரிக்கு ஆவிசியப்பட்ட சாமானொக்கெ நான் எடுத்து வெச்சியேன்.'' ஆர்வத்தோடு உதவ வந்த கனகபாய், தாய்க் கிழவியின் கையிலிருந்த பெட்டிக் கூடையை வாங்கினாள்.

ரஞ்சிதத்தின் தாய் குருவம்மாள் அடுக்களையை விட்டு ஜன்னல் சாத்தப்பட்டிருந்த மகளின் அறைக்கு வந்தாள்.

பழைய டிரங்கு பெட்டியை நாற்காலியாக்கி அதில் ராணி கணக்காய் உட்கார்ந்திருந்த மகளைப் பார்க்கையில் அழுகை ஊறிக் கிளம்பிற்று. கிழிந்த சேலை முந்தானையை எடுத்துக் கண் துடைத்தாள். அப்படியே மூக்கும் உறிஞ்சினாள்.

''அம்மா இத்திரி கரையாதே. நீ கரஞ்சா எனக்கும் கரச்சி வரும்.'' உத்தரவு தொனியில் தாயைச் சமாதானப்படுத்த முயற்சி செய்தாள் ரஞ்சிதம். வெளியே கார் சப்தம் கேட்டது. யாருடைய தயவும் இல்லாமல் நடந்து வந்த ரஞ்சிதம், கார் கதவுக்கு எச்சரிக்கைப் பட்டு கவனமாக ஏறி உட்கார்ந்தாள். அருகே தாய் குருவம்மாள். கூட கனகபாய், சவுந்தனை, ரோசம்மா.

''ஏற வேண்டிய ஆணுங்க எல்லாம் மின் சீட்டுலெ ஏறி இருங்க.'' கருமாரன், தேவராஜனோடு லோகேசனும் ஏறி உட்கார்ந்தான்.

பெண்களின் ஒப்புதல் பெற்று கார் கிளம்பிற்று.

கரடு முரடான சாலையை விட்டு, தார் சாலையைத் தொட்டதும் கார் வேகம் காட்டிற்று. அதே நேரம் பின்னால் உட்கார்ந்திருக்கும் பிள்ளைத்தாய்ச்சியை மனத்தில் கொண்டு வெகு சிரத்தையாக, சின்னச் சின்ன மேடு பள்ளங்களுக்கு அதிராமல் சீராக ஓடியது.

கிட்டத்தட்ட முக்கால் மணி நேர ஓட்டத்தில் குழித்துறை தேசிய நெடுஞ்சாலைக்குள் கார் வந்த போது, நிறைய வாகனங்கள் இரைந்து கொண்டே எதிரில் வந்தன. லாவகமாய் எல்லாவற்றையும் சமாளித்து, வெட்டு மணி வெடி வெச்சான் கோயில் அருகே வந்த போது, குருவம்மாள் தயாராய் வைத்திருந்த ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்துக் கோயில் பார்த்து வீசினாள். ஓடி வந்து நாணயத்தை எடுத்த பணியாள் உரக்கக் கத்தினான்: ''ரெண்டு வெடியோய்...!''

''கடவுளே... எல்லாம் நல்லபடியா நடந்து முடியட்டும். தள்ளையும் பிள்ளையுமா நான் இந்தக் கோயிலுக்கு வந்து நூற்றியொந்து வெடியும், பொங்காலையும் வைப்பேன்.'' குருவம்மாள் மானசீகமாக பிரார்த்தித்த மறு நிமிடம், கார் வந்த வேகத்திலிருந்து குறைந்து, அடுத்த பெருக்குத் தாவிச் சீரான வேகமெடுத்த அந்தச் சின்ன அவகாசத்தில் ரஞ்சிதம் நெளிந்தாள். ''அடி வயிற்றைத் தடவிக் கொண்டே அ..ம்...மா... ''என்றாள்!

டிரைவர் உட்பட முன்சீட்டில் உட்கார்ந்திருந்தவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். 'பளிச்'சென்று ஒரு பெரிய உண்மை பிடிபட கார் டிரைவர் வேகம் கூட்டினான். ''மிஷன் ஆஸ்பத்திரிக்கு இன்னும் இரண்டு பர்லாங் தூரம்தான்!''

பின்பக்கத்திலிருந்த பெண்கள் ரஞ்சிதத்தைத் தாங்கிக் கொண்டார்கள்.

மிகப் பெரிய ஹாரனோடு கார் அவசரப்படுவதைப் புரிந்து கொண்ட ஆஸ்பத்திரி பணியாள் காம்பவுண்டின் பிரம்மாண்ட கதவு திறந்து வழி தந்தான்.

உள்ளுக்குள் வந்த கார் வேகம் குறைந்து நிற்பதற்குள் முன் கதவு திறந்த தேவராஜன் ஆஸ்பத்திரிக்குள் ஓடினான்.

அடுத்த நிமிடம் ஸ்டெரெச்சரோடு வெள்ளை உடை பணிப்பெண்கள் வந்தார்கள். கூட ஒரு இளவயது நர்சும், நரை தட்டிய இன்னொரு நர்சும்.

காரிலிருந்த ரஞ்சிதத்தைச் சாய்த்து, ஸ்டெரெச்சருக்கு மாற்றிய லாவகம் ஆச்சரியப்பட வைத்தது. ஆனாலும் குருவம்மாள் ''பாத்து... பாத்து...'' என்று தாய்மை பயத்தோடு எச்சரித்தாள்.

ஆபரேசன் தியேட்டரோடு இணைந்த பிரசவ அறையையொட்டி நீள பிரசவ வார்டு இருந்தது. வரிசையாய் கட்டில், கட்டிலுக்கொரு பச்சை உடம்புக்காரி. 'வீல்' என்று அழும் குழந்தைகளைத் தூக்கி வைத்துக் கொண்டு பாட்டிகள் பாடும் தாலாட்டு. அதையும் மீறி ஆஸ்பத்திரிக்கே உரித்தான மருந்து நெடி.

ரஞ்சிதம் பிரசவ அறைக்குள் சேர்க்கப்பட்டு, கிட்டத்தட்ட கால் மணி நேரமாயிற்று.

குருவம்மாள் மனதுக்குள் இஷ்ட தெய்வங்களை எல்லாம் வேண்டிக் கொண்டாள். கூட வந்திருந்த பெண்கள் சூழ்நிலை மறந்து நகை நட்டோடு திரியும் கனத்த பெண்களையும், ஸ்டெதெஸ்கோப்போடு வார்டு விட்டு வார்டு நகரும் இளவயது பெண் டாக்டர்களையும் வாய் பிளந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். பிரசவ அறை திறந்து ஒரு நர்ஸ் எட்டிப் பார்த்தாள்.

''இங்கே ரஞ்சிதத்துக்க ஆளு யாரு...?''

''நாங்கதென்.'' ஒரே தாவலில் நர்ஸ் அருகே வந்தாள் குருவம்மாள்.

''நீங்க யாரு... ரஞ்சிதத்துக்க அம்மையா...?''

''ஆமாம்...''

''ம்... உங்களுக்குப் பேத்தி பெறந்திருக்கு.''

குருவம்மாளின் கண் பாப்பா ஆச்சரியத்தில் விரிந்தது. ஆசுவாசமாய் நெஞ்சில் கை வைத்துக் கொண்டாள். ''தள்ளையும் பிள்ளையும் சொகமாக் கிடக்கனுமா...?''

''கெடக்கினும் பாட்டி. உள்ளெ வந்து பாக்குறியளா..?''

''ஓம் பிள்ளை...''

உள்ளுக்குள் போன குருவம்மாள் உச்சி குளிர்ந்தாள். வெள்ளைப் படுக்கையில், அதே நிற உடையில் ரஞ்சிதம் கிடத்தப்பட்டிருக்க, அருகே ஒரு கொத்துப் பூவைப் போல குழந்தை கிடந்து கை காலை முறுக்கிக் கொண்டு அழுதது.

அதற்குள் கூட வந்திருந்த ஆண்களுக்கு விஷயம் தெரிந்து விட்டிருந்தது.

முந்தானை முடிச்சைப் பிரித்துக் கொண்டே லோகேசனைக் கூப்பிட்டு, கேரளத்தில் கொத்த வேலை பார்க்கும் ரஞ்சிதத்தின் புருசனுக்குத் தந்தி அடிக்கச் சொல்லி பத்து ரூபாய் எடுத்து நீட்டினாள் குருவம்மாள். அவன் வாங்கவில்லை. ''அதை நான் பாத்துக் கொள்ளலாம் மூத்தம்மா.''

லோகேசன் கார் டிரைவரைக் கூட்டி வந்தான்.

கசங்கியிருந்த ஐந்து, பத்து இரண்டு ரூபாய்களை நிமிர்த்தி எண்ணிக் கொண்டிருந்த குருவம்மாளிடம் டிரைவர் விடை கேட்டான். ''நான் போறேன் பாட்டி. எனக்கு வேற சவாரி இருக்கு!''

''பைசை...?!''

''இப்ப உங்க ஆஸ்பத்திரி செலவுக்கு வெச்சுக்கிடுங்க பாட்டி. எல்லாம் நல்லபடியா சொகமாயி வீட்டுக்குப் போங்க. அது மதி.''

இந்த முரட்டு தேகத்துக்குள்ளே இவ்வளவு மென்மையான இதயமா...?! ஆச்சரியம் தாங்கவில்லை குருவம்மாளுக்கு!

ரோசம்மா என்ன நினைத்தாளோ... குருவம்மாளிடம் தயங்கித் தயங்கிக் கேட்டாள். ''மைனி... நீங்க இனி எப்பிடியும் ஆறேழு நாள் ஆசுத்திரியிலெ இருக்க வேண்டியதிருக்கும். ரஞ்சிதத்துக்கு இத்திரி சூடு வெள்ளம் அனத்தணுங்கிலோ, இத்திரி மேலு குளிப்பிக்க விடணுமிங்கிலோ, இன்னும் ஒரு ஆளு கூட உண்டங்கி நல்லாருக்கும். எனக்கு இஞ்செ நிக்கொக்கு நேரம் இல்லெ. மைனி, நான் இந்த ஆசுத்திரி வெவரத்தைச் சொல்லி உங்க மூத்த மொவ செல்வராணியை வரச் சொல்லட்டா...?! அதுவும் இல்லெ... உங்களுக்க பணக்கம் தீர்ந்தது போலயும் இருக்கும்!''

செல்வராணி என்ற பேரைக் கேட்டதும், குருவம்மாளின் மூக்குச் சிவந்தது. நின்று கொண்டிருப்பது ஆஸ்பத்திரி என்பதையும் மறந்து, கொஞ்சம் அதிகமாவே சத்தம் போட்டாள். ''என்னம்மா கேட்டே நீ...?! அந்த நடிக் கொம்பியலை எனக்கக் கண்ணுலெ கண்டவங்கி கடிச்சுத் துப்புவென் நான். வரட்டு... எனக்கு வயிற்றுலெ ஆத்தியமா வந்து பொறக்குத பெண்ணு இப்பிடி கோயில்லெ பத்து நாள் உல்சவத்துக்குக் கண்ணாடி வளை விக்க வாற பயலோட ஓடிப் போவும்னு அறிஞ்சிருந்தா, அதை அப்பவே நான் கழுத்தை நெரிச்சுக் கொன்னுருப்பேன்னா. அந்த நடிச்சி ஓடிப் போன மானக்கேடு தாங்காம எனக்க அவியளும் போய்ச் சேர்ந்தினும். அப்பன் வேணும், அம்மை வேணும் இளையது வேணும்னு நெனச்சுத பெண்ணா இருந்திருந்தா அவளுக்கு இருவது வயசு ஆவேதுக்கு முன்னே இந்த ஆசை வந்திருக்காது. வேண்டாம்... நான் அறுத்தவளங்கிலும் நடக்கக் கழியாம தரையிலே கிடந்து சந்தாலும் எனக்கு ஓடிப் போன அந்த சனியன் வேண்டாம். நீ போ ரோசம்மா. எனக்க மொவளையும் எனக்கு நாலு பேரைப் போல பாக்கக் கழியும்.'' பேசி முடிக்கையில் குருவம்மாளின் குரல் உடைந்து கோர்வையாய் நீர் இறங்க தர்மச் சங்கடமாகிப் போன ரோசம்மா, அவளைச் சமாதானப்படுத்தி விட்டுப் புறப்பட்டுப் போனாள்.



''கந்தசாமிங்கிற பேர்ல கடி ஜோக்ஸ் எழுதறது உன் புருஷன்தானாமே...! அவர்கூட நீ எப்படி காமலா குடும்பம் நடத்தறே?''

''கடியும் கடிந்தனுமாத்தான்!''

- சீர்காழி வி. ரேவதி.

இன்று ஏழாவது நாள். புறப்பட்டு விட்டார்கள். ஆஸ்பத்திரிக்கு வரும் போது இருந்த பரபரப்பு இல்லாமல் மனது லேசாக இருந்தது. எதிரே விரைகிற மனிதர்களை, மரங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டே வந்தார்கள். குழந்தை, பாட்டியின் அணைப்பில் சுகமாய்த் தூங்கிக் கொண்டிருந்தது.

விரைவான ஓட்டத்திற்குப் பின் ஊர் வந்தது. ஏழு நாளில் ஊரே மாறிப் போவது மாதிரி பிரமை. சரளைக் கல் சாலையில் சில நிமிடங்கள் ஓடி பனை மரத்தை வட்ட மடித்து விட்டு, கார் ஒரு குலுங்குக் குலுங்கி நின்றது.

கார் கதவு திறந்து அனைவரும் இறங்க, வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு யாரது வெளியில் இறங்கி வருவது...?

குருவம்மாள் கண்களைக் கூர்மையாக்கிக் கொண்டு பார்த்தாள். அழகாக, கன்னங்கள் எல்லாம் தாராள சதை போட்டு... சந்தேகமில்லை... ஓடிப் போன மகள் செல்வராணியேதான்!

''இந்தக் கெழவி செத்துப் போயிருப்பா. விரிக்கப் போட்டு ஆட லாம்னு ஓடி வந்தியா நாயே'' என்று கத்தியிருக்க வேண்டும். குருவம்மாள் கத்தவில்லை!

என்ன இருந்தாலும் விட்டுப் போகுமா...? அக்காவும் தங்கையும் தத்தம் கண்களால் ஆறு வருட நலம் விசாரித்தார்கள்.

ஆனால், குருவம்மாளின் அமைதி ஒரு எரிமலையின் அமைதியைப் போல பயப் படும்படியாய் இருந்தது.

''பழையது எல்லாத்தையும் மறந்திடு அம்மா. நான் ஓடிப் போன வளங்கிலும் உங்களை எல்லாரையும் நெனைக்காத நாளில்லெ. அப்பன் மரிக்கப் போனது கூட ஏழெட்டு மாசம் கழிஞ்சதென் நான் அறிஞ்சேன். இன்னி வந்து என்ன செய்யேதுக் குன்னுதான் நான் அப்ப வரலை. நீ நினைக்கியேது போல இல்லம்மா. எனக்கு அவிய என்னைச் செல்லம் போல வெச்சிருக்கணும். ஒரு குறை இல்லை. அம்மா என்னை நீ என்ன வேணாங்கிலும் பறை. அடி. ஆனா இப்ப எனக்கு நீ வேணும். அப்படி பாக்காதம்மா.. ஆறு வருசமா எனக்கு உன்னோட துணை வேணும்னு தோணல்லெ... இப்ப தோணுது. நீ எனக்கு வேணும் அம்மா.'' பயமும் பதற்றமுமாய் ஏக மூச்சில் செல்வராணி பேசி முடித்து விட்டு, பாவமாய் தாய் முகம் பார்த்தாள்.

குருவம்மாள் கையிலிருந்த குழந்தையை ரஞ்சிதத்திடம் தந்து விட்டு செல்வராணி அருகில் வந்தாள்.

என்ன செய்யப் போகிறாளோ...?

பிரமிப்போடு மகளை மேலும் கீழும் பார்த்த போது கோபம் வரவில்லை குருவம்மாளுக்கு. எங்கிருந்தோ ஓர் இரக்க ஊற்றுக் கிளம்பி வந்து வினாடியில் மனம் நனைவித்தது.

அப்படியே மகளை வாரியணைத்து அவள் மார்பில் சாய்ந்து அழ வேண்டும் போலிருந்தது. ஆனால் அதற்கும் வாய்ப்பில்லாமல் போயிற்று. செல்வராணி நிறைமாத கர்ப்பிணியாக இருந்தாள்.

''ஐயோ, அம்மா... கடவுளே... எங்களைக் காப்பாத்து!'' - ஓடிக் கொண்டிருக்கும் ஒரு பஸ்ஸிலிருந்த பயணிகள்தாம் இப்படிக் கூக்குரலிட்டார்கள்.

காரணம், பஸ்ஸை ஓட்டிக் கொண்டிருந்த டிரைவர், அப்படியே மயங்கி ஸ்டியரிங் மேல் விழுந்து விட்டார். அவரது கைகளும் கால்களும் வெட்டி வெட்டி இழுக்க ஆரம்பிக்க, வாயிலிருந்து நுரை தள்ள ஆரம்பித்து விட்டது.

அந்த பஸ்ஸோ, சுமார் நாற்பதடி உயரமுள்ள ரயில்வே மேம்பாலத்தின் மீது மெதுவாக ஏறிக் கொண்டிருந்தது. டிரைவரின் கண்ட்ரோலை முற்றிலுமாக இழந்து விட்ட நிலையில், பஸ் என்னவாகுமோ - எதிரில் வரும் வாகனங்களின் மீது முட்டிக் கொள்ளுமோ - மேம்பாலத்தின் மேலிருந்து கீழே உருண்டு விழுமோ என்கிற பயம், அத்தனை பயணிகள் மத்தியிலும்.

இந்த நிலையில்தான் பஸ்ஸின் பின் பக்க வழியில் ஓர் உருவம், ஓடும் பஸ்ஸிலிருந்து திடீரென்று குதித்தது. குதித்த வேகத்தில் நிலைதடுமாறி விழுந்தாலும் உடனடியாகச் சுதாரித்துக் கொண்டு எழுந்து, பஸ்ஸை முந்திக் கொண்டு ஓடி, டிரைவர் சீட் அருகிலுள்ள கதவைத் திறந்து ஏறி, கைகளால் பிரேக்கைப் பிடித்து அழுத்தியது. இன்னும் ஏழெட்டு அடிகள் நகர்ந்தா லும் மேம்பாலத்தின் மேலிருந்து பஸ் கீழே உருண்டு விழுந்து விடும் என்கிற நிலையில் பஸ் நின்றது. அத்தனை பயணிகள் மத்தியி லும், போய்க் கொண்டிருந்த உயிரைத் திரும்பப் பெற்ற மகிழ்ச்சி!

இது ஏதோ சினிமாவில் நடந்த காட்சி என்று யாரும் நினைத்து விட வேண்டாம். கடந்த ஆகஸ்ட் மாதம், களியக்காவிளையிலிருந்து நாகர்கோவில் வந்து கொண்டிருந்த நேசமணி போக்குவரத்துக் கழக பஸ் ஒன்றில் நடந்த உண்மைச் சம்பவம்தான்! ஆபத்துக்குள்ளாகவிருந்த அந்த பஸ்ஸை நிறுத்திய அந்த வீர இளைஞரும் அதே போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றும் ஒரு டிரைவர்தான். பெயர் : ராஜகோபால். அவரைச் சந்தித்தோம்.

''நான் எனது உறவினர் வீட்டுத் திருமணத்திற்குச் சென்று விட்டு அந்த பஸ்ஸில் ஏறினேன். சுமார் தொண்ணூறு பயணிகள் அளவுக்குப் பஸ்ஸில் ஏக கூட்டம். நானும் டிரைவர் என்பதால்,



✱ ராஜகோபால்

90 பேரை மரணத்திலிருந்து மீட்டவர்!

கண்டக்டர், பஸ்ஸின் பின்புறத்திலுள்ள தமது சீட்டை எனக்குக் கொடுத்திருந்தார். பஸ் நாகர்கோவில் அருகிலுள்ள பார்வதிபுரம் ரயில்வே மேம்பாலத்தின் மீது ஏறிக் கொண்டிருந்த போதுதான் முன்புறத்திலிருந்த பயணிகளின் கூக்குரல் கேட்டது.

''பஸ்ஸில் ஏக நெரிசல் என்பதால் பஸ்ஸுக்குள் நான் நகர முடியாத நிலை. டிரைவரின் கண்ட்ரோலை பஸ் முற்றிலும் இழந்து விட்டதால், எந்த நேரத்திலும் விபத்துக்குள்ளாகும் அபாயம்! எனவே, முதலில் எப்படியாவது பஸ்ஸை நிறுத்தியாக வேண்டும் என்கிற வேகம் எனக்குள். எப்படி நிறுத்துவது? வேறு வழியில்லாததால் கீழே குதித்து, விழுந்தாலும் பொருட்படுத்தாமல் பஸ்ஸைத் துரத்திக் கொண்டு ஓடினேன்.

''டிரைவரின் கண்ட்ரோலை பஸ் இழந்ததால் சுமார் இருபது கி.மீ. வேகத்துக்குள் தான் பஸ்ஸும் சென்றது. அதனால்தான் என்னால் பஸ்ஸை முந்திக் கொண்டு போய் டிரைவர் சீட் கதவைத் திறந்து பிரேக்கை அழுத்தி நிறுத்த முடிந்தது!'' என்கிறார் ராஜ கோபால்.

''சாதாரணமாக ஒரு மனிதன் ஆபத்தான நேரத்தில் முதலில் தன்னைக் காப்பாற்றிக் கொண்டால் போதும் என்றுதானே நினைப்பான். மற்றவர்களைக் காப்பாற்றப் போய் தானும் ஆபத்தில் சிக்கிக் கொள்ள மனம் வராதே?''

''பஸ்ஸை எப்படி நிறுத்துவது என்று தெரிந்த ஒரு டிரைவர் நான். எனக்குத் தெரிந்த ஒரு வித்தை, ஆபத்திலிருக்கும் மற்றவர்களைக் காப்பாற்றப் பயன்படாமல் போனால், அப்புறம் அந்த வித்தையால் என்ன பயன்? அது தெரிந்த என்னால்தான் மற்றவர்களுக்கு என்ன பயன்?'' என்று மிகவும் இயல்பாகச் சொல்கிறார் ராஜகோபால்.

இவரது இந்த வீரச் செயலைப் பாராட்டி, இளைஞர் சங்கம் ஒன்று நூறு ரூபாய் சன்மானம் அளித்துப் பாராட்டியிருக்கிறது. ஆனால், இதுவரை அந்தப் போக்குவரத்துக் கழகமோ அல்லது அரசாங்கமோ இவரைக் கண்டுகொண்டதாகவே தெரியவில்லை!

– பிரின்ஸ்

தகவல் தந்த வாசகர் :
எம். கிருஷ்ணமூர்த்தி

50. குலோத்துங்கனின் கனவு

எந்தனை தோல்விகள் ஏற்பட்டாலும் தளராத விடாமுயற்சியுடன் ஒரு காரியத்தைத் திட்டமிட்டு, புத்திக் கூர்மையுடன் செயல்படுத்தலாம். ஆனால் செயலின் பலன் கிடைக்க, ஆண்டவன் நிர்ணயித்திருக்கும் நேரம் வர வேண்டும். இந்த உண்மையை மார்த்தாண்டன் அன்று புரிந்து கொண்டான்.

எவ்வளவோ எச்சரிக்கையாக இருந்த அரையன் மதுராந்தகனாலும் காலிங்கராயனாலும் விக்கிரமனாலும் சாதிக்க இயலாததை, பாண்டிய மக்களின் அன்பு சாதித்து, பேரபாயத்திலிருந்து கார்குழலியைக் காத்தது.

வண்ண வண்ண மலர்களால் நேர்த்தியாகவும் கனமாகவும் மாலைகள் தொடுப்பதில் நிகரற்று விளங்கும் மதுரைக் கைவினைஞர்கள் அன்புடன் தொடுத்து, கார்குழலிக்கு அளித்த மலர் மாலைகள்தாம் அவள் உயிரைக் காத்தன.

இம்மி பிசகாமல் கார்குழலியை நோக்கி எய்யப்பட்ட அந்த விஷ அம்பு, கனமாகவும் அடர்த்தியாகவும் தொடுக்கப்பட்டிருந்த ஒரு மலர் மாலையில், அழகிற்காகத் தைக்கப்பட்டிருந்த வட்டத் தட்டில் பாய்ந்து, மலர்களை ஊடுருவி, மலர்களை இணைத்த முறுக்கேறிய வாழை நாரில் பாய்ந்து நின்றது. அம்பிலிருந்த விஷத்தை ஏற்றுக் கொண்ட மலர்கள் நிறம் மாறின.

அடுத்த கணத்தில் தேரின் உச்சிப் பகுதியிலிருந்த திரைச் சீலை விலகியது. கழுத்தில் அரையனின் நீண்ட வாள் பலமாக வெட்டியதால் குருதி கொட்டத் தள்ளாடிய படி நின்றிருந்தான் மார்த்தாண்டன். அவன் அங்கு தோன்றிய அதே வினாடியில் விக்கிரமன் எய்த அம்பும் காலிங்கராயனின் குறுவாளும் ஒரே சமயத்தில் பாய்ந்தன.



பாண்டியன் மகள்

முன்புறம் மடித்து சரிந்த மார்த்தாண்டன், தலைகுப்புறக் கவிழ்ந்து, நேராகக் கீழ்த்தட்டில் மோதி, தரையில் சுருண்டு விழுந்தான். அவனை நெருங்கி நிமிர்த்திய காலிங்கராயன், அவன் கச்சையில் செருகியிருந்த மற்றொரு அம்பும் அவன் விலாவிலேயே பாய்ந்திருப்பதைக் கண்டான்.

சுற்றியிருந்த மக்கள் கூட்டம் சிலையாகி நின்றது. கார்குழலி மயங்கிச்



சரிந்திருந்தாள். மாலையில் செருகி நின்ற அம்பைப் பிடுங்கிய விக்கிரமன், அதன் கூரிய முனையின் நிறத்தையும் பாய்ந்த இடத்திலிருந்த மலர்களின் நிறம் மாறியதையும் கவனித்து, அதில் கடுமையான விஷம் தோய்க்கப்பட்டிருப்பதைப் புரிந்து கொண்டான்.

குழப்பத்திலும் கூச்சலிலும் அலை மோதிய மக்கள் வெள்ளத்தைத் திறமையுடன் கட்டுப்படுத்திய காலிங்கராயன், ரதம் நேராக அரண்மனைக்குச் செல்லவும் பாதை அமைத்தான்.

ரதம் அரண்மனையை நோக்கிப் பறந்த சில வினாடிகளில் காலிங்கராயனை நோக்கி விரைந்து வந்த வீரனொருவன் அவனிடம் தாழ்ந்த குரலில் ஏதோ கூறினான். மார்த்தாண்டன் உடலை எடுத்துச் செல்ல உத்தரவிட்ட காலிங்கராயன், கோட்டையின் தென்புறத்து வாசலை நோக்கி விரைந்தான்.

அவன் தெற்கு வாயிலை அடைந்த போது, அங்கிருந்த காவலருக்கும் ஏற்கெனவே மார்த்தாண்டன் இட்டிருந்த உத்தரவின்படி அங்கு வந்து சேர்ந்திருந்த பாண்டிய வீரருக்கும் இடையே மோதல் ஏற்பட்டிருந்தது.

சோழர் படைத்தலைவன் சற்று முன் ஏற்பட்ட நிகழ்ச்சிகளால் நிதானத்தை

விஷ்வக்சேனன்

அருள்வாக்கு

நல்லதும் கெட்டதுமாகப் பலது நம்மை பாதிக்கிறது. அதனால் அழுகிறோம், சிரிக்கிறோம். இரண்டும் பாதிப்புத்தான். இரண்டுமே போதும் போலத்தான் இருக்கிறது. சிரித்தால் கூட ஓர் அளவுக்கு மேலே போனால் வயிற்றை வலிக்கிறது; பலஹீனமாகிறது. "சிரிப்பு மூட்டாதே!" என்று கோபித்துக் கொள்கிறோம். ஆனந்தமாக டான்ஸ் பண்ணினாலும் உடம்பு அசந்து போகிறது, போதும் என்றாகி விடுகிறது. ஒரு பாதிப்பும் இல்லாமல் விச்ராந்தியாக இருக்க மாட்டோமோ என்றுதான் இருக்கிறது. இது தான் நமக்கு வேண்டியது. அத்வைதமுமில்லை, த்வைதமும் இல்லை.

இதற்கு என்ன பண்ணலாம் என்று பார்க்கிறோம். பாதிப்பு எப்படிப் போகும் என்று ஆலோசித்துப் பார்த்தால் ஒன்று தெரிகிறது. பத்து வருஷம் முந்தி பிதா காலமான போது அத்தனை அழுத நம்மை இப்போது அது ஏன் பாதிக்கவில்லை என்று யோசித்துப் பார்த்தால், காலத்திலே தள்ளிப் போகப் போகப் பாதிப்பு குறைகிறது என்று தெரிகிறது. அதனால் நாம் பாதிப்பே இல்லாமலிருக்க வேண்டுமானால், இந்த க்ஷணத்தில் வருகிற நல்லது பொல்லாததுகளைப் பத்து வருஷத்துக்கு முந்தி நடந்த மாதிரிப் பார்க்க அப்யாஸம் செய்ய வேண்டும். எத்தனை ஸந்தோஷமும் துக்கமும் சாச்வதமாக இல்லாததால் எல்லாம் relative தான் (ஸ்வய சக்தி இல்லாமல், இன்னொன்றைச் சார்ந்திருப்பதுதான்) என்று தெரிந்து விட்டது. அதனால் இன்னொன்றைச் சேராமல் தன்னில் தானாக

இழந்திருந்தான் என்பதை முதல் வீச்சிலேயே அசுர வேகத்தில் சுழன்ற அவன் வாள் நிரூபிக்கத் தொடங்கியது. நான்கு புறங்களிலிருந்தும் குவியத் தொடங்கிய சோழ வீரர்கள் கூட அதுவரையில் எந்தக் களத்திலும் கண்டிராதபடி கன வேகமாக வாளைச் சுழற்றிய அவன் ஆவேசத்தையும் கோபத்தையும் சற்று அச்சத்துடனேயே பார்த்தனர்.

கடைசிப் பாண்டிய வீரனையும் வெட்டி மண்ணில் சாய்த்த காலிங்கராயன், இறுதியாக வாளை உறையிலிட்ட போது, முதல் ஜாமம் முடிந்திருந்தது. சிறைச் சாலையில் கலியனையும் மாறவர்மனையும் கதற அடித்து விட்டு, விஷயமறிந்து ஓடி வந்த ஸ்ரீவல்லபர், "ஆகா, ஆகா!" என்று காலிங்கராயனைச் சிலாகித்தபடி நின்றார்.

அரண்மனையில் பெரும் அமைதி நிலவியது. அபாயம் முற்றிலும் நீங்கி விட்டது என்பதை அறிந்தாலும் சோழ மன்னன் பலத்த சிந்தனையுடன் வேங்கையொன்று உலவுவதைப் போல் உலவிக் கொண்டிருந்தான்.

சற்றுத் தள்ளி நின்றிருந்த சேரலாதன் பாஸ்கரவர்மனின் சிவந்த முகம், இன்னும் சிவந்து கோவைப் பழம் போலிருந்தது. அத்தனை சினத்தில் அதுவரை அவனைக் கண்டிராத அவனது அமைச்சர் பேச வகையின்றி விழித்துக் கொண்டிருந்தார்.

அமைதியைக் கிழித்துக் கொண்டு ஸ்ரீவல்லபரின் வெண்கலக் குரல் ஒலித்தது :

"சேரலாதரே, மார்த்தாண்டனுடைய இந்தக் கொலை முயற்சியில் உமக்குப் பங்கேதுமில்லை என்கிறீரா?"

சேரலாதன் வீரம் சொட்டிய விழிகளை அவர் மீது திருப்பினான்.

"ஸ்ரீவல்லபரே, எதிரியை வெல்லச் சதியிலிறங்குவதோ, மறைந்து நின்று தாக்குவதோ சேரவம்சத்தில் என்றும் இருந்ததில்லை. போராயினும் சமாதானமாயினும் நேரிடையாகத் தெரிவிப்பதே எமக்கு வழக்கம்."

"அப்படியானால் மார்த்தாண்டன்..." என்று இழுத்த ஸ்ரீவல்லபரை இடைமறித்த சேரலாதன்,

"மார்த்தாண்டனுக்குப் போரில் உதவ நான் ஒப்புக் கொண்டது உண்மை. ஆனால் இந்தக் கொலை முயற்சி பற்றி நான் அறிந்திருக்கவில்லை. இதுபற்றி அவன் என்னிடம் பேசவுமில்லை" என்றான்.

"சேரலாதர் கூறுவது உண்மை" வாசலிலிருந்து ஒலித்த குரல் அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்தது.

ஜெயந்தன் பின்தொடர வந்து கொண்டிருந்த காலிங்கராயன், மன்னனை வணங்கி விட்டுக் கூறினான் :

"ஆம் மன்னவா. சேரலாதர் இந்தச் சதியில் சம்பந்தப்படவில்லை. ஆரம்ப முதல் இதைக் கண்காணித்த ஜெயந்தன் கூறுவதும் அதுதான்" என்றான்.

ஸ்ரீவல்லபர் சேரலாதனை நெருங்கி, அவன் கரங்களைப் பற்றிக் கொண்டார்.

"மன்னிக்க வேண்டும் சேர மன்னா. ஏற்கெனவே மார்த்தாண்டனுடன் உங்களுக்கிருந்த தொடர்பு எங்களை சந்தேகிக்கத் தூண்டியது."

"எம்மைப் பற்றிய தெளிவு மன்னருக்கு ஏற்பட்டால் போதுமானது" என்ற பாஸ்கரவர்மன், ஸ்ரீவல்லபரின் வேண்டுகோளின்



நிறைந்து (Absolute - ஆக) இருப்பதைப் பிடித்தால்தான் பல நினுவலான பாதிப்பு இல்லாமல் சாச்வத அநுபவமாக இருக்கும் என்று தெரிகிறது. இதுதான் spiritualityயில் (ஆத்மிகத்தில்) ஐன்ஸ்டீனின் Relativity Theory (சார்புக் கொள்கை). அவரும் Time, Space - ஐத்தானே சொல்கிறார்?

இந்த இரண்டிலிருந்து விடுபட வேண்டும் என்ற தாபம்தான் உபநிஷத்தின் உபதேச ஸாரம். எந்த அளவுக்குத் தாபப்பட்டு மீளுவதற்கு முயற்சி பண்ணுகிறோமோ, அந்த அளவுக்கு ஈச்வரப் பிரஸாதம் கிடைத்து, அந்த லக்ஷ்யத்துக்கு அழைத்துக் கொண்டு போகும்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

படி இன்னும் இரு தினங்கள் அங்கு தங்க ஒப்புக் கொண்டான்.

அரண்மனையில் மீண்டும் கண் விழித்த கார்குழலிக்கு நாம் இன்னும் உயிருடனிருக்கிறோமா இல்லையா என்ற சந்தேகமே தோன்றியது. பஞ்சணையின் எதிரே நின்றபடியே அவளை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த விக்கிரமனையும் அருகில் அதிர்ச்சியும் சோகமும் முகத்தில் வியர்வைத் துளிகளாய் வழிய அமர்ந்திருந்த மங்கையர்க் கரசியையும் புவனமகாதேவியையும் கண்ட பிறகே தான் இன்னும் உயிரோடிருப்பதை உணர்ந்து கொண்ட கார்குழலியின் அகன்ற விழிகள் நீரை உதிர்த்தன.

''கார்குழலி, கண்ணீர் விட வேண்டாம். அபாயம்தான் நீங்கி விட்டதே!'' என்றாள் புவனமகாதேவி.

''அபாயம் நீங்கி விட்டதா?'' பலவீனமான குரலில் கேட்டாள் கார்குழலி.

''ஆம் கார்குழலி. மார்த்தாண்டன் மடிந்து விட்டான். மாறவர்மனையும் மீண்டும் சிறையில் அடைத்தாகி விட்டது'' என்றான் விக்கிரமன்.

''என் மீது பாய்ந்த அம்பு?''

''பாண்டிய மக்களின் அன்பு உன்னைக் காத்தது, கார்குழலி. அவர்கள் ஆசையுடன் உனக்கிட்ட மலர் மாலைதான் ஆபத்திலிருந்து உன்னைக் காத்தது.''

உள்ளே நுழைந்து கொண்டிருந்த அரையன் மதுராந்தகனின் முகம் லேசாக வாடியிருந்தது. விக்கிரமனை நெருங்கி, அவன் கரங்களைப் பிடித்துக் கொண்ட அரையன்,

''மன்னிக்க வேண்டும் இளவரசே. மார்த்தாண்டன் இருந்த இடத்தை இன்னும் இரு வினாடிகளுக்கு முன் அறிந்திருந்தால் இந்த அபாயத்தைத் தடுத்திருப்பேன்'' என்றான்.

கார்குழலியிருந்த பக்கம் திரும்பிய அரையன், தலையை நன்றாகத் தாழ்த்தி வணங்கினான்.

''பாண்டிய மகாராணியும் என்னை மன்னிக்க வேண்டும்'' என்றான்.

கார்குழலியின் முகத்தை வெட்கம் சூழ்ந்து கொண்டது. அரையன் தன்னை அழைத்த விதமும் அவன் மன்னிப்புக் கேட்டதும் அவளுக்கு வெட்கத்துடன் கோபத்தையும் ஏற்படுத்தவே, ஏதும் கூறத் தோன்றாமல் தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

இறுக்கம் நிலவிய சூழ்நிலையை மாற்றவும் கார்குழலியின் சங்கடத்தை அதிகப்படுத்தவும் எண்ணிய விக்கிரமன்,

''பாண்டிய அரசி உன்னை மன்னிப்பதாக இல்லை மதுராந்தகா. நாளை அரசவையில் முதல் விசாரணையாக உன் வழக்கை விசாரித்துத் தீர்ப்பளிக்க எண்ணியிருக்கிறார் அரசி'' என்றான்.

''காத்திருக்கிறேன் இளவரசே! எந்த கைய கடுமையான தண்டனையையும் ஏற்கச் சித்தமாயிருக்கிறேன்'' என்றான் அரையன்.

''ஆம், கடுமையான தண்டனைதான். அதையும் அம்மங்கையை விட்டே நிறைவேற்றச் சொல்ல வேண்டியதுதான்'' என்ற கார்குழலி, முகத்தை இரு கரங்களாலும் பொத்திக் கொண்டு 'களுக்'கென்று சிரிக்க, அறையிலிருந்தவர்கள் முகங்களில் மலர்ச்சி பரவியது.

அடுத்த நாள் மதுரை அரண்மனையில் அவை கூடிய போது, அரியணையில் அமர்ந்து, விக்கிரமன் வீசிய முதல் கேள்வி,

அரையன் மதுராந்தகனை நோக்கிப் பாய்ந்தது.

மதுரை மன்னனாகச் 'சோழ பாண்டியன்' என்ற பட்டப் பெயருடன் திருநாராயண பட்டரால் முடிசூட்டப்பட்ட விக்கிரமன் அரியணையில் அமர்ந்திருக்க, அருகில் கார்குழலி சர்வாலங்கார பூஷிதையாக வீற்றிருந்தாள்.

தனியாகச் சிம்மாசனமொன்றில் அமர்ந்திருந்த மன்னன் குலோத்துங்கன் முகத்தில், மந்தகாசத்துடன் சிந்தனையும் படர்ந்திருந்தது.

காலிங்கராயனை அடுத்திருந்த இருக்கையில் அமர்ந்திருந்த ஸ்ரீவல்லபர் அன்று அதீத உற்சாகத்திலிருந்தார். அவர் உற்சாகத்தைப் பொறுத்துக் கொள்ள இயலாத சேரலாதனின் அமைச்சர், அவை எப்போது கலையும் தன் முதுகுக்கு ஒத்தடம் கொடுத்துக் கொள்ளலாம் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தார். சேரலாதன் அவர் தர்ம சங்கடத்தை ரசித்துக் கொண்டிருந்தான்.



"உங்க படத்தோட முடிவு எனக்கு ரொம்ப அதிர்ச்சியாயிருந்தது!"

"எனக்கும்தான், இப்படி ஃபெயிலியராகித் தொலைக்கும்னு நானும் எதிர் பார்க்கலை!"

– வேதபுரி எஸ். ரமேஷ்

"மதுராந்தகரே! இந்த சதியைப் பற்றி நீர் அறிந்ததை அவை முன்பாகக் கூறுங்கள்" என்ற விக்கிரமனை எழுந்து வணங்கிய அரையன், மலைக் கணவாயில் தன்னிடமிருந்து மார்த்தாண்டன் தப்பியதையும் தான் அவனைத் தொடர்ந்து சென்றதையும் மதுரைக்கு வந்து கலியன், ஜெயதேவன் முதலானவர்களுடன் சேர்ந்து, தெற்கு எல்லைப்புற வீட்டில் அவன் சதித் திட்டம் வகுத்தது வரை அனைத்தையும் விவரித்தான்.

அவன் விவரிக்க விவரிக்கத் தன்னைப் பொதிகைக் கூற்றத்திலிருந்து மீட்டதை விட அதிகமாகப் பல போராட்டங்களை அவன் சந்தித்திருப்பதைப் புரிந்து கொண்ட கார்குழலி, நெகிழ்ந்து போனாள். விக்கிரமன், தான் அரையனுக்கு மிகுந்த நன்றிக் கடன் பட்டிருப்பதையும் அதைத் தீர்க்கப் பொன் குவியலோ, ஏன் ஒரு சிற்றரசோ கூட ஈடாகாது என்பதையும் அவனை விரும்பும் அம்மங்கையை அவனுக்கு மணமுடித்து வைப்பது ஒன்றுதான் நன்றிக்கு ஈடாகத் தான் செய்யக் கூடிய காரியம் என்பதையும் புரிந்து கொண்டான்.

பாவலர்கள் வாழ்த்திசைக்க, மங்கையர் மங்கல கீதமிசைக்க அவை முடிந்தது. கொற்கைக்கும் மற்ற முக்கியமான கோட்டைகளுக்கும் தகுந்த உபதலைவர்களை நியமித்த விக்கிரமன், தனக்கு உதவியாக அரையனை மதுரையில் விட்டுச் செல்லுமாறு மன்னனைக் கேட்டுக் கொண்டான்.

குலோத்துங்கன் முகத்தில் முறுவலொன்று மலர்ந்தது. சோழ இளவலின் வேண்டுகோளுக்கு அப்போது ஏதும் பதில் கூறவில்லை மன்னன்.

மாலையில் சித்திர மண்டபத்திலமர்ந்து, அங்கு சித்திரங்களாகத் தீட்டப்பட்டிருந்த சரித்திர நிகழ்ச்சிகளை புவன மகாதேவிக்கு விவரித்துக் கொண்டிருந்தான் மன்னன். ஸ்ரீவல்லபரும் காலிங்கராயனும் உடன்வர, உள்ளே நுழைந்த விக்கிரமனைத் தலையசைத்து வரவேற்றான் மன்னன். ஸ்ரீவல்லபரின் வெண்கலக் குரல் அவர்கள் வந்த நோக்கத்தை அறிவித்தது.

"மன்னவா, இளவரசருக்கு உதவியாகத் தாங்கள் என்னை மதுரையிலிருக்கப் பணித்தீர்கள். ஆனால் இளவரசரோ, மதுராந்தகன் இருப்பதையே அதிகம் விரும்புவதாகத் தெரிகிறது."

"ஸ்ரீவல்லபரே, இந்த சித்திரங்களைப் பார்த்தீரா?" - தாம் கேட்டதற்குப் பதிலளிக்காது சித்திரங்களைப் பற்றிப் பேச முற்பட்ட மன்னனைச் சற்றுக் குழப்பத்துடனே நோக்கிய ஸ்ரீவல்லபர், "பார்த்தேன் மன்னவா... ஆனால்..." என்று இழுத்தார்.

"சேரனின் உதவியோடும் ஈழத்தின் உதவியோடும் பராந்தக சோழரின் காலமுதலே பாண்டியர் நம்முடன் போராடி வந்துள்ள நிகழ்ச்சிகள் இங்கு சித்திரங்களாகத் தீட்டப்பட்டுள்ளன" என்ற மன்னனின் முகத்தில் கனவுச் சாயை படர்ந்தது.

தொடர்ந்து மன்னன் தன் மனத்தில் புதைந்து கிடந்த எண்ணங்களையும் கனவையும் விவரிக்க ஆரம்பித்தான்.

அவன் விவரிக்க விவரிக்க, குலோத்துங்கன் வெறும் சாம்ராஜ்ஜியத்தை விஸ்தரிக்கப் போர்களை நடத்துபவனல்லன் என்பதையும், அவனது கனவுகள் நீண்ட காலத்துக்கு நாட்டில் அமைதியையும் சுபிட்சத்தையும் அளிக்க வல்லவை என்பதையும் போர்களைத் தவிர்ப்பதற்காகவே அரையன் மதுராந்தகனுக்கு அவன் பெரும் பொறுப்பை அளிக்க உத்தேசித்திருக்கிறான் என்பதையும் உணர்ந்து கொண்ட ஸ்ரீவல்லபரும் காலிங்கராயனும் பிரமித்து, நீண்ட நேரம் சிலையாக நின்றிருந்தனர்.

(தொடரும்)

• நல்ல வேலை • வெளிநாட்டு வேலைவாய்ப்பு



புத்தாண்டு பிறந்து விட்டது! உங்களது வளமான எதிர்காலம் பற்றித் திட்டமிட ஏற்ற தருணம் இதுவே!

உங்களது குறிக்கோள் எதுவாக வாக இருந்தாலும் அதை அடைய இன்றுமுதல் செயல் படத் துவங்குங்கள்.

நீங்கள் விரும்பும் முன்னேற்றத்தை அடைய ஆங்கில மொழியில் போதிய புலமையின்மை ஒரு தடையாக இருந்தால் அதைப் பற்றி இனி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை.

உங்களால் இத்தடையை எளிதில் அகற்றிவிட முடியும்.

ஆம்... விவேகானந்தா கல்வி நிலையம் அளித்து வரும் ஓர் எளிய பயிற்சியினை நீங்கள் மேற் கொண்டால் போதும்!

அடிப்படையிலிருந்து துவங்கி, ஆங்கில இலக்கணத்தைச் கலபமாகக் கற்றுக் கொண்டு, தவறாகப் பேசி விடுவோமோ என்ற தயக்கமின்றி ஆங்கிலத்தில் சகஜமாகப் பேசும் ஆற்றலை நீங்கள் நிச்சயம் பெற முடியும்.

வீட்டிலிருந்தபடியே, ஓய்வு நேரத்தில் தபால் மூலம் மேற்கொள்ளும் எளிய பயிற்சி முறை இது! பயிற்சிக்காக தினசரி அரைமணி நேரம் செல விட்டால் போதும்! இதுவரை இரண்டு லட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் மேற் பட்டவர்கள் இப்பயிற்சியின் மூலம் பயனடைந்துள்ளனர்.

ஆங்கிலத்தில் சரளமாகப்பேச வேண்டும், இலக்கணப் பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுத வேண்டும் என்ற உங்களது நீண்ட நாளைய விருப்பம் இப்புத்தாண்டில் நிச்சயம் நிறைவேறப் போகிறது.

இன்றே ஒரு போஸ்ட் கார்டில் உங்களது முகவரியைத் தெளிவாக எழுதி, கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புங்கள்.

பயிற்சி பற்றிய விபரங்களை உடனே உங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.

நேர்முகப் பயிற்சியும் உண்டு

விவேகானந்தா கல்வி நிலையம்

9, நடேசன் தெரு, தி.நகர்
சென்னை-600 017.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு • பதவி உயர்வு • உயர் படிப்பு •

• நல்ல வேலை • புதிய தொழில் முயற்சி

பதவி உயர்வு • புதிய தொழில் முயற்சி • வியாபார அபிவிருத்தி •

"குமரி மாவட்ட மக்களின் மனோநிலை மாறவேண்டும்!"

"விவசாயத்தை அடிப்படைத் தொழிலாகக் கொண்டது எங்கள் குமரி மாவட்டம். திருவிதாங்கூர் சமஸ்தானத்தோடு இருந்தது நாஞ்சில் நாடு. சி.பி. ராமசாமி அய்யர் திவானாக இருந்த போது 'எல்லோரும் கட்டாயம் கல்வி கற்க வேண்டும்' என்ற திட்டத்தை அமுல்படுத்தினார். இதன் விளைவாக, படிப்பு என்பது மக்களின் ரத்தத்தில் ஊறிய விஷயமாக மாறி விட்டது. ஆனால் காலப் போக்கில், படித்தவர்கள் அரசாங்க ஊழியர்களாகவும் ஆசிரியர்களாகவும் வேலை செய்ய விரும்பினார்களே தவிர, விவசாயத்தில் ஆர்வம் காட்டவில்லை. பணம் இருப்பவர்களுக்கு, 'தொழிற்சாலை நடத்தணும்; நாலு பேருக்கு வேலை கொடுக்கணும், அல்லது வியாபாரம் செய்யணும்' என்ற எண்ணமே வருவதில்லை. ஆனால், சுலபமாகப் பணத்தைப் பெருக்கிக் கொள்ள வழி பார்க்கிறார்கள். வட்டிக்குக் கடன் கொடுக்கிறார்கள்; ஹோட்டல், லாட்ஜ் என்று நடத்துகிறார்கள். இந்த மனப்பான்மை மாற வேண்டும் என்றுதான் எங்கள் மாவட்டத்தில் நடக்கும் கூட்டங்களில் பேசி வருகிறேன்!" என்கிறார் வனத்துறை அமைச்சர் லாரன்ஸ்.

மேடையில் பேசுவதோடு நிறுத்தி விடாமல், குமரியின் தொழில்வளம் பெருக சில திட்டங்களும் தீட்டப்பட்டுள்ளதை விவரிக்கிறார் :

"எங்கள் மாவட்டத்தில் உயர்ந்த ரக ரப்பர் கிடைக்கிறது. இதைப் பயன்படுத்தி, ஒரு பிரிட்டிஷ் கம்பெனியுடன் உடன்பாடு கொண்டு, 400 கோடி செலவில் கூட்டுத் துறையில் டயர் தொழிற்சாலை ஒன்றைத் தோவாளை அருகில் துவங்க, புரட்சித் தலைவி அனுமதியளித்துள்ளார். பூர்வாங்க வேலைகள் நடந்து கொண்டு இருக்கின்றன. வனத் துறையால் நடத்தப்படும் அரசு ரப்பர் கழகமும் நஷ்டத்திலிருந்து மீண்டு கொண்டு இருக்கிறது! தனியார் துறையில் சர்க்கரை ஆலை ஒன்றும் வர இருக்கிறது. இது தவிர, தொழில் முனைவோருக்கு எங்கள் அரசு கொடுக்கும் ஊக்கம் காரணமாகப் பலர் ஆர்வமுடன் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்" என்கிறார்.



அமைச்சரின் அப்பா குருஸ்முத்து, காங்கிரஸ்காரர். நாஞ்சில் நாட்டைத் தமிழ் நாட்டோடு இணைப்பதற்காக நடந்த போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைசென்றவர். அந்தச் சமயத்தில் சில காலம் போலீஸிடம் பிடிபடாமல் தலைமறைவு வாழ்க்கை நடத்தியவர். "அந்தக் காலகட்டத்தில் எங்கள் குடும்பத்தில் தாண்டவமாடிய வறுமையில், பல வேளை பட்டினியோடு இருந்திருக்கிறோம்" என்று நினைவுகூர்கிறார் அமைச்சர்.

அமைச்சரின் சொந்த ஊர் மார்த்தாண்டம் அருகில் உள்ள சிறு கிராமம். ஆனால் குடும்பம் மார்த்தாண்டத்தில்தான் இருந்தது. அமைச்சர் பள்ளி, கல்லூரிப் படிப்பை மாவட்டத்திலேயே முடித்துக் கொண்டு, சென்னை சட்டக் கல்லூரியில் படித்து வழக்கறிஞரான பிறகு, பத்மநாபபுரத்தில் தொழில் நடத்தத் தொடங்கினார்.

அப்பாவின் அரசியல் தொடர்பு காரணமாக, இளமையிலேயே தமக்குள்ளும் அந்த உணர்வு கலந்து விட்டதாகச் சொல்கிறார்.

- அமைச்சர் லாரன்ஸ்

''ஒரு காங்கிரஸ்காரனாகவே என்னை வளர்க்க, அப்பா விரும்பியிருப்பார் என்று எண்ணுகிறேன். ஆனால் எனக்கொன்றும் அந்தக் கட்சி மீது அவ்வளவு பிடிப்பில்லை. குறிப்பாக, எமர்ஜென்ஸிக்கு பிறகு, காங்கிரஸ் மீது வெறுப்பு ஏற்பட்டது. கருணாநிதியையும் பிடிக்காது. ஆனால் எம்.ஜி.ஆர். மீது ஈடுபாடு. இந்தச் சூழ்நிலையில் 1982ல் திருச்செந்தூர்த் தொகுதி இடைத் தேர்தலில் பிரசாரம் செய்ய புரட்சித் தலைவி வந்திருந்தார். அவரது பேச்சுக்களால் கவரப்பட்டு, அவர் ஆதரவாளரானேன். 1991-ல் பத்மனாபபுரம் சட்டமன்றத் தொகுதியில் நிற்க வாய்ப்புக் கொடுத்தார்'' என்று தமது அரசியல் பிரவேசம் பற்றிக் கூறுகிறார் அமைச்சர்.

''நீங்கள் வனத்துறை அமைச்சரான பிறகு அந்தத் துறைக்காக என்ன செய்துள்ளீர்கள்?''

''தமிழ்நாட்டில், காடுகளைச் சுற்றி 3,000 சிறு கிராமங்கள் இருக்கின்றன. அங்கிருக்கும் மக்கள் ஆடு, மாடு மேய்க்க காட்டுக்குப் போகிறார்கள். இது தவிர விறகுக்காக மரங்களை வெட்டுகிறார்கள். இதுபோன்ற செயல்களினாலும், கள்ளத்தனமாக மரங்கள் வெட்டப்படுவதாலும் காடுகளுக்கு ஆபத்து உண்டாகிறது. இந்த நிலையை மாற்ற மக்களுக்குக் காடுகளின் அவசியத்தை உணர்த்துவதை முக்கிய வேலையாக நாங்கள் நினைக்கிறோம். காடுகளுக்கும் கிராமங்களுக்கும் இடைப்பட்ட இடத்தில் மேய்ச்சல் நிலங்களை உருவாக்கும் பணியில் இறங்கியிருக்கிறோம். அதே போல் தடுப்பணைகள் (check dams) கட்டி, தண்ணீர் வசதி செய்து தருகிறோம். இப்போது சில மாவட்டங்களில் காடுகளைப் பற்றி நன்கு அறிந்த மலைவாழ் மக்களையே பாதுகாவலர்களாகவும் நியமித்துள்ளோம்.

''அழிந்து போகும் நிலையிலுள்ள வன விலங்குகளைக் காப்பதும் நமது கடமை. களக்காட்டில் சிங்கவால் குரங்கு, முண்டந்துறையில் புலிகள் ஆகியவைகளைப் பாதுகாத்து, எண்ணிக்கையை அதிகப்படுத்தியிருக்கிறோம். அழிந்து போன தாவர இனங்கள், மூலிகைகள் ஆகியவற்றைக் கண்டுபிடித்து மீண்டும் உருவாக்குகிறோம். இதற்காகவே தமிழக, கேரள, கர்நாடக அரசுகள் மூன்றும் இணைந்து கூடலூரில் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நடத்தி வருகின்றன. இதுபோன்ற பல திட்டங்களும் நல்ல முறையில் செயல்பட சிறந்த நிர்வாகம் தேவை. அதைக் கொடுப்பது தான் என்னுடைய முக்கியமான பணி!'' என்கிறார் அமைச்சர்.

சந்திப்பு : ப்ரியன்



''உலகத்திலேயே மிகவும் நடுநிலையான நாடுன்னு இந்தியா பேர் எடுத்திருப்பது ஏன்?''

''அது தன் சொந்த விவகாரங்களில் கூடத் தலையிடுவது இல்லையே, அதான்!''

ஆதாரம் : குஷ்வந்த் சிங் ஜோக்ஸ்

தகவல் : எஸ். முகம்மது யூசுப்


''இந்த ட. வியைப் பார்த்துப் பார்த்து நம்ம பசங்கள்ளாம் மக்கா ஆயிட்டாங்க!''

''நிச்சயமா அப்படி ஒண்ணும் இருக்காதுங்க!''

''எப்படி அவ்ளோ தீர்மானமா சொல்றே?''

''உங்க சின்ன வயசுல ட. வி. இருந்துச்சாக்கும்!''

- வெங்கட்



''உங்க வீட்டுக்குச் 'சமையல்காரன் தேவை'ன்னு விளம்பரம் கொடுத்ததுல அப்படி என்ன தப்பு நடந்து போச்சு?''

''நிறையப் பேர் தங்கள் ஜாதகத்தை அனுப்பிவிட்டு, என் பெண்ணோட ஜாதகம் கேட்டு எழுதி இருக்காங்க!''

- வி. சி. கிருஷ்ணரத்தினம்



மங்காவிளை — ஒரு மங்காத ஆச்சர்யம்!


✱ செல்லம்மாள்


✱ தங்கசாமி நாடார்

மங்காவிளையில் ஆயிரம் பேருக்கு மேல் வசித்தாலும் யாருமே உள்ளூரில் திருமணத்துக்குப் பெண் கொடுக்கவோ எடுக்கவோ செய்வதில்லை! காரணம், எல்லோரும் இங்கு சகோதர - சகோதரிகளாகப் பழகுவதே!

ஆச்சரியம்தான். ஆனால் உண்மையும் கூட!

''இந்தச் சகோதர உணர்வுக்கு, இங்குள்ள அனைவருமே ஒரே ஜாதிக்காரர்களாக இருப்பதுதான் காரணமோ?''

''இங்குள்ள அனைவரும் இந்து நாடார்கள் என்பது உண்மைதான். இருப்பினும் ஒரே ஜாதிக்காரர்களாக இருப்பவர்கள் வேறு எத்தனை ஊர்களில் அண்ணன், தம்பிகளாக வாழ்கிறார்கள்?'' என்று நம்மையே திருப்பிக் கேட்கிறார் அறுபத்தைந்து வயதான எம். சி. தங்கசாமி நாடார்.

''உங்கள் ஊரில் மட்டும் எப்படி வாழ்கிறீர்கள்?''

''இதற்கான ஆதி காரணம் என்னவென்று எனக்குத் தெரியாது. ஆனாலும் எனக்கு விவரம் தெரிந்த நாளிலிருந்தே இங்குள்ள அனைவரும் ஒருவரையொருவர் அண்ணன், தம்பி என்றோ தங்கச்சி என்றோதான் அழைத்து வருகிறோம்!'' என்கிறார் தங்கசாமி நாடார்.

''வழிவழியாக நெருங்கிய பங்காளிகளாக இருப்பவர்களும் இங்கு உண்டு என்றாலும் வெளியூர்களிலிருந்து இங்கே வந்து குடியேறியவர்களும் இருக்கிறார்கள். ஆயினும் இங்கே அனைவரும் அண்ணன், தம்பிகள்தான்!'' என்கிறார், பிஎச்.டி. முடித்து விட்டு, அதற்குப் பிறகும் ஆராய்ச்சிப் படிப்பைத் தொடர்ந்து கொண்டிருக்கும் ஐயப்பன்.

''இங்குள்ள எல்லா இளசுகளும் அண்ணன், தங்கைகளாக இருப்பதால், வயசுப் பெண்களை வைத்திருக்கும் எந்தத் தாயும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு இருப்பதில்லை!'' என்று கூறிச் சிரிக்கிறார் திருமதி செல்லம்மாள்.


✱ ராஜேந்திரன்

''எங்கள் கிராமத்திலுள்ளவர்கள் இந்தியா முழுவதிலும் பல்வேறு துறைகளில் வேலை பார்க்கச் சென்றிருப்பதால், எங்கள் அனைவருக்கும் தேசிய உணர்வும் அதிகமாகவே இருக்கிறது. உதாரணத்திற்கு எங்கள் பஞ்சாயத்தால் வைக்கப்பட்டுள்ள ஊரின் பெயர்ப் பலகையைச் சொல்லலாம். மற்ற ஊர்ப் பெயர்ப் பலகைகளிலெல்லாம், தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் மட்டும்தான் ஊரின் பெயரை எழுதி வைத்திருப்பார்கள். தமிழ்நாட்டிலேயே நாங்கள் மட்டும்தான் பஞ்சாயத்துச் செலவில் தமிழ் ஆங்கிலத்தோடு ஹிந்தியிலும் எங்கள் ஊரின் பெயரை எழுதி வைத் திருக்கிறோம்!'' என்கிறார் ராஜேந்திரன்.

மீண்டும் தலைப்புச் செய்தியுடன் நாம் விடைபெறுகிறோம்!

– எஸ்.ஐ.

தகவல் தந்த வாசகர் :
அருணன்


✱ ஐயப்பன்

22

சுகிதாவிற்கு ரங்காவின் அந்தப் போக்கு புரிபடவே இல்லை. எதற்குத் திடீரென அவளை வெறுப்பதாக அவன் சொல்ல வேண்டும்? எதற்கு அவளை அவன் வாழ்க்கையி லிருந்து விலகிக் கொள்ளச் சொல்லி கட்டளை மாதிரி கத்த வேண்டும்?

ரங்கா அவள் என்ன சொல்லப் போகிறாள் என்ப தைக் கூட எதிர்பார்க்காமல் விடு விடுவென நடந்து, சபரியில் அவன் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டான்.

அத்தனை பேர் நடுவிலும் ரங்கா அப்படிச் சொன்னது சுகி தாவை நொறுங்கிப் போகச் செய்தது. ஊதி வால் பிசிறு பிசிறாகப் பறக்கும் ஒரு பஞ்சுப் பொதி போல் அவள் தன்னை உணர்ந்தாள். அழுகை வந்தது. சாதாரண அழுகை இல்லை. இதயத்தில் உள்ள ஈரம் எல்லாம் கண்ணின் மூலமாகவே வடிந்து விடத் தீர் மானித்த மாதிரி ஓர் அழுகை.

அவள் அழுவது பார்த்துச் சுற்றி நின்ற வர்களுக்குப் பரிதாபமாக இருந்தது. நல்ல வேளை. இதுவே மாலை நேரமாய் இருந் திருந்தால், அத்தனை கஸ்டமர்களும் இருந் திருப்பார்கள். அங்கு நடந்த நிகழ்வுகளே சாப்பிட வந்திருப்பவர்களுக்கு முன்னிலை யில் நிகழ்ந்திருந்தால், சுகிதா நேராகக் கிழக்கு நோக்கி நடந்து கடலில் குதித்து உயிரை விட்டிருப்பாள்.

''அக்கா. அழாதேக்கா'' என்றான் துர் வாசன்.

''ஆமாங்க்கா. ரங்கா ஏதோ கோவத்தில சொன்னதையெல்லாம் பெரிசா எடுத்துக் காதேக்கா.''

''ஏய் சுகிதா. லவ்வுன்னா இதெல்லாம் இருக்குந்தான். ஊடல் இல்லாது போனா, அந்தக் காதலுக்கு ஒரு டேஸ்டே இருக்காது. அதென்னவோ புஸ்தகத்தில படிக்கறாப்பல சப்புனு இருக்கும். அழுகை, ஆத்திரம், கோவம் எல்லாம் சேர்ந்ததுதான் வாழ்க்கை. நீ அவனை போலீஸ்ல மாட்டி விட்டேன்னு அவனுக்கு ஓம்மேல கோவம் இருக்கும். அவன் சொன்னானேங்கறதுக்காக நீ இப்பப் போய்ட்டேன்னா ரெண்டு பேருக்குமே ஒட்டறது கஷ்டமாப் போய்டும். நாங்க இங்கயே இருக்கோம். நீ போய் அவனைச் சமாதானப்படுத்து. ஒரு தடவை நீதான் அவன் தாவாங்கட்டையைப் புடியேன்'' என்றாள் விஷம விசாலிப்பாட்டி.

அந்த நேரத்திலும் சுகிதாவிற்கு வெட்கமாக இருந்தது.

அவள் போலீசில் சொன்னது அவனுக் குக் கோபமாகத்தான் இருக்கும். எதற்கு போலீசில் சொன்னாள்? அவன் தப்புச் செய்து விட்டான் என்று தெரிந்ததால் தானே! எப்படியும் அவனில்லாமல் வாழ்க்கை இல்லை என்று தீர்மானித்தாகி விட்டது. நிச்சயம் அப்பாவிடம் சொல்லி, உலகிலேயே நல்ல வக்கீலாகப் பார்த்து எப் படியும் அவனை மீட்டுத்தானே இருப் பாள்? அவன் செய்கைக்கு உண்டான அநி யாயத்தை அவன் உணர வேண்டும் என்று அவள் செயலாற்றியது தப்பா? நினைத்தது எதுவும் செய்ய முடியாமல், ஒரு நான்கு சுவருக்குள் அடைபட்டிருக்கும் போது தான், அவனுடைய மனக்குரங்கு அவன் வசப்படும் என்று நினைத்தது தப்பா?

''போக்கா.. ப்ளீஸ். டேய், யாரும் உள்ள போகாதீங்கடா. நாம எல்லாரும் இங்கயே இருக்கப் போறோம். அக்கா மட்டும்தான் உள்ள போகணும். க்கா. போயேன். அதான் யாரும் வரலைன்னு சொல்றோம் இல்ல?''

''ரங்கா, இப்பக் கதவைத் தெறக்க லேன்னா நான் நிச்சயம் செத்துப் போய்டு வேன். இது சத்தியம்'' என்று சுகிதா கண்டிப் பும், உண்மையும் தொனிக்கக் கூறிய அந்த வாக்கியத்திற்கு உடனடியாய்ப் பலன் இருந் தது.

கதவு திறந்தது. ரங்கா நின்றிருந்தான். தலை கலைந்து, கண்கள் சிவந்து, மூக்குப் புடைத்து.

மை காட்! ரங்கா அழுதிருக்கிறான்.

சுகிதா உடனே உள்ளே நுழைந்து கத வைச் சாத்தினாள்.

''ரங்கா. ப்ளீஸ். என்னை மன்னிச் சிடுங்க ரங்கா. உங்களுக்கு எம்மேல கோபம்னா அடிங்க. சோவிங்கர் ஸ்பெ ஷல்னு சொல்லுங்க. நீரும், நெருப்பும்னு சொல்லுங்க. கோச்சிக்குங்க. என்ன தண்டனை வேணும்னாலும் கொடுங்க. என்னை லவ் பண்ணலேன்னு மாத்திரம் சொல்லிடாதீங்க.''



''ஆமா, லவ் பண்ற வங்கதான் கொலைகா ரன்னு போலீஸ்ல சொல் லுவாங்க.''

''ரங்கா. நான்தான் உங்களை ஜாமீன்ல எடுக் கறதுக்கு வந்தேன். அதுக் குள்ளதான் நீங்க இன்ஸ் பெக்டரை சரிக்கட்டிட் டீங்களே...''

''வாட் டு யூ மீன்?''

''ஒன்னுமில்ல.''

''பா த் தி ய ா? என்னைக் கொலைகா ரன்னு நீ இன்னும் நெனச் சிக்கிட்டிருக்கே. இன்ஸ் பெக்டருக்கு லஞ்சம் கொடுத்துட்டு நான் தப்பிச்சி வெளில வந்துட் டேன்னு நெனச்சிட் டிருக்கே. ஒரு கொலை யைப் பண்ணிட்டு, லஞ்சம் குடுத்து வெளில வர அளவுக்கு நம்ம நாடு இன்னும் அவ்வளவு மோசமாப் போயிடல கீதா!''

''நான் பாத்தேன்'' என்று மெல்ல முணு முணுக்கும் குரலில் சொன்னாள் கீதா.

''நீ பாக்காதது எவ்வளவோ இருக்கு. ஒங்கிட்ட சொல்ல வேணாம்னுதான் நெனச் சிருந்தேன். இப்பச் சொல்லிடறேன். நான் எதுவும் கள்ளக் கடத்தல் பண்ணலை. போதை மருந்து கடத்தலை. ஆக்சுவலா நான் போதை மருந்துக்கு எதிராச் செயல் படற க்ரூப்பைச் சேந்தவன்.''

''அப்படின்னா?''

''லே, நோ டு ட்ரக்ஸ்னு கேள்விப் பட்டதில்ல?''

''ஆமா!''

''நான் அந்த குரூப்பைச் சேர்ந்தவன்.''

''அப்படின்னா?''

''இந்தியால முன்னல்லாம் சைகலி டிக்ஸ் மாத்திரம் இருந்தது. மரிஜுவானா, ஹஷீஷ், எல்.எஸ்.டி. எல்லாம் அவ்வளவு பயங்கரமான போதை மருந்து இல்லன்னு நாம கொஞ்சம் அலட்டிக்காம இருந்துட் டோம். இப்ப இந்தியால நார்கோடிக்ஸ் அதிகமாயிடிச்சி. இந்த வகை போதை மருந்து உபயோகிக்கறவங்களால அதி லேர்ந்து மீள முடியாது. மார்ஃபின், ஹெரா யின், பிரவுன் ஷுகர் எல்லாம் உபயோகிச்சி அடிமையாயிறவங்க ரொம்பப் பரிதாபத் துக்கு உரியவங்க. அவங்க பாவம். தெரி யாம மாட்ற கேஸ்தான் நெறைய. இவங் களுக்கு மருந்து எப்படி கிடைக்குது? இந்த நார்கோடிக்ஸ் வகைங்களை விக்கறவங் களால. கடத்தறவங்களால. நான் இந்த மாதிரியான கடத்தல் ஆசாமிங்களை வெறுக்கறவன். எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் ரெண்டு பேரை நான் பிடிச்சிக் கொடுத் தேன். அவங்கள நார்கோடிக்ஸ் அண்ட் ட்ரக்ஸ் தடுப்புப் பிரிவின் கீழே உள்ள தள்ளிட்டு, இன்னும் எவ்வளவு பேரை புடிச்சிக் கொடுக்க முடியுமோ புடிச்சிக் குடுன்னு கவர்ன்மெண்ட் என்கிட்ட கேட் டுக்கிச்சி. அதனால நான் போதை மருந்து விக்கறவங்களையும், கடத்தறவங்களையும் பிடிச்சி அரசாங்கத்துக்கிட்ட ஒப்படைக்கி றேன். செத்துப் போனானே ஒரு ஆளு. அவ னும் அப்படித்தான். அவன் போதை மருந்து கடத்திட்டு வரான்னு எனக்கு எங்கிட்ட வர்ற கஸ்டமர்ஸ்ல ஒருத்தன்கிட்டேர்ந்து இன்ஃபர்மேஷன் வந்தது. போனேன். புடிச்

வைத்து!

சேன். மருந்துக் கடத்தலை அவன் மறுத் தான். அடிச்சேன். மாட்டிக்கிட்டோம்னு தெரிஞ்சவுடனே ஸயனைட் மாத்திரையைக் கடிச்சி சாப்ட்டு செத்துப் போய்ட்டான். போஸ்ட்மார்ட்டத்தில ஸயனைடாலதான் சாவுன்னு தெரிஞ்சி போச்சி. நான் வேற, அரசாங்கத்துக்குப் போதை மருந்துக் குற்றவாளிகளைப் புடிச்சிக் குடுக்க ஹெல்ப் பண்றவன்னு தெரிஞ்சதால நான் கொலை காரன் இல்லேன்னு என்னை ரிலீஸ் பண்ணிட்டாங்க. இன்னும் ஒனக்கு நம் பிக்கை வரலேன்னா இந்த லெட்டரைப் பாரு'' என்று ரங்கா, மேஜை மேல் இருந்த ஃபைலில் இருந்து ஒரு கடிதத்தை உருவி அவளிடம் நீட்டினான்.

அசோகச் சக்கர முத்திரையுடன் கூடிய கடிதம் அது.

அதைப் பார்த்து விட்டு, படித்து விட்டு கவிதா நெகிழ்ந்து போனாள். இப்படிப் பட்ட ஒரு மகத்தான ஆளைப் போயா சந் தேகப்பட்டேன்? கவிதா முட்டாளே, உன்னை எரியும் எண்ணெய் வாணலியில் தூக்கிப் போட. உன்னை இட்லி அண்டா வில் வேக வைக்க.

கவிதா அந்த லெட்டரை மறுபடி அந்த ஃபைலில் முன்பு இருந்த மாதிரியே வைத் தாள்.

''ஸாரி ரங்கா!''

''போதும் கவிதா. என்னால இனிமேல் தாங்க முடியாது.''

வாழ்க்கையில் அவ்வப்போது தோல்வி மனப்பான்மைக்கு அடிமையாகும் வாய்ப்பு உண்டாகக்கூடும். வெறுப்பு ஏற்பட்டு, இனி முயற்சி செய்வதில் பயனில்லை என்று எண்ணத் தோன்றும். ஒவ்வொருவரும் இந்த மாதிரி சந்தர்ப்பங்களைச் சந்தித்தாலும் எல்லோரும் வீழ்ந்து விடுவதில்லை. தோல்வி என்ற எண்ணத்தைத் தொலைப்பவர்கள் வெற்றி வீரர்கள்.

ரங்காவும் அப்படித்தான். தோல்வி மனப்பான்மையை அண்ட விடாதவன்.

ஆனால் இப்போது யாவற்றில் இருந் தும் விலகிக் கொள்ளத் தீர்மானித்திருந் தான். ஆடிய வரைக்கும் போதும் என்ற ஓர் எண்ணத்தை அவன் மனதில் மானேஜரின் பேச்சு உருவாக்கி இருந்தது.

இந்த சபரி, சபரிவாழ் மக்கள், கவிதா யாருமே, எதுவுமே அவனுக்குச் சொந்த மில்லை என்று அவனுக்குத் தோன்றியது. அதனால்தான் கவிதாவிடம் கூட அவன் முகம் கொடுத்துப் பேசத் தயாராயில்லை.

கவிதா அவனைப் பற்றித் திருப்பினாள்.

''எங்க என் மூஞ்சி பாத்துச் சொல் லுங்க?''

அவன் கண்கள் அவள் முகத்தைப் பார்க்க மறுத்தன.

கவிதா சட்டென்று அவனை இறுகக் கட்டிப் பிடித்தாள். அவன் உதடுகளில்...

ரங்கா உணர்ச்சி வசப்பட்டு அவளை இறுக்கினான். அவன் கைகள் அவள் முதுகை வருடிக் கொடுத்தன.

ஒரு முழு நிமிடத்திற்குப் பின் கவிதா விலகிய போது ரங்காவின் கண்களில் கண்ணீர். கவிதாவின் கண்களிலும் கண்ணீர்.

''இப்பப் பிடிச்சிருக்கா?'' என்றாள் கவிதா சிரிப்பும் கண்ணீருமாய். ''சாமி யாருக்கு என்னையும் கட்டிப் புடிக்கத் தோணுது இல்ல? இவர் என்னை வெறுக் கறாராம். நான் இவரை விட்டுப் போயிட ணுமாம். இருங்க. இருங்க. கல்யாணத்துக் கப்புறம் உங்களைக் கன்ட்ரோல் பண்ணக் கையில ஒரு குச்சிதான் எடுத்துக்கப் போறேன். உக்காரு. எழுந்துரு. படு.''

அவளுடைய சைகைகளும், செய்கை களும், அதீதமான முகபாவங்களும் ரங்கா விற்குச் சிரிப்பை வரவழைத்தன.

நாகர்கோயில் - கன்னியாகுமரி வாசகர் சந்திப்பு

அன்புள்ள நாகர்கோயில் - கன்னியாகுமரி வாசகரே,

உங்கள் உதவியோடு தயாரித்த இந்த இதழ் உங்களுக்கு மகிழ்ச்சியும் திருப்தியும் அளிக்கும் என நம்புகிறோம்.

வருகிற ஜனவரி 8 - ஆம் தேதி கோட்டார், D.V.D. ஹையர் செகண்டரி மற்றும் டிரெயினிங் பள்ளியில், மாலை ஐந்து மணிக்கு உங்கள் பகுதி கல்கி வாசகர்கள் வட்டம் கூடும். நீங்கள் அனைவரும் வந்து கலந்து கொண்டு, நிகழ்ச்சிகளைச் சிறப்புற நடத்தித் தர வேண்டும்.

'என்ன நிகழ்ச்சிகள்?' என்று கேட்பது புரிகிறது... உங்களுக்கென்றே எளிய போட்டிகளை ஏற்பாடு செய்து வருகிறோம்....

ஜனவரி எட்டாம் தேதி மாலை சந்திப்போமா...?

- ஆசிரியர்.

''சாமியார் சிரிச்சிட்டாரு. கௌம்புங்க!''

''எங்க?''

''மூச். கேள்வி கேக்கக் கூடாது. நான் கூட்டிட்டுப் போற எடத்துக்கெல்லாம் எங் கூடயே வரணும். எம் பின்னாடியே வரணும்.''

''வாலைப் பிடிச்சிக்கிட்டா?''

''யூ... யூ... போங்க. டிரஸ் நல்லாத் தான் இருக்கு. மூஞ்சி மாத்திரம் கழுவுங்க. அழுது வடியுது!''

''கழுவ மாட்டேன்!''

''ஏன்?''

''கவிதாவோட வாசனை இருக்கே?''

''கவிதாவே இருக்கேனே. கழுவிட்டு வாங்க. வேணுங்கற வரைக்கும் கவிதா வாசனையை மறுபடி தரேன்.'' கவிதா துள்ளிக் குதித்துக் கொண்டு தன் வெற்றியைப் பறை சாற்ற வெளியே ஓடினாள்.

ரங்காவும், அவனுமாய் அந்த எக்ஸிபிஷனில் நுழைந்தனர்.

''இந்த எக்ஸிபிஷனுக்கு வந்துதான் நான் ரங்கோலிப் பாட்டியைப் பாத்துட்டு ஓடனே திரும்பிட்டேன். பரிமளா இந்த எக்ஸிபிஷன்லதான் எனக்காக ஒரு பாத்திரம் கழுவுற மெஷின் பிரசன்டா வாங்கித் தரப் போறேன்னு சொன்னா. நம்ம கல்யாணத்துக்கு அப்புறம் நான்தான் உங்களுக்கு சமைச்சி போடப் போறேன். அதுக்காக நமக்கு என்னென்ன வேணுமோ அதெல்லாம் வாங்கப் போறேன்.''

''யூ மஸ்ட்பி க்ரேஸி.''

''இல்ல. நான் சந்தோஷமா இருக்கேன். இந்த சந்தோஷம் அப்படியே ஆணி அடிச்சா மாதிரி இருக்கணும்னு ஆசைப் படறேன்.''

ரங்காவிற்குப் பிடித்த ப்ளேட்கள் வாங்கினாள். கப் அண்ட் ஸாஸர் வாங்கினாள். ரங்காவிற்குப் பிடித்த ட்ரைஃப்ரூட்ஸ் பாக்கெட் வாங்கினாள். அவனை வற்புறுத்தி, அவனுக்குப் பிடித்த பாதாம்கீரை வாங்கி, அவன் துளித் துளியாகக் குடிப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். கிட்டத்தட்ட ஒரு வண்டிப் பொருளை வாங்கிச் சேர்த்து விட்டு, வீட்டுக்கு ஃபோன் போட்டு தங்கத்தைக் காரில் வரவழைத்து, வாங்கிய சாமான்களை எல்லாம் அவள் தலையில் கட்டினாள்.

தங்கம் ரங்காவைப் பார்க்க வெட்கப் பட்டாள். என்னவோ அவன்தான் அவளுக்கு மாமியார் போல ஓர் எண்ணம்.

''கவிதா! ஜோடிப் பொருத்தம் ரொம்ப நல்லா இருக்கு.''

''எனக்கு மொத நாளே தெரிஞ்சி போச்சி. ஒனக்கு இன்னிக்குத்தான் தெரிஞ்சதா?''

''இருந்தாலும் இன்னிக்கு என் கண்ணே பட்டுடும் போல இருக்கு. சீக்கிரம்

கல்யாணத்தை முடிச்சிட்டு விட்லயே ரெண்டு பேரும் இருங்க. வெளில எங்கயும் சேந்து சுத்த வேணாம்.''

''ஏன் தங்கம்!''

''திருஷ்டி படும்டி. சொன்னாப் புரியாது.''

''அதுக்கு ஏன் விட்லயே இருக்கணுங்கறே?''

''பின்ன, கல்யாணம் ஆயிட்டா வெளில ஏன் போப் போறே? ரூமுக்குள்ள போய்க் கதவைச் சாத்திக்க மாட்டே?''

''போ தங்கம்'' என்று அவளை வெட்கத்துடன் முதுகில் அறைந்தாள்.

தங்கம் சிரித்துக் கொண்டே போய் விட்டாள்.

''இப்ப எங்க?''

''சினிமா' என்றாள் சுநீதா.

ஏதோ ஓர் சினிமாவிற்குப் போனார்கள். மாலைக் காட்சி. பால்கனி. காலி தியேட்டர். சுநீதா படம் பார்க்கவே இல்லை. அவன் முகம் பார்த்துக் கொண்டிருந்தாள். நினைத்தாற்போல் அம்மா உயிருடன் இருந்த போது அவளுக்கு எப்படி மாப்பிள்ளை பார்க்க வேண்டும் என்று பேசியதைச் சொல்லி நெகிழ்ந்து போனாள். அவன் கைகளை நெறித்து நெறித்து, அவன் புன்முறுவலுடன் அதை ஏற்றுக் கொள்ள, அவளுக்குக் கை வலித்தது.

இரவு. சுநீதா படுக்கையில் அன்றைய தின நிகழ்ச்சிகளை வெட்கத்துடன் அசை போட்டு விட்டு, தலையணையைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, கனவுகளுடன் உறங்கினாள். அவளுடைய ராஜகுமாரன் அவளைக் குதிரை மேல் ஏற்றிக் கொண்டான். ராக்கெட்டில் கைவிரல் பற்றி ஏற்றி சந்திர மண்டலம் கூட்டிப் போனான்.

சந்திரனில் அவள் அவன் கைபற்றி, பூமியிலிருந்து பார்க்கும் முயல் எங்கே என்று தேடினாள்.

விடிந்து, அவள் பல் தேய்த்து, அறையிலிருந்து காப்பிக்காக வெளிப்பட்டாள்.

தங்கம் அழுது கொண்டிருந்தாள். அப்பா அழுது கொண்டிருந்தார். வியப்பாய் இருந்தது.

''என்ன தங்கம்?''

''........''

''என்னப்பா?''

தங்கம் அவளை இழுத்துக் கட்டியணைத்து 'ஓ'வென்று பெருங்குரலில் அழுதாள்.

''சுநீதா. நேத்து நைட் ஒரு விபத்தில சிக்கி, ரங்கா செத்துப் போய்ட்டான்மா'' என்றார் அப்பா அழுகையும், கேவலுமாய்.

(தொடரும்)

கல்கி

ஜனவரி 9 பொங்கல் மலர்


அதிக பக்கங்கள்;
அதே விலை!

குடும்ப உறவுகள் சிறப்பிதழ்

பிரச்னைகள் இல்லாத குடும்பம் ஏது? எனினும் அவை அன்புக்கும் பாசத்துக்கும் குறுக்கே நிற்கவிடலாமா? அனுபவ உண்மைகளை அலசி, ஆக்கபூர்வமான யோசனைகள் வழங்கும் இந்தச் சிறப்பிதழின் தயாரிப்பில் டாக்டர்களும் பங்கேற்கின்றனர்.

நம் உயிர்த் தோழன்

பட்டிக்காடு முதல் பட்டணம் வரை லட்சோப லட்சம் எளிய மக்களின் வாகனமாக விளங்கி, பல்வேறு விதங்களில் பயன் அளித்து வரும் சைக்கிள்கள் பற்றி ஒரு A to Z ரிப்போர்ட். சைக்கிள்களின் சரித்திரம், தயாரிப்பு, விற்பனை, பராமரிப்பு என்று மட்டுமின்றி, சினிமாவில் சைக்கிள்; ஓட்டக் கற்றுக் கொண்ட அனுபவம் என்று சகல அம்சங்களையும் சிரிப்புடன் சொல்லும் இலவச இணைப்பு.



வண்ணத்துப் பூச்சி வேட்டை

சுஜாதா எழுதும்
புதுமைத் தொடர்கதை
ஆரம்பம்!

ஒவ்வொரு வாரமும்
'திரில்'லான அனுபவம்!

கமலமன ராஜன்

எழுதும்

'ஓம்' என்று சொல்லுவோம்!

குமரன் குன்றம் என்ற திருத்தலத்திலிருந்து ஆரம்பமாகும் இந்த பக்தித் தொடர், உங்களை அபூர்வமான அழகிய கோயில்களுக்கு அழைத்துப் போய் அதிசயிக்க வைக்கிறது.



சக்கரவர்த்தித் திருமகன்

அடக்கத்தால் மறந்து கிடக்கும் தன் சக்தியை ஜாம்புவான் சொல்லத் தெரிந்து கொண்டு, ஹனுமான் ராம காரியத்தைச் செய்து முடிக்கச் சங்கற்பம் செய்து விட்டான். உடனே ஆவேசமாகத் தன் திட நிச்சயத்தையும் நம்பிக்கையையும் எடுத்துச் சொன்னான்.

''நீர் சொன்னபடியே ஆகுக. நான் குதித்துக் கிளம்பி ஆகாய மார்க்கமாகச் சென்று, லங்கையில் இறங்கி ஜானகியைக் காண்பேன். நீங்கள் சந்தேகப்பட வேண்டாம். நான் திரும்பும் வரையில் இவ்விடமிருங்கள். கடலைத் தாண்டுவதற்குப் பூமியை மிதித்துத் தாவ வேண்டும். அந்த மிதியைத் தாங்குவதற்குத் தகுந்த இடம் இந்த மலை'' என்று கூறி மகேந்திர மலையின் மீது ஏறினான்.

அங்கே தன் முழு பலமும் செலுத்திக் கொஞ்ச நேரம் காலால் தரையை மிதித்து நடந்து உலாவினான். அதுவே அந்த மலையிலிருந்த சகல பிராணிகளுக்கும் சங்கடமாகி விட்டது. மலையை விட்டு வெளியேறி விட்டன. மலைமேலிருந்து ஹனுமான் கடலைப் பார்த்தான். மனத்தை ஏகாக்கிரப்படுத்தி, லங்கைக்குச் செலுத்தினான்.

'ராவணன் எடுத்துப் போன சீதா தேவியைத் தேடிக் காண்பேன். ஆகாய மார்க்கம் சென்று இந்தக் கடலைத் தாண்டுவேன்' என்று மனத்தில் சங்கற்பம் செய்து சூரியனையும் இந்திரனையும் வாயுவையும் பிரம்மாவையும் பூத கணங்களையும் தியானித்து, நமஸ்கரித்தான். பிறகு கிழக்கு முகமாக நின்று தன் அவுரஸ பிதாவாகிய வாயு பகவானை மறுபடி தியானித்து அஞ்சலி செய்து விட்டுத் தன் உடலை இன்னும் பெருக்கிக் கொண்டு தெற்கு முகம் நோக்கினான்.


மலையைத் தன் கால்களால் மிதித்துக் கைகளால் அடித்தான். அப்படி அடித்ததால் மலையிலிருந்த மரங்களினின்றெல்லாம் புஷ்பம் உதிர்ந்து மலையெல்லாம் மலர் மயமாகி விட்டது. அவன் மலைமேல் நடந்ததால் அந்த அழுத்தத்தைத் தாங்க மாட்டாமல் யானையின் கன்னத்திலிருந்து மதம் பெருகுவதுபோல் மலையிலிருந்து நீர் ஊற்றெடுத்துப் பெருகிற்று. பல நிற தாதுக்கள் மலையினின்று கிளம்பித் தெறித்து விழுந்தன. குகைகளினின்று மிருகங்கள் கத்திக் கொண்டு வெளியே ஓடின. பாம்புகள் படமெடுத்துக் கொண்டு விஷம் கக்கிக் கொண்டு கற்களைக் கடித்தன. அதனின்று நெருப்புப் பொறிகள் பறந்தன.

மயிர் சிலிர்த்து நின்று, ஹனுமான் பெரும் கர்ஜனை செய்தான். வாலைத் தூக்கித் தரையையடித்து, உடலின் பின் பாகத்தைச் சுருக்கி, மூச்சையடக்கிக் கால்களை நன்றாக ஊன்றிக் காதுகளை மடக்கித் தன் பலத்தை விருத்தி செய்து கொண்டு, வெற்றி கர்ஜனை செய்து கிளம்பி, கருடனைப் போல் ஆகாய மார்க்கமாக ராம பாணத்தின் வேகத்தோடு சென்றான்.

அவன் தாவிச் சென்ற வேகத்தால் பல மரங்கள் வேரோடு பறிக்கப்பட்டு, அவன் கூடவே சென்றன. பிரயாணம் போகும் போது பந்துக்கள் கொஞ்ச தூரம் கூடச் செல்வது போல் அந்த மரங்கள் புஷ்பங்களை உதிர்த்துக் கொண்டே ஆஞ்சனேயன் கூட ஆகாயத்தில் சென்றன.

முன்காலத்தில் இந்திரனால் துரத்தித் தாக்கப்பட்ட மலைகள், சிறகு வெட்டப்பட்டுக் கடலில் விழுந்தது போல், வானர வீரனைத் தொடர்ந்து சென்ற மரங்கள் கடலில் ஒன்றன் பின் ஒன்றாக வீழ்ந்தன. பல நிறப் புஷ்பங்கள் சிதறி விழுந்த கடலானது, ஆகாயம் நட்சத்திரங்களுடன் ஜொலிப்பது போல் பொலிவடைந்து பிரகாசித்தது.

வான வீதியில் வேகமாகச் சென்ற ஹனுமானுடைய கைகள் ஐந்து தலை நாகம் போல் விளங்கின. ஆகாயத்தை விழுங்கிக் கொண்டே போவது போல் சென்றான். அவனது கண்கள், மலை



யில் காடு பற்றி எரிவது போல் ஜொலித்தன; சிவந்த மூக்கு, சந்தியா சூரியனைப் போல் பிரகாசித்தது. நீண்ட தூமகேதுவைப் போல் ஆகாயத்தில் விளங்கிற்று, ஹனுமானுடைய பெரும் வடிவம்.

செல்லும் வேகத்தால் காற்று கர்ஜித்தது. ஆஞ்சனேயனுடைய நிழலானது ஒரு கப்பல் போல் ஜலத்தின் மேல் அவன் கூடச் சென்றது. ஆகாயத்தில், ஒரு பெரிய மலை, சிறகுகள் கொண்டு பறப்பது போல் காணப்பட்டான். மேகங்களிடையில் மறைந்தும் தோன்றியும் சந்திரனைப் போல் பிரகாசித்தான். கந்தர்வர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். தேவ ரிஷிகள் ஆசீர்வதித்தார்கள். வால்மீகி பகவான் சித்திரித்திருக்கிற இந்த சமுத்திரம் தாண்டும் காட்சியைத் தற்கால ரீதியில் சொல்ல வேண்டுமானால், ஆகாயத்தில் கிளம்பி, மேகக் கூட்டத்தைக் கிழாக்கி, மேலே பறந்து, மிக வேகமாகக் கர்ஜித்துக் கொண்டு செல்லும் ஆகாய விமானத்தைப் போல் பறந்து சென்றான் என்றும் சொல்லலாம்.

சந்தர்ப்பத்துக் கேற்ற தைரியமும் அறிவும், ஆலோசனைச் சக்தியும் சிந்தனை வேகமும், நிகரற்ற சாமர்த்தியமும், நிறைவேற்றும் வினைத் திட்பமும் கொண்ட ஹனுமானுக்கு, வழியில் சில சோதனைகள் ஏற்பட்டன. அவற்றையெல்லாம் மிகத் திறமையாகச் சமாளித்துச் சென்றான்.

ஆகாயத்தில் சென்று கொண்டிருந்த சமயம், கடலில் மூழ்கி நின்ற ஒரு பெரிய பர்வதம் திடீரென்று மேலே வானளாவிக் கிளம்பிற்று. இதுவென்ன நடுவே வழி யடைக்கிறது என்று அதைத் தன் மார்பால் தாக்கினான். காற்றால் அடிக்கப்பட்ட மேகம் போல் அந்த மைனாக மலை அசைந்தது.

''அப்பனே! நான் மைனாக பர்வதம். சமுத்திரராஜன் சகரர்களுடைய குலத்தில் உதித்த ராமசந்திரனுக்கு உதவ வேண்டுமென்று என்னை ஏவினான். சகர குலத்தாலல்லவோ சமுத்திரம் விருத்தி அடைந்தது? அந்தத் தொடர்பைக் கவுரவித்து நீ என்மேல் கொஞ்ச நேரம் இறங்கி நின்று தங்கிப் போவாய். இளைப்பாறிச் சென்றாயானால் ராம காரியத்தை நன்கு முடிப்பாய். இந்திரன் மலைகளையெல்லாம் வஜ்ஜிராயுதத்தால் அடித்துத் துன்புறுத்திய காலத்தில் நான் பறந்து, சமுத்திரத்தில் மூழ்கி மறைந்து, உயிருடன் தப்பிப் பிழைத்து, இன்னும் உயிருடன் இருக்கிறேன். எனக்கு சரணம் தந்த சமுத்திரம் உனக்கு உதவும்படி ஏவியதனால் நான் வந்தேன். சமுத்திரத்துக்கும் சகரன் குலத்துக்கும் தொடர்பு உண்டல்லவா? உன் தந்தை வாயுவால் அல்லவோ நான் இந்திரனுடைய வஜ்ராயுதத்தினின்று தப்பிப் பறந்து கடலில் ஒளித்து கொள்ள முடிந்தது? விருந்தினனாய்க்

கொஞ்ச நேரம் இளைப்பாறிச் சென்றா யானால் எனக்கும் சமுத்திர ராஜனுக்கும் சந்தோஷமாக இருக்கும்'' என்று மைனாக மலை வருந்திற்று.

ஹனுமான், ''அப்பா! நான் நிற்க முடியாது. காலதாமதம் ஆகும். ராம காரியத்தில் நான் செய்திருக்கும் சங்கற்பம் இதற்கு இடம் தரவில்லை. நீ உபசரித்துச் சொன்ன மொழிகளே போதும், நான் மகிழ்ச்சியடைந்தேன்'' என்று வினயமாகச் சொல்லி மலையைக் கையால் பிரியமாகத் தடவிக் கொடுத்து விடை பெற்று அங்கே நிற்காமல் சென்றான்.

பிறகு செல்லும்போது வழியில் ஒரு பெரிய ராக்ஷஸ வடிவம், ''நீ என் வாய்க்குள் பிரவேசிப்பாய். வெகு காலமாக ஆகாரமின்றி உனக்காகவே காத்திருக்கிறேன்'' என்று பெரும் குகையைப் போல் வாயைத் திறந்தது.

''ராம காரியமாக நான் போய்க் கொண்டிருக்கிறேன். தடுக்காதே'' என்றான் ஹனுமான்.

''முடியாது. என் வாய்க்குள் புகுந்தே தீருவாய்'' என்றது அந்த ராக்ஷஸ உருவம்.

உடனே ஹனுமான் இன்னது செய்ய வேண்டுமென்று தீர்மானித்து, வரவரத் தன் தேகத்தை வளரச் செய்து கொண்டான். சுரஸை என்கிற நாக மாதாவானவள் பூண்ட அந்த அரக்க வடிவமும் வாயை அதற்குத் தகுந்தபடி பெரிதாகச் செய்து கொண்டே போயிற்று. இப்படி மிகப் பெரியதாக வாய் திறந்ததும் திடீர் என்று ஹனுமான் தன் தேகத்தை அணுவளவாகச் சிறிதாக்கிக் கொண்டு, அந்தப் பேய் வாய்க்குள் புகுந்து, அவள் உடலினின்று வெளிப்பட்டு விட்டு, மறுபடியும் தன் பெரிய உருவம் தரித்துக் கொண்டான்.

''உன் தீர்மானம் நிறைவேறி விட்டது, தாயே! உன் வாய்க்குள் நான் பிரவேசித்தாகி விட்டது. இனி உனக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை'' என்று ஹனுமான் சிரித்துக் கொண்டு சொன்னான்.

அதைக் கேட்ட அந்த நாகமாதாவும், ''உன் காரியம் வெற்றியுடன் முடியும். தேவர்கள் உன்னைச் சோதிக்கவே இந்த வடிவத்தை எடுத்து இதைச் செய்யச் சொல்லி நானும் செய்தேன். நீ போகும் ராம காரியம் நிச்சயமாக வெற்றி பெறும்'' என்று ஆசீர்வதித்து அனுப்பினாள்.

இந்தச் சோதனையுடன் ஹனுமானுடைய கஷ்டம் தீரவில்லை. ஆகாய மார்க்கமாக மிக வேகமாகச் சென்று கொண்டிருந்த போது, காரணம் ஏதும் தெரியாமல் தன் வேகம் தடைப்பட்டு எதிர்க் காற்றில் சிக்கிய கப்பல் போல் செல்ல முடியாமல் கஷ்டப்பட்டான். ஏதோ பெரும் சக்தி தன்னைப் பிடித்துக் கொண்டு இழுப்பதாக உணர்ந்தான்.

நான்கு பக்கமும் மேலும் கீழும் பார்த்தான். அப்போது காரணத்தைக் கண்டான். கடலில் ஒரு பெரும் பூதத்தைக் கண்டான். அது வானர வீரனுடைய நிழலைப் பிடித்து, அதன் மூலம் அவனுடைய வேகத்தைத் தடுத்து, அவனை இழுத்துக் கொண்டிருந்ததைக் கண்டான்.

''உனக்காகவே காத்திருக்கிறேன். வா! எனக்குப் பொறுக்க முடியாத பசி'' என்று சொல்லி, அந்த நிழல்பிடி பூதம் தன் வாயைப் பெருங் குகை போல் திறந்தது.

உடனே ஹனுமான் அந்த அரக்கியின் வாய்க்குள் புகுந்து, உள்ளே தன் நகங்களால் அவளுடைய உயிர் நிலைகளைக் கிழித்து விட்டு, வெளி வந்து விட்டான். பூதம் உயிரிழந்து கடலில் மூழ்கிற்று. கிரகணம் தீர்ந்த சந்திரன் போல் மறுபடியும் ஹனுமான் ஆகாயத்தில் விளங்கிச் சென்றான்.

இப்படிப் பல சோதனைகளைத் தாண்டித் தன் நுட்பமான அறிவு, தைரியம், பலம், திறமை இவற்றைக் கொண்டு வெற்றியுடன் கடலைத் தாண்டிப் பறந்து, வாழையும் தென்னையும் நிறைந்து விளங்கிய லங்கைக் கரைக்கு அருகே வந்து விட்டான். லங்கா தீவின் கடற்கரைச் சோலைகளையும் மலைகளையும் ஆறுகள் கடலில் சேரும் இடங்களையும் வனங்களையும் கண்டான்.

ராவணனுடைய தேசத்தின் வளத்தையும் அமராவதி நகரத்துக்குச் சமமான அழகையும் ஹனுமான் கண்டான்.


''போக வேண்டிய இடம் சேர்ந்து விட்டேன். இனி அரக்கர்களுக்கு நான் யார், எத்தகையவன் என்பது தெரியாதபடி சீதை இருக்குமிடத்தைத் தேட வேண்டும்'' என்று யோசித்துத் தன் விசுவ ரூபத்தைச் சுருக்கிக் கொண்டு, சாதாரண வடிவத்தோடு ஹனுமான் லங்கையில் ஒரு மலைமேல் இறங்கினான்.

(தொடரும்)

நீங்கள் கேட்டவை - தராசு

பிரதமரே சிரிக்கிற மாதிரி ஒரு ஜோக்?


அம்புலிமாமா கதை!


* அழுகிற மாதிரி...


* சூழ்ந்து இருந்தவர்!

● எஸ்.எஸ்.டி. ராஜன், சிறுதையூர்.

? "ஏழை எளியவர் பற்றி ஒன்றுமே தெரியாதவர்கள் பிரதமரைச் சூழ்ந்திருக்கிறார்கள்" என்று ரங்கராஜன் குமாரமங்கலம் கூறியிருப்பது குறித்து?

! நேற்று வரை இவரும் பிரதமரைச் சூழ்ந்து இருந்தவர் தான்!

● ச. ஈஸ்வரன், திருச்சி.

? ரங்கராஜன் குமாரமங்கலம் ராஜினாமாவை உடனே ஏற்றுக் கொண்டது சரியா?

! கேட்டுப் பெற்றபின் ஏற்றுக் கொள்ளாமல் இருப்பது எப்படி சாத்தியம்!

● ஆர். அப்துல் சலாம், திருச்சி.

? தேசிய முன்னணியின் தேர்தல் தோல்விக்குப் பொறுப்பேற்றுப் பதவி விலகுவதாக என்.டி.ஆர். அறிவித்தது பற்றி...?

! "நான் அழுகிற மாதிரி அழுகிறேன்; நீ சமாதானம் பண்ணுகிற மாதிரி சமாதானப் படுத்து!"

● மா. செந்தில்நாதன், மதுரை.

? திறமைமிக்க டைரக்டர் மணிரத்னம் ஒரு அம்புலிமாமா கதையை (திருடா, திருடா) படமாக எடுக்க இரண்டு கோடிக்கு மேல் செலவு செய்தது குறித்து...?

! அம்புலிமாமா கதைக்குத்தான் அவ்வளவு செலவாகும். யதார்த்தமான கலைப் படைப்பைக் குறைந்த செலவில் எடுத்து விடலாம்!

● அ. சண்முகசுந்தரம், சிட்லபாக்கம். ❑

? பல்கலைக் கழகங்களுக்கு கவர்னருக்குப் பதில் முதல்வரையே வேந்தராக நியமிக்கும் தமிழக அரசின் திட்டம்...?

! கல்வியில் அரசியல் புகக் கூடாது என்பதற்காகச் சிறந்த நெறிமுறைகள் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலிருந்தே இருந்து வந்தன. அதையெல்லாம் உடைத்து எறிந்தாகி விட்டது. நீங்கள் குறிப்பிடும் புதிய திட்டம் கடைசி கோடாலிப் பிளப்பு.

● கண். சிவகுமார், திருமருகல்.

? தலைவா! அன்புத் தெய்வமே! தெய்வத்தின் மறுபிறப்பே! ஜால்ரா என்பதன் அர்த்தம் என்ன?

! நீங்கள் நினைப்பது அல்ல. துதி பாடுதல் ஜால்ரா ஆகாது. நான் என்ன சொன்னாலும் 'ரொம்ப சரி' என்று ஜிங் சக் வைப்பதுதான் ஜால்ரா.

● எஸ். முகமது மீரான், சென்னை.

? நடிகர் சங்கத் தேர்தல் அரசியல் கட்சிகளின் தேர்தல் போல் ஆகி விட்டதே!

! நடிகர் சங்கத்தில் தேர்தல் முறையாக நடந்தது வரவேற்கப்பட வேண்டிய விஷயம். பல அரசியல் கட்சிகளில் தேர்தலே நடப்பதில்லையே! முக்கியமான விஷயம், தோற்றவர் வென்றவருக்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பும் அறிவுபூர்வமான விமர்சனமும் அளிக்க வேண்டும். இருதரப்பிலும் பகை உணர்வு இன்றி, நல்லெண்ணம் நிலவ வேண்டும். அரசியலில்தான் நடப்பதில்லை. நடிகர் சங்கத்திலாவது இப்படி நடந்தால் நல்லது. ராதாரவிக்கு வாழ்த்துக்கள்.

● பாலசுப்பிரமணியம், சென்னை.

? சுற்றுலா சென்ற மழலைகள் பஸ் மீது ரெயில் மோதிய நிகழ்ச்சி குறித்து?

! ஜஃபார் ஷெரீஃபின் ஆறுதல் மொழிக்கும் நஷ்டஈடு தொகைக்கும் அடங்கி விடாத பெரும் துயரம். காவலின்றி இருக்கும் எல்லா ரயில்வே கிராஸிங்குகள் பற்றியும் ஒரு அறிக்கை கேட்டுப் பெற்று, உடனடியாக ஜனத்தொகை கூடியுள்ள பகுதிகளில் காவலுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

● சிவராமசுப்பிரமணியன், தூத்துக்குடி.

? காங்கிரஸில் கோஷ்டிப்பூசல் எப்படி உள்ளது?

! தமிழ்நாட்டில்தானே? ரங்கராஜன் குமாரமங்கலம் ராஜினாமாவுக்குப் பிறகு நாளொரு சண்டையும் பொழுதொரு பூசலுமாக நன்கு வளர்ந்து வருகிறது. நாய் வாலையாவது, நிமிர்த்தவாவது?

● மா. பழனிசாமி, கோவை.

? ஈரோடு அரசு மருத்துவமனையில் 150 பேர்

வாழ்த்துக்கள்!



* மான்யங்கள் நீக்கம்



* ஆறுதல் போதாது!





● சிரிக்கிற மாதிரி...



● ...ஒரு ஜோக்!

ரத்ததானம் செய்ய முன்வர, "சேமிப்பு வசதி இல்லை" என்று கூறி, 22 பேரின் ரத்த தானத்தை மட்டும் பெற்றுக் கொண்டது பற்றி...?

! அந்த அதிகாரிகள் செய்தது புத்திசாலித் தனம். ஏதோ கண்துடைப்புக்காக எல்லாரிடமும் பெற்றுக் கொண்டிருந்தால் அத்தனை ரத்தமும் வீணாகித்தானே போகும்? வசதிகளைப் பெருக்க வேண்டியது அரசின் பொறுப்பு. சுகாதார அமைச்சர் கண்ணில் இந்தச் செய்தி பட்டால், அவர் நடவடிக்கை எடுத்தால், அத்தைக்கு மீசை முளைக்க சித்தப்பா ஆவார்!

● இரா. ரெங்கசாமி, வடுகப்பட்டி.

? இன்றைய அரசியல் ரொம்பத் தரம் தாழ்ந்து விட்டது என்பதற்கு ஓர் உதாரணம்?

! பதவி இழந்து சென்னை திரும்பிய ரங்கராஜன் குமாரமங்கலத்தை வரவேற்று ஒட்டப்பட்ட போஸ்டர்! அடுத்து, தேர்தல் தோல்விக்குக் கூட வரவேற்புப் போஸ்டர் ஒட்டப்பட வேண்டியதுதான் பாக்கி!

● எஸ்...ஜி..ஸி. அம்பத்தூர்.

? உணவுப் பொருள்கள் - காய்கறி உள்பட - விலை விஷம் போல் ஏறுகிறதே? மக்களின் வாழ்வு என்னாவது?

! என்ன ஸார் இதற்குள் புலம்ப ஆரம்பிச்சுட்டீங்க; உணவுப் பொருள்களுக்கு வழங்கப் பட்டு வரும் மான்யங்கள் முற்றிலும் நீக்கப் பட வேண்டும் என்று திட்டம் வைத்திருக்கிறாரே மத்திய நிதி அமைச்சர், அது நிறைவேறும் போது அழுவதற்குக் கொஞ்சம் கண்ணீர் பாக்கி வைச்சுக்குங்க. (அது சரி, உங்க பெயரைக் கொஞ்சம் தெளிவா எழுதக் கூடாதா? கிறுக்கலாக் கையெழுத்துப் போட்டா எப்படி?)

● எல். ஆர். விஜயகுமார், சென்னை.

? பஸ் கட்டண உயர்வைக் கண்டித்து மாணவர் போராட்டம் நடத்துவது பொறுப் புணர்ச்சியா? பொழுதுபோக்கா?

! கட்டண உயர்வை எதிர்த்துப் போராடுவதில் பொறுப்புணர்வு இருக்கலாம்; பஸ்களை உடைத்ததில் கொஞ்சமும் இல்லை. பஸ் கட்டண உயர்வு அரசுக்குப் பொழுது போக்கு அல்ல. கல்லூரிகள் மூடப்பட்டதில் பஸ்களைக் காப்பாற்றும் பொறுப்புணர்வு உள்ளது. இப்போது மாணவர்கள் கல்லூரிகளைத் திறக்கப் போராடுவது பொறுப் புணர்வா? பொழுதுபோக்கா? சொல்லுங்க பிய்கிறது!

● சி. மகேஷ், மதுரை.

? கர்ப்பமாக்கப்பட்ட காதலி, தமிழக முதல்வரின் தலையீட்டால் மனைவியாக்கப்பட்டதைப் படித்தீரா?

! நல்ல காரியம்.

● கே. என். பாலகிருஷ்ணன், கும்பகோணம்.

? தமிழகத்தில் புயலால் ஏற்பட்டுள்ள சேதங்களைக் கவனித்தீரா?

! கவனித்தேன்; வருந்தினேன். ஆனால் தமிழக அரசு மிகைப்படுத்திக் கேட்கின்ற கோடிகள் அளவுக்குச் சேதம் இல்லை. மிகைப்படுத்தும் போது நியாயமாகக் கிடைக்கக்கூடிய உதவியும் குறைந்து போகும் என்பதை முதல்வர் உணர்வது நலம்.

● முகதி. சுபா, குடுமியாமலை.

? சமீபத்தில் தங்களைச் சிறுமை கண்டு பொங்கச் செய்த விஷயம்?

! பாபர் மசூதி தகர்ப்பு தொடர்பான வழக்கில் பா.ஜ.க. தலைவர்கள் ஜாமீனில் வெளி வந்து நீதிமன்றத்தில் போராடலாம்; அல்லது ஜாமீன் மறுத்து சிறைபுகுந்தும் போராடலாம். அது அவர்கள் உரிமை. ஆனால் சிறை புகத் தீர்மானித்து விட்டு, ஹர்த்தால் நடத்தவும் நாடாளுமன்றம் நடக்க விடாமல் முட்டுக்கட்டை போடவும் கட்சிக்காரர்களைத் தூண்டுவது சிறுமையே. இது கண்டு பொங்காவிட்டாலும் வருந்தினேன்.

● ஜெயா சீனிவாசன், கீழப்பனையூர்.

? தனது மகளின் கர்ப்பத்தைக் கலைக்கக் கோரி வழக்குப் போட்ட தந்தை - இந்த வித்தியாச வழக்கு பற்றித் தராசின் அபிப்பிராயம்?

! கர்ப்பத்தைக் கலைக்க மறுத்தவர்கள் என் மதிப்பில் உயர்கிறார்கள்.

● எஸ். எஸ். பூங்கதிர், திருவெண்ணெய்நல்லூர்.

? நம் பிரதமரே வாய் விட்டுச் சிரிக்கிற மாதிரி ஒரு ஜோக்?

! பிரதமர் : ஹி...ஹி... எதுக்குங்க இந்தப் பொன்னாடையெல்லாம்...?

ஜெ : என்ன இப்படி கேட்டுட்டீங்க? அத்வானி ஜெயிச்சிருந்தா இதைவிடப் பெரிசா, ஜிலுஜிலுப்பா அவருக்குப் போர்த்தியிருக்க மாட்டேனா?

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
அ. சண்முகசுந்தரம்,
37, நேரு தெரு, சிட்லபாக்கம்,
சென்னை - 600 064.



ஜெய்குரு தேவ்

மகரிஷி ஆயுர்வேத மருத்துவமனை

மகரிஷி தோட்டம்
28, டாக்டர் குருசாமி தெரு,
சேத்துப்பட்டு, சென்னை – 600 031.
போன் : 6411862.

மூட்டு வலி (Rhymatoid Arthritis) முதுகெலும்பு பிடரி வலி (Spondylitis) உடல் ப்ருமன் (Obesity) மனநோய் (Mental disorder) தலைவலி (Migraine) மற்றும் வாத நோய்கள் (Nervous disorders) நீங்கவும் சாஸ்திரியமான ஆயுர்வேத முறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. நோய் வருமுன் காக்க பஞ்சகர்மா, காயகல்பம் போன்ற ஆயுர்வேத ரீதியில் அமைந்த நோய் அணுகா முறைகளுக்கும் மிக்க வசதிகளுடன் கூடிய "மகரிஷி ஆயுர்வேத மருத்துவமனை" செயல்பட்டு வருகிறது. மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெறும் வசதிகளும் உள்ளது. இந்த மருத்துவமனை மற்ற மருத்துவமனையிலிருந்து வேறுபட்டது. இதன் சிறப்பு அம்சங்கள் :

1. இயற்கை முறையில் மூலிகைகளை கொண்டு சிகிச்சை அளித்தல்.
2. ஆழ்நிலை தியானம், யோகாசனம், பிராணாயாமம், பயிற்சியின் மூலம் நோய் கடுமையை குறைத்தல்.
3. நோயாளியின் ஜாதகத்தை கணித்து கிரகபரிகாரம் செய்வது.
4. சாஸ்திரிய சங்கீதத்தின் மூலம் நோயின் தன்மையைக் குறைக்க அதற்குரிய ராகத்தை நோயாளிகளை கேட்கச் செய்வது.
5. அயல்நாடுகளில் எங்கள் ஆயுர்வேத மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. கோடிக்கணக்கான மேலை நாட்டவர்கள் "மகரிஷி ஆயுர்வேதத்தின்" சிறப்பை உணர்ந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். மேலை நாடுகளில் சிகிச்சை அளித்த சிறப்புமிக்க மருத்துவர்கள் நமது மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கின்றனர்.

மேலும் அற்புதமான முறையின் மூலம் நோய் நீங்க, நோய் வருமுன் தடுக்க, உருவாக்கப்பட்ட உங்கள் மருத்துவமனை யான "மகரிஷி ஆயுர்வேத மருத்துவ மனையை" அணுகுங்கள்.

வட்டமேஜை

பாரதிராஜாவே அப்படிச் சொல்லலாமா?



◆ 'அயோத்தியை வைத்தே ஆட்சியைப் பிடித்து விடலாம் என்ற பி.ஜே.பி.யின் எண்ணத்துக்கு, மக்கள் சரியான பாடம் கொடுத்து விட்டனர். இனி மக்களை ஏமாற்ற முடியாது' என்ற தலையங்கம், அரசியல் - மதவாதிகளுக்குச் சரியான சவுக்கடி.
கும்பகோணம், கே. ராஜ்குமார்.

◆ அண்ணா அறிவாலயம் தி.மு.க. வுக்குச் சொந்தமானது அல்ல; தி.மு.க. அறக்கட்டளைக்குச் சொந்தமானது. அதன் ஒரு பகுதியில்தான் தி.மு.க. அலுவலகம் இருந்து வருகிறது என அரசியல் சாணக்கியர் கலைஞர் கூறியது அறிவாலயத் தைப்பூட்ட(??) நினைப்பவர்களுக்கு செமை போடல்.
வேலூர், ப்ரியா.

◆ கலைஞர் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தலைவர் தேர்தலுக்கு நிற்காமல், தம் மகனையோ, மருமகனையோ நிறுத்தினாலும், அவர்கள் வெற்றி பெற்று தலைமை ஏற்கத் தடை ஏதும் இல்லை. காரணம், கலைஞர் கோட்டை லக்ஷ்மணன் கோடாக நினைக்கும் கலைஞர் பக்தர்கள் மட்டுமே இன்று தி.மு.க.வில் இருக்கிறார்கள். மற்றவர்கள் களையெடுக்கப்பட்டு விட்டார்கள். இந்த நிலையில் அவர் ஸ்டாலினைப் பற்றி பெருமிதப்பட்டுக் கொள்ளவும் செய்யலாம். கோபால்சாமியை இழித்துப் பேசவும் செய்யலாம். பச்சோந்தி மனோகரனை சேர்த்துக் கொண்டதில் நியாயம் கற்பிக்கவும் செய்யலாம்! ஏனென்றால், அவர் ஒரு பக்கா அரசியல்வாதி!
இராஜாக்காமங்கலம்,
கே. மணிகண்டன்.

◆ மந்திரக்கோல் மைனரை பச்சோந்தியாக்கிய துணிவு கல்கிக்கே உரியது! இதைவிடப் பொருத்தமாக வேறு கார்ட்டூன் அமையாது.
மதுரை - 9,
இரா. கல்யாணசுந்தரம்.

◆ பாராட்ட வேண்டியதைப் பாராட்டியும் குட்ட வேண்டிய இடத்தில் குட்டியும் எழுதப்பட்டுள்ள 'டி. சினிமா' விமர்சனத்தில் கல்கியின் முத்திரை பளிச்சிட்டது!
அரவக்குறிச்சிப்பட்டி,
எம். அசோக்ராஜா.

◆ பேட்டி என்றாலே ஒருவித செயற்கைத்தனத்துடன் பதிலளிப்பவர்கள் மத்தியில், உமது 'பிடுக்கிப்பிடி' கேள்விகளுக்கு, இயல்பாக சற்றும் அயராமல், அனாயாசமாகவும் அதே நேரத்தில் பொறுப்பாகவும் பதில் சொன்ன பாரதிராஜா பாராட்டப்பட வேண்டியவர்!
கட்டமராபாளையம்,
சி. கண்ணன்.

◆ பாரதிராஜாவின் பதில்கள் சில இடங்களில் சாதுர்யமாகவும் சில இடங்களில் வெறும் சமாளிப்புகளாகவும் மட்டுமே உள்ளன. 'விமர்சனம் என் வேலையல்ல'. 'அவர்களை மாற்றுவது அத்தனை சுலபம் சாத்தியமல்ல' - என்று ஒரு 'பாரதிராஜாவே' பதில் கூறலாமா?
திருவெண்ணெய்நல்லூர்,
வைத்யா.

◆ 'காதலிக்கிறது தப்பா சார்?' சாலமன் பாப்பையா பக்கம் படித்தேன். நல்ல பதில் தந்திருப்பார் எனப் படித்து ஏமாந்தேன். அவரது மாணவன் கேட்ட கேள்விக்கு விடை தெரியாமல் அவர் நடைபோட்டுக் கொண்டிருக்கிறார். அந்த மாணவனின் நிலையில் பதில் தெரியாமல் காதலில் சிக்குண்டு நானும் நடைபோட்டுக் கொண்டிருக்கிறேன். பதில் ஆண்டவனுக்கே தெரியும்! நல்ல பதிலைத் தராமல் பாப்பையா ஏமாற்றி விட்டார்.
தூத்துக்குடி,
எஸ். ராமசுப்பிரமணியன்.

◆ பா. ராகவனின் "உயிர்" சிறுகதை அருமை! ஒரு சோகமான விஷயத்தைச் சிரிக்கச் சிரிக்கத் தந்திருக்கிறாரே!
திருவண்ணாமலை(?)புரம்,
தி.க. பாலசுப்பிரமணியன்.

◆ ஒரு கிராமத்து ஏழை விவசாயி, இரத்தத்தைச் சிந்தி உழைத்துக் கொண்டு போகும் நெல், விளையாகும் போது எத்தனை சீர்கேடுகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. இருந்தும் அவர், மண்ணை நம்பி உழைக்கச் செல்கிறார். இந்தியா, கிராமத்தை நம்பி வாழ்கிறது என்று அன்று காந்தி சொன்னார். 'உழவன் கணக்கு' கதை இன்று சொல்கிறது.
கும்பகோணம்,
பவானி கிருஷ்ணா.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

நீங்கள் ''ஜீவன் சுரபி'' பாலிசியை எடுத்து உங்கள் குடும்பத்திற்கு ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் பாதுகாப்பை அளியுங்கள்



ஜீவன் சுரபி

அதிகரிக்கும் ஆயுள் பாதுகாப்புடன் குறுகிய கால இடைவெளிகளில் உங்களுக்கு கணிசமான தொகை கிடைக்கிறது.

இது பல்வேறு பயன்களை அளிக்கும் ஒரு புதிய இன்ஷ்யூரன்ஸ் பாலிசி திட்டமாகும்.

- ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் பாதுகாப்பை 50% லிருந்து 200% வரை உயர்த்துதல் (இது. ஆறு வருடங்கள் மற்றும் அதற்குமேல் எவ்வளவு காலம் வரை பாலிசி அமலில் இருந்ததைப் பொருத்ததாகும்).
- 15-வருட பாலிசிக்கு 12 வருடங்கள் கழிந்த பின்பு, 20-வருட பாலிசிக்கு 15 வருடங்கள் கழிந்த பின்பு மற்றும் 25-வருட பாலிசிக்கு 18 வருடங்கள் கழிந்த பின்பு யாதொரு ப்ரீமியம் தொகையை செலுத்த தேவையில்லை. இருப்பினும், இன்ஷ்யூரன்ஸ் பாதுகாப்பு பாலிசியின் முழுமையான காலம் வரை அமலில் இருக்கும்.
- பாலிசி தொகையைப் பெற நீங்கள் பாலிசி காலவரையின் இறுதி வரை காக்க வேண்டாம்.

கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு இத்தொகை நிர்ணயிக்கப்பட்ட இடை வெளிகளில் தவணை முறையில் உங்களுக்கு வந்து சேரும்.

	பாலிசிதாரருக்கு கொடுக்கப்படும் இன்ஷ்யூர் செய்யப்பட்ட தொகையின் %				
பாலிசியின் காலவரை	4 வருட இறுதியில்	8 வருட இறுதியில்	12 வருட இறுதியில்	15 வருட இறுதியில்	18 வருட இறுதியில்
15 வருடங்கள்	30%	30%	40%	–	–
20 வருடங்கள்	25%	25%	25%	25%	–
25 வருடங்கள்	20%	20%	20%	20%	20%

உயிருடன் இருக்கையில் கொடுக்கப்பட்ட தொகைகள், பாலிசிதாரர் இறந்த பின் அவருக்குரித்தான இன்ஷ்யூர் செய்யப்பட்ட தொகையிலிருந்து கழிக்கப்பட மாட்டாது.

ஆம். உண்மையில் இது ஒரு பல்வேறு பயன்தரும் இன்ஷ்யூரன்ஸ் திட்டமாகும்.


மேற்கொண்டு விவரங்களுக்கு உங்கள் அருகாமையிலுள்ள எல்ஐசி அலுவலகத்தையோ அல்லது எல்ஐசி முகவரையோ அணுகவும்.

இன்ஷ்யூர் செய்யுங்கள் பத்திரமாக இருங்கள்.

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

Radeus/LIC/63916-92-TAM

உங்கள் கனவின் நிறைவு அவன் கண்களில்
அவனது எதிர்காலம் உங்கள் கைகளில்



குழந்தைகள் பரிசு வளரும் நிதி.

உங்கள் அன்பைப் போலவே அது வளர்கிறது, வளர்கிறது, வளர்ந்து கொண்டே போகிறது.

நீங்கள் அவனது தேவை ஒவ்வொன்றையும் பார்த்து, பார்த்து பூர்த்தி செய்து, தினத்தின் ஒவ்வொரு நிமிடத்தையும் பாதுகாப்பாக உணரச் செய்கிறீர்கள். அவனது எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்க சிறந்த சமயமும் இதுதானே. உங்களின் இன்றைய சிறிது சிந்தனை உங்கள் கண்மணியின் வளமான எதிர்காலத்திற்கான பரிசாக மாறும். எப்படியா? இதோ நாங்கள் அளிக்கும் குழந்தைகள் பரிசு வளரும் நிதி. இதில் ஒரே முறையாக குறிப்பிட்ட தொகையை முதலீடு செய்யுங்கள் அல்லது ஆண்டுதோறும் சிறிது சிறிதாகவும் முதலீடு செய்யலாம். உங்கள் முதலீடும் வளர்ந்து கொண்டே வரும் உங்கள் கண்மணியின் வயது 21 ஆகும்வரை. அவன் லட்சாதிபதியாவதைக் காணலாம். இப்பரிசு எப்படி உபயோகமாகும் என்பதைக் காணுங்கள். உங்கள் கண்மணியின் மேல்படிப்பிற்கு அல்லது சொந்தமாக தொழில் தொடங்க உதவலாம் அல்லது அவன் சொந்தமாக வீடு வாங்கலாம். அவன் 18 வயதான பிறகு வருடத்திற்கு இரு முறை பணத்தை எடுக்கலாம், மீதமுள்ள முதலீடு 21 வயதாகும் வரை வளர்ந்து கொண்டே இருக்கும். குழந்தைகள் பரிசு வளரும் நிதி. ஒரு நாள் உங்கள் கண்மணி உங்களுக்கு நிச்சயமாக நன்றி செலுத்துவான்.

14% டிவிடெண்ட்.
3 வருடங்களுக்கு ஒருமுறை போனஸ்.

யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா
உங்கள் மேலான எதிர்காலத்திற்கென

எல்லா செக்யூரிட்டீஸ் முதலீடுகளும் மார்க்கெட் ரிஸ்க் கொண்டவையாகும். முதலீடு செய்வதற்கு முன் உங்கள் முதலீட்டு ஆலோசகர் அல்லது முகவரை கலந்தாலோசிக்கவும்.

மண்டல அலுவலகம்: 29, இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன்: 517101
கிளை அலுவலகங்கள்: ● கோயம்புத்தூர். போன்: 210399 ● சென்னை. போன்: 517101, 517190 ● மதுரை. போன்: 38186 ● திருச்சி. போன்: 33619.

Sista's UTI.131.93 TM C

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

''சொட்டு நீலத்துடன்''
வழங்கப்படும் இலவசப் பரிசுகள்
என்றுமே என்னைக் கவர்ந்தது இல்லை.



பொதுவாக ஒரு பொருளை நுகர்வோர் நிராகரிக்கும்போது, அதன்
தயாரிப்பாளர் தனது விற்பனைக்கு கைகொடுக்க, பயன்படுபவையே
இந்த இலவசப் பரிசுகள் :

ஆனால் 'உஜாலா'வின் சிறப்பே தனி

நமக்கு தேக்கரண்டி அளவுகள் தேவை யில்லை ?

உஜாலாவின் நான்கு ''துளிகளே'' போதும் ஒரு லிட்டர் நீருக்கு.

உபயோகிப்பவர்களுக்கு.

உஜாலாவின் ஒவ்வொரு துளியும் துணிகளில் நிரந்தரமான வெண்மையை உண்டாக்கி மனதில் நிறைந்த திருப்தியை தருகிறது. நீரில் எளிதாக கரைந்து துணிகளின் இழைகளில் உடனடியாக உறிஞ்சப்பட்டு இன்ஸ்டண்ட் ஆக்க்ஷன் மூலம் ஒரே சீராக பரவும் தன்மையை உடையது. உடைகளின் அழுக்கை நீக்கி துணிகளுக்கு பளபளப்பான வெண்மையை தருகின்றது. ORAL TOXICITY TEST சோதனை மற்றும் SKIN IRITATION TEST சோதனையில் சருமத்திற்கு எந்த கெடுதலையும் உண்டாக்காது என்று சான்றிதழ் பெற்றது உஜாலா. இது ஜோதி லேபரட்டரியின் ஒரு சிறந்த தயாரிப்பு ஆகும்.



JYOTHY LABORATORIES
Marketing Office:
44, Shivshakthi Ind. Estate, Marol,
Bombay-400 059.
Regd. Office: Sreekrishna Nagar
Bombay-400 066.

உஜாலா